மார்ச் 2017

ஒலிஅரசி
OLIARAZI
மாதாந்த குடும்பச்சஞ்சிகை

# ஒளிஅரசி

நல்லதொரு குடும்பம்

இதழ் 03
ஒளி 04


மங்கையரின் தோழி

பக்கங்கள் : 104 (72+12+12+VIII)

75/= மட்டுமே

“பசுமையான பணமோசடி” ஏமாறாதீர்கள்!

மிளிரும் ஆளுமைகள்









மனோவசிய இரகசியங்கள் (புதிய தொடர்)


top1 கம்பன் விழா



உரிமைகளுக்காக போராடுங்கள்...


Available Places
Kilinochchi - Velan Printers / Siva Pathippagam
Vavuniya - Kalaimagal Printers / Vanni Quick Printers
Batticaloa - Aathavan Printers / New Keen Printers
United Book Shop
Yatiyantota - Swarna Print
Matale - VJ Printers
Thalawakala - Geetha Press / Harani Printers
Umaiyal Printers
Trincomalee - Sun Printers / New Uthayan Printers
Paruththithurai - Jeevan Printers
Kaludawalai - Maaruthi Printers
Nuwara Eliya - Nuwara Eliya Printers
Apeksha Offset Printers
Laxmi Printers
Puttalam - Serendip Printers
Kandy - Vino Printers
Specialized In Wedding Cards
Wedding Cards : Print & Sale
CTP & Colour Separation
United Creation
51A, Negombo Road, Peliyagoda.
Tel : 0112 938 083, 0115 767 309
Mobile : 0777 347 452
Email : unitprintek@gmail.com

# நுழைவாயில்...






































## அரசியின் உதவிக்கரம் :-

### கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்

ஒளிஅரசியின் பெப்ரவரி மாத உதவிச்செயற்றிட்டத்தின் மூலம் நெடுங்கேணி சேனைப்புலவு உமையாள் வித்தியாலயத்தின் தரம் 5 மாணவியான ஆனந்தகுமார் அனுசியாவுக்கான உதவிப்பணம் பாடசாலை அதிபர் திரு. விமலராஜன் மற்றும் வவுனியா பிரதேச ஒளிஅரசி உத்தியோகத்தர் கமல் ஆகியோரால் மாணவியின் தாயாரிடம் கையளிக்கப்பட்டது. கடந்த யுத்தத்தில் விழுப்புண் அடைந்த இம்மாணவிக்கு இப்பண உதவியை உவந்தளித்த தர்மராஜா பவானி குடும்பத்தினருக்கு ஒளிஅரசி குழுமத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# தந்திரோபாய திட்டமிடல் வட்டம்







வாருங்கள், மறவாமல் குறிப்போம்

13 — 14 — 15 — 16 — 17 — 18 — 19

**இரண்டாம் வாரம்**

மார்ச்

08 - மகளிர் தினம்
15 - உலக நுகர்வோர் தினம்

20 — 21 — 22 — 23 — 24 — 25 — 26 — 27

**மூன்றாம் வாரம்**

மார்ச்

21 - உலக வன தினம்
22 - உலக நீர் தினம்

28 — 29 — 30 — 31 — 27 — 28


**நான்காம் வாரம்**

மார்ச்

23 உலக வானிலை ஆய்வு தினம்
27 உலக சினிமா தினம்

# வெற்றியின் இரகசியம்

மேலுள்ள வரைபடத்தின் படி ஒரு நிறுவனத்தையோ அல்லது குடும் பத்தையோ ஐந்து படிமுறைகளில் திட்டமிட்டு ஒவ்வொரு படிமுறைகளி லுமுள்ள செயற்பாடுகளை இயன்ற



வரை நேர்த் தியாகவும் வேகமா கவும் மேற்கொண்டால் வெற்றி உங்கள் கைகளில்...

ஆர்.ஜனதன் BBA

பிரதம ஆசிரியரின் பேனா முனையிலிருந்து

மாற்றத்தின் அடிப்படையாக இரு

# காலத்தின் தேவை






**அன்பான வாசகர்களே!!!**


**அரசியின் தோழியாய் மிளிரும் அத்தனை மகளிருக்கும் இனிமையான மகளிர்தின வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறாள் ஒளிஅரசி.**

மாணவர்கள் மீதான பெரும்பான்மையான ஆசிரியர்களின் மனப்போக்கு என்பது குறுகிய நீண்ட இடைவெளி கொண்டதாகவே தற்போது காணப்படுகின்றது. இச்செயற்பாடு நீட்சி பெறுவதானது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டே இவ்வாறானதொரு ஆசிரியர் கட்டுரையைப் பதிவிடுகின்றோம்.

**"Those who educate children well are more to be honored than they who produce them." – *Aristotle.***

**''பிள்ளைகளைப் பெற்றெடுப் போரைக்காட்டிலும் அவர்களுக்கு சிறந்த கல்வி அறிவூட்டுபவர்களே போற்றத்தக்கோர்'' ஆவார் எனக் கூறுகின்றார் அரிஸ்ரோட்டில்.**

ஆசிரியர் மாணவர் உறவு என்பது இந்த உலகில் முக்கியமான ஒன்றாகும். பெற்றோர்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்து செயற்படுபவர் ஆசிரியர் ஆவார். உதாரணமாக, ஒரு சிறந்த ஓவியனிடம் ஒரு வெள்ளைத்தாளையும் பென்சிலையும் வர்ணங்களையும் கொடுத்தால் அதை அவன் எப்படி கண்ணைக் கவரும் ஓவியமாக மாற்றுவானோ ↓




அதே போன்று தான் பல்வேறு வகைகளிலும் பல்வேறு குணங்களிலும் பாடசாலைக்கு வரும் மாணவர்களை, சமூகத்திற்கு பயன்தரும் நபராக மாற்றும் பின்புலமாக ஆசிரியர் இருக்கின்றார்.

வீடு, உறவுகள் தாண்டி ஒரு குழந்தைக்கான சமூக உறவை ஏற்படுத்தித்தருவது பள்ளிக் கூடங்கள்தான். குழந்தைகள் இங்கிருந்துதான் சமூகத்தின்பல்வேறு அம்சங்களைப் பார்க்கவும் பழகவும் கற்றுக்கொள்கிறார்கள். குழந்தைகளின் சிந்தனைத் திறன்கள் வளர்ச்சியடைய ஆசிரியரின் ஊக்குவிப்பு மிகவும் முக்கியமானது. வகுப்பறை நிகழ்வுகள் மிகவும் ஆரோக்கியமாக இருக்க, அறிவுசார்ந்தகருத்துகள்மாணவரிடம் சென்றடைய ஆசிரியரின் மனப்பான்மை மிகமுக்கியமானது.

ஆசிரியர் தாம் கற்றுணர்ந்த கருத்துக்களை மாணவர்களிடம் சாதாரண முறையில் கொண்டுசேர்ப்பதும், படைப்பூக்க முறையில் அக்கருத்தினைச்செம்மைப்படுத்தி மாணவர்களுக்கு ஏற்றமுறையில் ஏற்ற உத்திகளைப் பயன்படுத்தி பல தூண்டல்கள் நிறைந்ததாகக்கொண்டு சேர்ப்பதும் அந்தந்த ஆசிரியரின் சேவைத்திறன் மற்றும் மனத்தன்மை என்பவற்றைப் பொறுத்தது.

சமகாலத்தில் பெரும்பான்மையான ஆசிரியர்களின் செயற்பாடுகள் மாணவர்களின் கற்றலை மேலோங்கச் செய்வதாக இருக்கின்றதா என்பது மக்களிடையே பெரும் கேள்வியாக இருக்கிறது. கல்விசார் சமூகத்தினர் அனைவரும் மாற்றத்தை எதிர்பார்த்து ஏங்கிநிற்கின்றனர்.ஆகவே, மாற்றம் நிகழ வேண்டியது சில ஆசிரியரின் மனதில்தான்.

இன்றையகால நெருக்கடி ஆசிரியர்களின் மனதில் அழுத்தங்களை ஏற்படுத்துவது ஒருவகைக் காரணம் எனினும் தங்கள் கைகளில் தரப்பட்டிருப்பது எதிர்காலத்தூண்களின் வருங்காலம் என்பதுடன் எமது நாட்டைமேம்படுத்தும் சிந்தனைச் சக்திகளின் வடிவங்கள் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். மேலை நாட்டின் சட்டதிட்டங்கள் குறுகியகால நெருக்கடி மிக்கதாக தோன்றினாலும் நீண்டகாலப் போக்கில் பல்வேறுபட்டசாதனைகளுக்கும் கண்டு பிடிப்புகளுக்கும் வித்தியாசமான சிந்தனைகளுக்கும்அதுவேவழிகோலியிருக்கிறதுஎன்பதை அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரலாறுகளின் மூலம் நாமும் காணக்கூடியதாக உள்ளது.

ஆசிரியர் தன் பணிசார்ந்த திறன் மற்றும் திறமையை வளர்த்துக்கொள்ள தொழில் முறைபயிற்சிகளும் அதனைச்சார்ந்த செயற்திறனும் முக்கியம். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவர்நிலையிலிருந்து நாள் தோறும் தம்மை மேம்படுத்திக்கொள்ளுதல், மாணவர்களின் மனநிலைக்கேற்பதம்மை மாற்றிக்கொள்ளுதல், அவர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப அவர்களோடு இரண்டறக்கலத்தல் என்பன மாணவர்களின் கற்றலில் நல்லமுன்னேற்றத்தை ஏற்படுத்தும்.


ஆசிரியரின் தொழில்சார்ந்ததிறன்களில் பாடங்கள் மற்றும்படிப்புகள் திட்டமிடல், பாடத்தை நிர்வகித்தல், வளங்களை நிர்வகித்தல், கற்றலை மதிப்பிடுதல் எனபல இருந்தாலும், அதில்மாணவர்களை புரிந்துகொள்ளுதல் என்பதுமிகவும் முக்கியமானதாகும். மாணவர்களை புரிந்துகொள்ளாத நிலையில்தான் சில ஆசிரியர்களை சமுதாயம் போற்றமறுக்கிறது. வெறுமனே புத்தககல்வியை மட்டும் ஊட்டுவதைதவிர்த்து பல்துறை அறிவைவளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுப்பதுடன் சிறந்த புத்தகங்களை வாசிப்பதன் அனு கூலங்களையும் விளக்கிகூறுதல்வேண்டும்.

ஆசிரியரிடம் நல்ல உறவைப்பேணும் மாணவர், பாடம் சம்பந்தமான பிரச்சினைகள் மட்டுமன்றி சில தனிப்பட்ட பிரச்சினைகளையும் பகிர்ந்து அதற்கான அக்கறையுள்ள ஆலோசனைகளையும்பெறமுனைவர். உண்மையில் மாணவர்களோடு இரண்டறக்கலக்கும் ஆசிரியர்கள் அம்மாணவர்களிற்கு பெற்றதாய் தந்தையரைக் காட்டிலும்ஒரு படி உயர்வாகவே தோன்றுவர். அன்பினால் ஆளுமை செய்யும் ஆசிரியப் பெருந்தகைகள் அகிலம் போற்றும்ஆசிரியர்கள் எனும் நாமத்தினை தமதாக்கிகொள்வர். இச் சிந்தனைகளில் இருந்து விலகி தமக்கு கிடைத்த வரத்தினை அலட்சிய நோக்குடன் பார்க்கும் ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் மாணவ சமூகத்திடம் இருந்து காலப்போக்கில் புறக்கணிக்கப்படுவர் என்பது நிதர்சனமாகும்.



பிரதம ஆசிரியர்
யசோதை சரவணபவன்

# தலைமுறை இடைவெளி



விசுவாசத்தின் மறு பெயர்
எம் மூத்த தலைமுறையினர்
ஆற்றலோடு அனுபவமும்
ஆளுமையும் பெற்றிருந்தனர்.

பாரம்பரியத்தைப் பேணி
அறநெறி வழுவாது
வாழ்வாங்கு வாழ்ந்து
முன்மாதிரியாய் திகழ்ந்து
புகழ் பூத்து நின்றனர்

இளந்தலைமுறையினரின்
கட்டுப் பாடற்ற வாழ்விற்காய்
கட்டிக் காத்த கௌரவமும்
பாரம்பரியமும் கட்டுக்கோப்பும்
காற்றில் பறக்கலாயிற்று.




மூத்த பிரஜைகள் பெரிசுகளாய்
மூலையில் முடக்கப்பட்டு
பாதுகாத்து வளர்த்தவர்கள்
பாதுகாப்புடன் முதியோர் இல்லங்களில்

இரத்தபந்தங்கள் இரக்கமற்றதாய்
அரக்ககுணம் கொண்டனர்
அரசியல் ஆளுக்கொரு
கட்சியாய் அம்மணமாயிற்று
ஆன்மீகம் பல பிரிவுகளாய்
அளவுக்கு அதிகமாயிற்று

ஆளுமைகள் அற்று போயின
அறிவற்றவர்கள் உச்ச பீடமேறினர்
கண்டதே காட்சியாய்
கொண்டதே கோலமாய்
இளைஞரும் இள நங்கைகளும்
நவீனம் என்ற பெயரில்
அரை நிர்வாணிகளாய்
முற்றும் துறந்தவன் கூட
முழுசாய் ஒருதரம் திரும்பிப் பார்ப்பான்


கலாசாரம் பண்பாடுகள்
கானல் நீராகின
தலைமுறை இடைவெளி
இன்னும் தள்ளிப் போகின்றது...

மலாய் கவி டிவங்சோ...





ஸஹீட். எச். சப்ரீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.



# அற்ப சுகங்களின் விளைவு

சிறுவர் தொழிலாளர்கள் என்ற விடயம் எமது நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என எமது அரசாங்கமும் அரசசார்பற்ற அமைப்புக்களும் கடும் முயற்சி எடுத்து வருகின்றன. எமது நாட்டின் தண்டனைச் சட்டக்கோவையில்கூட சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாக குறிப்பிடப்படுகிறது. நாடளாவிய ரீதியில் பல திட்டங்களும் அதற்கென பிரத்தியேகமாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சிறுவர் நல உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள் என பல அதிகாரிகள் இதற்கென செயற்படுகிறார்கள். அதுமட்டுமல்லாது இவர்களுடன் சேர்ந்து பொலிசாரும் செயற்படுகின்றனர். ஆனால் பல இடங்களில் இப்படிப்பட்ட சிறுவர் தொழிலாளர்களை சாதாரணமாகவே நாளுக்கு நாள் எம்மால் காண முடிகிறது. இதற்குக் காரணம் என்ன என சிந்தித்தால் அதற்கு பல புறங்களிலிருந்தும் பல பதில்கள் வெளிப்படும். சிலர் அச்சிறுவர்களை பொலிசிலே பிடித்துக் கொடுப்பதுண்டு, சிலர் அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்களை பொலிசிலே பிடித்துக் கொடுப்பார்கள். நானும் அப்படிப்பட்ட ஒருவனாய் இருக்கவில்லை.

be bold for change
மார்ச் 08

## உண்மைச்சம்பவம்

அன்று இரவு எட்டு மணியிருக்கும் கடற்கரையிலே நண்பரோடு உரையாடிக் கொண்டிருந்தேன். இடையிலே சிறுவனொருவன் வந்து 'கச்சான் (நிலக்கடலை) வேண்டுமா?' எனக்கேட்டான். கதைத்துக்கொண்டிருந்தபடி இயல்பாக வேண்டாமென்றுவிட்டு மீண்டும் அச்சிறுவனை அழைத்து அமரச்செய்து சற்று உரையாடினேன். பெயரென்ன, எங்கே படிக்கிறாய், உனது பெற்றோர் யார் என பல வினாக்களை அவன்மீது தொடுத்தேன். அவனும் அழகாய் சிரித்தபடி பதிலளித்தான். இரண்டு தங்கைகளும் இச்சிறுவனும் அம்மம்மாவிடம் வளர்கின்றனராம். தாயும் தந்தையும் வெளிநாடு சென்றுவிட்டனர். பிள்ளைகளுடைய செலவிற்கோ அவர்களைப் பராமரிக்கவோ பெற்றோர் பணம் அனுப்புவது மிகக் குறைவு. மூன்று பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்புவதற்காய் இந்த வயது முதிர்ந்த அம்மம்மா மிகவும் சிரமப்படுகிறாராம்.

இந்நிலையில்தான் இந்தச் சிறுவன் பாடசாலை விட்டுவந்ததும் தனது பாட்டி நிலக்கடலை வறுத்துக் கொடுக்க ஏனைய இரு தங்கைகளும் அதனை அளவாக பொலித்தீன் பையிலே போட்டுக்கொடுத்து விற்பனை செய்கிறார்கள். சரியாக 4 மணிக்கெல்லாம் வீட்டிலிருந்து தனது வியாபாரத்திற்காக புறப்பட்டு இரவு 9 மணிக்கு மீண்டும் வீட்டிற்கு வந்துவிடுவானாம் இச் சிறுவன். உடனே ''உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி?'' எனக்கேட்டதற்கு ''எல்லாமே எங்களுக்குத்தானே ஆகவே அம்மம்மாவிடம்தான் கொடுப்பேன்'' என பண்பாக பதில் கூறினான் அச்சிறுவன்.

பாடசாலையில் அவனது கல்விநிலை எப்படியோ தெரியாது ஆனால் கணக்குகள் பார்ப்பதிலும் நன்றாகப் பேசுவதிலும் சிறப்பாய் தென்பட்டான் அச்சிறுவன். என்ன சொல்வதென சிந்தித்த நான், ''உனது தொழிலோடு படிப்பையும் நன்றாக பார்த்துக்கொள், எதிர்காலத்தில் நன்றாகப்படிந்து சிறந்த நிலைக்கு வந்தால் உனது தங்கைமாரை நீ நன்றாக பார்த்துக்கொள்ளலாமே'' எனக்கூறி அவனை அங்கிருந்து அனுப்பினேன் (என்னால் முடிந்தது இவ்வளவுதான் என மனதுக்குள் கூறியபடி).

இச்சம்பவத்தில் நாம் ஆழமாக சிந்திப்பதற்கு எதுவுமே இல்லை. வெளிப்படையாகவே விளங்குகிறது எங்கு தவறுகள் இடம்பெறுகின்றன என்று. உண்மையிலேயே எந்தவொரு சிறுவனும் தனது ஆடம்பர செலவுகளுக்காகவோ பிழையான நடத்தைகளுக்காகவோ சிறுவயதில் தொழிலிலே ஈடுபடமாட்டான் என்பது அனைவருக்கும் தெரியும். அவர்களை தொழிலாளர்களாய் மாற்றுவது அவர்களது பெற்றோரும் குடும்பத்தினரும் சமூகமுமே. இதற்காய் உத்தியோகத்தர்களை நியமிப்பதிலோ அல்லது பொலிசாரைக்கொண்டு தண்டனை வழங்குவதிலோ எந்தவொரு பலனும் கிடையாது என்பது எனது கருத்து. மாறாக சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட சிறுவர்களைக் காணும்போது அவர்களின் நிலைமைகளை விசாரித்து தம்மால் முடிந்தளவிற்கு அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தர முயற்சிக்கவேண்டும்.

உங்களது பிள்ளைகளை வேலைக்கு அமர்த்த மாட்டீர்கள் என்பது திண்ணம், ஆனால் ஏனைய பிள்ளைகளை தொழிலாளர்களாய் காணுகின்றபொழுது கண்டிப்பாய் இச்சம்பவம் உங்களுடைய நினைவிற்கு வந்து அவர்களுடன் சிறந்த முறையில் அணுகி அவர்களுக்கு ஆறுதலாய் ஏதாவது செய்யுங்கள். அதுமட்டுமல்லாது உங்களது உறவினர்களோ அல்லது தெரிந்தவர்களோ இவ்வாறு சிறிய பிள்ளைகளை விட்டுவிட்டு வெளிநாடு செல்ல முயற்சித்தால் அதனை முடிந்தளவு தடுத்து நிறுத்துங்கள்.

அதற்கான மாற்றுத்தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சியுங்கள். அதையும் தாண்டி வெளிநாடு செல்லவேண்டி ஏற்பட்டால் அச்சிறுவர்களுக்குரிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் செலவு என்பவற்றை உறுதி செய்யுங்கள். சிறப்பான எதிர்காலத்தைக் கொண்ட சிறார்களை உங்களது அற்ப சுகங்களுக்காய் அநாதரவாக்காதீர்கள். அவர்களது உலகத்தை, அவர்கள் விரும்புவதைப்போன்றே அவர்களுக்கு வழங்குங்கள். உங்களுடைய திணிப்பில் அவர்களுடைய எதிர்காலமில்லை. அவர்களது விருப்பில்தான் உங்களது ஆசைகள் அமைய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.

# வானம் தூரமில்லை



அன்று சனிக்கிழமை, பாடசாலை விளையாட்டுப் போட்டிக்காக மைதானத்தில் பல நாட்களுக்குப் பிறகு ஒன்றாக சந்திக்கும் வாய்ப்பு பத்மினி, வதனா, சஞ்சனா மூவருக்கும் கிடைத்தது. இவ்வாறு எப்போதேனும் சந்திக்கும் போது தானே தமக்கு தெரிந்த விடயங்களைப் பற்றி அலசி ஆராயமுடிகிறது.

**பத்மினி** என்ன வதனா வெள்ளன வந்திட்டியோ?

**வதனா** இப்பதான் வந்தனான். பிள்ளை வேளைக்கு வாங்கோ அம்மா எண்டவள். எங்க வீட்டு வேலை முடிஞ்சாத்தானே வெளிக்கிடுறதுக்கு.

**பத்மினி** எங்க சஞ்சனாவை காணேல்லை. அவளின்ரை பிள்ளையும் விளையாட்டில் இருக்குத்தானே.

**வதனா** அங்க பார் வாறாள்.

**சஞ்சனா** என்ன அக்கா நீங்கள் ரெண்டு பேரும் வேளைக்கு வந்திட்டிங்கள். என்ர சின்னவனை சமாளிச்சிட்டு வாறதுக்கிடையில போதும் போதும் என்றாகிட்டுது.

**வதனா** இங்க பாரன் சீப் கெஸ்ட் ஆர் எண்டு?

**சஞ்சனா** அட எங்கட தேன்மொழி அக்கா.

**பத்மினி** பிள்ளை சொன்னவள் தான், நான் பெருசா காதிலை விழுத்தேல்லை. படிக்கிற காலத்தில கண்டது.

**வதனா** உவவுக்கு என்ன எங்கள மாதிரியோ அக்கா, கல்யாணம் குடும்பம் என்று இருக்கே, கூப்பிட்டோன்ன மினுக்கிக் கொண்டு வந்திடுவா, அதுவும் பிரபலமான லோயர் எல்லே. ஆம்பிளையளுக்கு நடுவில இருக்கிறன் எண்ட கூச்சமில்லமல் சரி நிகரா இருக்கிறா பாரன், உதெல்லாம் பதவி தந்த திமிர்.

**பத்மினி** ஏனடி வதனா உப்பிடி சொல்லுறாய்? அவளின்ர வாழ்க்கையை பற்றி உனக்குத் தெரியாதே, தனக்குப் பேசி வந்த கலியாணத்தை எல்லாம் வேண்டாம் என்று உதறிப்போட்டு தனக்கு கீழ இருந்த நாலு குமரையும் கரை சேர்க்க அவள் பட்ட பாடு உனக்குத் தெரியாதே.

**சஞ்சனா** ஓ அண்ணா சொன்னவர் தான். அவ படிக்கிற காலத்தில் தமையன் யாரோடயோ காதல் என்று போட்டாராம். அதுக்குப்பிறகு முழுப்பொறுப்பையும் அவதான் சுமந்தவாவாம்.

**வதனா** பொம்பிளைப்பிள்ளைகள் எண்டால் எங்கட சமூகம் பலதையும் சொல்லும்.

**பத்மினி** அப்படி சொல்லாதையடி. பிள்ளையளுக்கு நாங்கள் தான் சொல்லி வளக்கோணும். நாங்களே பொம்பிளை எண்டா இப்படித்தான் என்று நினைக்கிறம். அடுத்தவரைக் குற்றம் சொல்லி என்னத்தைக் காணுறது.

**சஞ்சனா** பத்மினி அக்கா சொல்றது சரி தான் நாங்களும் கொஞ்சத்திற்கு முதல் அப்பிடித்தானே சொன்னாங்கள். அவவும் படிச்சுத்தானே இந்த நிலைக்கு வந்திருக்கிறா.

**சஞ்சனா** ஓம் அக்கா நாங்களும் பிள்ளையளிட்ட ஆணும் பெண்ணும் ஆளுமையில் சமன் என்று சொல்லி வளக்கோணும். சீப்கெஸ்ட்டா வந்த தேன்மொழி அக்கா மாதிரி ஆளுமையாக பெண்கள் இருக்கோணும் என்று பிள்ளையளுக்கு சொல்லி வளர்த்தா வரும் காலத்தில் பெண்ணடிமைத்தனம் என்பது இல்லாமல் போய்விடும்.

**பத்மினி** சரி சரி வினோத உடைப்போட்டி தொடங்கப்போகுது வாங்கோ வெளிக்கிடுத்தப்போவம்.

மூவரும் பிள்ளைகளின் இல்லங்களினை நோக்கி நடந்தனர்.

ஜயிலா



விந்தை உலகம்


# ஹெலிகொப்ரர் வசதியுடன் அதிநவீன சொகுசு பஸ்

வரவேற்பு அறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை, வெந்நீர் நீச்சல் குளம் மற்றும் ஹெலிகாப்டர் வசதியுடன் அதிநவீன சொகுசு பஸ் தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் உள்ள லாஸ் வேகாஸ் நகரில் கடந்த 8ம் தேதி புதியரக மின்னணுப் பொருட்கள் மற்றும் வாகனங்களை அறிமுகப்படுத்தும் கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் இடம்பெற்ற அகஸ்டா நிறுவனத்தின் புதிய தயாரிப்பான ஆர்.வி. என்னும் அதிநவீன வசதிகளுடன் கூடிய சொகுசு பஸ் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

ரதம் போன்ற வடிவமைப்புடன் காட்சி அளிக்கும் இந்த பஸ்சுக்குள் வரவேற்பு அறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை உள்ளிட்ட ஒரு சொகுசு பங்களாவுக்கு தேவையான அனைத்து வசதிகளும், மிகச் சிறிய இடத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பஸ்சின் மேல்தளத்தில் வெந்நீர் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் மற்றும் ஹெலிகொப்ரர் நிறுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த ஹெலிகொப்ரரை கூடுதல் படுக்கை அறையாகவும் பயன்படுத்தி கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது



# சருகு மான்

இந்த உயிரினத்தின் தமிழ்ப் பெயர் 'சருகு' மான் என்னும் சொல், தமிழில் இரட்டைக்குளம்பிகளுக்கான பொதுச் சொல், அதனால் இந்த உயிரினம் மக்கள் வழக்கில் சருகுமான் எனப்பட்டது. இலைச்சருகுகள் இடையே மறைந்து வாழும் தன்மையைக் கொண்டிருப்பதால், இதற்குச் சருகு என்னும் பெயர் ஏற்பட்டதாக கருதப்படுகிறது.

இக்கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தாலும் உயிரினங்களுக்கு காரணப் பெயரைச் சூட்டுவது தமிழ் மரபன்று. ஒன்றிலிருந்து பிரிந்து, இயல்புநிலை திரிந்து பொய்யாக உள்ளவற்றைத் தான் சருகு' என்று அழைப்பது தமிழ் சொல் மரபு (இலைச்சருகு, வெங்காயச்சருகு என்பதைப் போல) மெல்லியதான, ஒடியக்கூடிய தன்மையைச் சுட்டவும் சருகு என்ற சொல் பயன்பட்டிருக்கிறது.

## நண்பி மாலினிக்கு

### எனது மனக்கவலை இறக்கி விடவும் மன உளைச்சலில் இருந்து விடுபடவும் இக் கடிதத்தை நானாகவே உனக்கு எழுதுகிறேன்

நான் வரதனை நீண்ட காலமாக காதலித்து வருகின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் எமக்கிடையில் எந்தப் பிரச்சனைகளும் வந்ததில்லை. அவரிடம் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய மனப்பாங்குகள் உண்டு. அது தான் அவரை நான் விரும்பவும் காரணமாக இருந்தது. இரு வீட்டார்க்கும் எம் காதல் விவகாரம் தெரியாது. அவர் வேலையில்லாப் பட்டதாரியாக இருக்கிறார். நானும் உயர்தரம் படித்து விட்டு வீட்டிலேயே இருக்கிறேன். அப்பாவும் ஓய்வு பெற்றுவிட்டார். சராசரி வருமானத்தில் குடும்பம் ஓடிக்கொண்டிருக்கிறது.

நான் அவரை மூன்று நாட்களுக்கு ஒரு முறை நேரில் சந்தித்துக் கதைப்பதுண்டு. அவர்தான் ஒருநாள், "உனக்கு வீட்டுக்காரர் திருமணம் பேசுகின்றனரா" என என்னைக் கேட்டார். அதற்குப் பிறகு தான் வீட்டுக்காரரை அவதானித்தேன். அவர் சொன்னது சரிதான். அயல் கிராமத்தை சேர்ந்த ஒருவரை புறோக்கர் மூலம் திருமணம் பேசி முடித்திருந்தனர். என்னுடன் அம்மா திருமண விடயம் பற்றி மனம்விட்டு கதைத்தார். அம்மாகதைக்கத் தொடங்கி இரண்டாவது நாள் நான் நேரடியாக எனது காதல் விவகாரத்தை கூறினேன்.

நான் படிக்கிற காலத்தில் இருந்தே விரும்புகிறேன். அவர் மிகவும் நல்லவர். படித்தவர் தொழில் நிச்சயம் கிடைக்கும். என்னை மிகவும் புரிந்து கொண்டவர். நான் கொஞ்சம் கோபக்காரி. அவர் பொறுமைசாலி எனக்கு அவரை மிகவும் பிடிச்சிருக்கு. நான் திருமணம் செய்தால் அவரைத்தான் செய்வேன். இல்லையேல் நான் மணம் முடிக்காமல் வெறுமையாக என் வாழ்வை கழிக்கவும் தயார் என கூறினேன். உனது முடிவில் மாற்றமில்லையா? அப்பா அறிந்தால் உன்னை கொன்று விடுவார். காதலை விட்டுவிட்டு நாங்கள் பேசிய பெடியனை கட்டி சந்தோசமாக வாழ சம்மதி. வீணாக நீ நினைத்தபடி கட்டி சீரழியாதை. என அம்மா கூறினார். நான் எனது முடிவை மாற்ற மாட்டேன் என உறுதியாக கூறினேன்.

எனது சொல்லை கவனத்தில் எடுக்காது எனது எண்ணத்திற்கு மதிப்பளிக்காது தாங்கள் பார்த்த பையனுக்கு நாள் குறித்து மண்டபம் ஓடர் குடுத்து திருமண அழைப்பிதழும் அடித்து ஊரவருக்கும் அழைப்பிதழ் கொடுத்து முடிந்து பலகாரங்களும் செய்து முடிந்துவிட்டது. திருமணம் நடப்பதற்கு மூன்று நாளைக்கு முதல் நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் எல்லா விடயமும் எனக்குத் தெரியும். நீ வீட்டாருடன் எதிர்த்துக் கதைக்கவேண்டாம் திருமணத்திற்கு முதல் நாள் நீ யாரும் அறியாமல் இரவு 7.00 மணிக்கு இலங்கை வங்கி அருகில் வந்து மறைந்து நில் நான் நண்பர்களுடன் காரில் வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன் என வரதன் கூறினான்.



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி.

கூறியபடி வந்து என்னை அழைத்துச் சென்று இப்போது நாங்கள் இருவரும் வரதனின் நண்பன் வீட்டில் குருணாகலில் இருக்கின்றோம். வீட்டுக்காரருக்கு நாம் எங்கே இருக்கிறோம் என இதுவரை தெரியாது. உனக்கு மட்டும் தான் தெரியும், யாருக்கும் சொல்லிவிடாதே. நாங்கள் இங்கு வந்த பின் எனக்குப் பார்த்த மாப்பிள்ளைக்கு அதே முகூர்த்தத்தில் வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் முடிந்துவிட்டது.

காதலிப்பது குற்றமா? காதலிப்பவருடன் மணம் முடித்து வாழ முடியாதா? அவரை புரிந்து கொண்டவள் என்ற வகையில் பேசிச் செய்யும் திருமணத்தை விட காதல்த் திருமணம் தான் நல்லது. நான் அவரை மணமுடித்தபிறகு உனக்கு அறியத் தருகிறேன்.

இப்படிக்கு
ஆரணி



**சர்வதேச புகழ் பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர்**

ஆளுமைப் பெண்களை அடையாளப்படுத்தி அவர்களின் அனுபவங்களை இளம் சந்ததிக்கு வழிகாட்டலாக்கும் எமது மாத மலரான ஒளிஅரசி இம்மாத மகளிர் தின சிறப்பை முன்னிட்டு இந்தியாவின் பிரபல பட்டிமன்ற பேச்சாளரான திருமதி பாரதிபாஸ்கரை சிறப்பு நேர்காணல் செய்து அவரது கருத்துக்களை வாசகர்களாகிய உங்களுக்கு வழங்குவதில் பெருமையும் மனநிறைவும் அடைகிறாள்.

கற்கண்டு சொற்கொண்டு செந்தமிழ் சொற்களால் எம் சிந்தையை குளிப்பாட்டியவர் பாரதி பாஸ்கர். கடந்த மாதம் இடம்பெற்ற இலங்கை கம்பன் விழாவிலே பாரதியார் கண்ட புதுமைப்பெண்ணாகத்தான் நாம் இவரைக் கண்டோம். இவர் பேச்சிலே தமிழ் கொஞ்சி விளையாடியது. இதோ சர்வதேச புகழ் பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர் ஒளிஅரசிக்காக வழங்கிய சிறப்புச்செவ்வி வாசகர்களுக்காக---



# உங்கள் உரிமைகளுக்காகப் போராடுங்கள்

நேர்காணல்:-

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், ஜயிலா

**? உங்கள் சொல் வளத்தினாலும் வார்த்தை வீச்சினாலும் அனைவரையும் கட்டி பல்லாயிரக்கணக்கான இரசிகர்களை ஈர்த்து உலகெங்கும் ஓடிக்கொண்டிருக்கும் உங்களைப்பற்றிய அறிமுகம் ஒன்றை எமது வாசகர்களுக்குத்தர முடியுமா?**

✓ ஆம், நான் பாரதி, வங்கித்துறையில் பணியாற்றுகின்றேன், எனது கணவர் பாஸ்கர், ஒரு நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக உள்ளார். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். படித்துக்கொண்டிருக்கின்றனர்.

**? பேச்சாற்றல் என்பது இந்த அளவிற்கு சாத்தியமானதாக அமைந்தது எப்படி?**

✓ சிறுவயது முதல் பேச்சுத்திறன் எனக்குள்ளே இருந்தது, அது எனது பெற்றோரினால் வாய்த்தது. என் சிறு பராயத்தில் எனது முதல் பேச்சு எட்டுத்தடவைகளின் பின்னர் தான் சரியாக அமைந்தது. அன்று என்னை மீண்டும் மீண்டும் பேசவைத்த ஆசிரியரின் வழிகாட்டலே இன்றைய எனது பேச்சாற்றலின் அத்திவாரம். அதன் பின்னர் படிக்கின்ற காலத்தில் அதிகமான மேடைகளில் பேசியுள்ளேன். திருமணமான பின்னர் குடும்பம், குழந்தை என நானும் வீட்டிலேயே இருந்துவிட்டேன். சில வருடங்களின் பின் திடீரென ஒரு நாள் எனது குருவும் எனது அப்பாவைப் போன்றவருமான சாலமன் பாப்பையா ஐயா அவர்கள் என்னை அழைத்து நாங்கள் சென்னையில் பட்டிமன்றம் நடாத்த வந்துள்ளோம், எம்முடன் வரமுடியுமா எனக்கேட்டார். நானும் சம்மதித்துச் சென்றேன், அதன் பின்னர் அவருடைய ஆசி மற்றும் அனைவரினதும் நட்பு, வழிகாட்டல் இவைகளுடன் இன்றுவரை இனிதாகவே நகர்கிறது இப் பயணம்.

**? உங்களுக்கான ஆரம்ப வழிகாட்டி யார் எனக்கருதுகின்றீர்கள்?**

✓ எனது தந்தை ஒரு பாடசாலையின் அதிபராக இருந்ததுடன் பலருக்கு வழிகாட்டிய சிறந்த மனிதனாக பாரதியின் பக்தனாக இருந்தார். தண்டிக்காது தட்டிக்கொடுத்து வளர்த்தார். அவருடைய தடம் பற்றியே நானும் எனது பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டேன்

**? இம்மாதம் உலக மகளிருக்கான தினம் கொண்டாடப்படுகின்றது. அதுபற்றிய உங்கள் கருத்து யாது?**

✓ எமது பிள்ளைகள் அது படிக்கப்போகிறோம், இது படிக்கக்போகிறோம்என்றதும் உடனே அழைத்து சரி நீ படிப்பை தொடங்கு என அனுமதி கொடுத்து விடுகின்றோம். எங்களுடைய காலத்திலும் ஓரளவு படிப்பிற்கான சுதந்திரம் இருந்தது. ஆனால் எங்களுக்கு முற்பட்ட தலைமுறையில் யாரோ ஒருவர் கல்வி கற்பதற்காய் போராடியே இருப்பார்கள். இத்தகைய சர்வதேச மகளிர் தினத்தில் அவ்வாறான எமது முதியோரை நினைவுகூருதல் சாலச்சிறப்பாகும்.



**? நீங்கள் பட்டிமன்ற பேச்சாளராக பல்வேறுபட்ட நாடுகளுக்கு சென்றுகொண்டிருப்பதால் குடும்ப நிர்வாகம் பாதிப்படை வதில்லையா?**

✓ நான் வெளியூர் செல்லும் போது கணவர் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வார். அவர் வெளிநாடு செல்வதென்றால் நான் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வேன். இருவரும் ஒரே நேரத்தில் வெளியூர் சென்றதில்லை. ஆனால் எனக்கும் அவருக்குமான நேரம் என்பது மிகமிக குறைவே.

**? உங்கள் வளர்ச்சியில் உங்கள் குடும்பத்தின் பங்களிப்பு குறிப்பாக கணவரின் பங்களிப்பு எத்தகையது?**

✓ எனது மாமியார்

சிறப்பான குரல் வளத்தினைக் கொண்டிருந்தார். ஆனால் அன்றைய சூழ்நிலை அவரை மேடையேறிப் பாட அனுமதிக்கவில்லை. இன்று வரை அவ்விடயம் எனது மாமியாரை மட்டுமன்றி எனது கணவரையும் அதிகளவில் பாதித்திருந்தது. அதனால் என்னுடைய திறனை வளர்ப்பதற்கும் எனது வளர்ச்சிக்கும் எனது கணவர் அதிக ஒத்துழைப்பு தருபவராகவே உள்ளார். எனவே எனக்கு புரிந்துணர்வுள்ள கணவர் கிடைத்திருப்பது பேறென்பேன்.

be bold for change
மார்ச்
08

**? கம்பன் விழாவுக்காகவே இலங்கைககு வந்துள்ள நீங்கள் எமது கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களைப்பற்றிக் கூறுங்கள்?**

✓ ஐயா அவர்கள் ஒரு அறிவுக்கடல் , இத்தகைய ஒரு பெருந்தகை எம்மை இங்கு அழைத்தமை குறித்து மட்டற்ற மகிழச்சி அடைகிறோம். கம்பன் விழாவை இலங்கையில இவவளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அன்னாரின் முயற்சி மிகுந்த மனநிறைவையும் பெருமையையும் தருகிறது.

**? இலங்கைத் தமிழ்ப்பெண்களைப்பற்றிய உங்கள் கருத்து என்ன?**

✓ இவர்கள் இயல்பிலேயே போராடும் குணம் கொண்டவர்கள். ஒவ்வொருவரும் உங்கள் உரிமைகளுக்காகப் போராடுங்கள். சிறப்பான எதிர்காலத்தினைப் பெறுவீர்கள்.

**? உங்களுக்குப் பிடித்த கவிதை என்று எதைக்குறிப்பிடுவீர்கள்?**

✓ என் முன்னால் செல்ல வேண்டாம்.
நீங்கள் எனக்கு வழிகாட்டி இல்லை.
என் பின்னால் வரவேண்டாம்.
நான் உங்களுக்கு தலைவன் இல்லை.
என்னோடு கூட நடவுங்கள்


இது தான் நான் விரும்பும் கவிதை இந்த கவிதையினையே எல்லா பெண்களுக்கும் கூற விரும்புகிறேன்.

ஒரு புரபரப்பான பகல் போசன வேளையிலே நேர நெருக்கடிக்கு மத்தியில் எமது ஒளி அரசிக்காக சுறுசுறுப்பாக இந்த அவசர பேட்டியைத்தந்த பாரதி அம்மையாரை நாமும் வாழ்த்தி நன்றி கூறி விடைபெற்றோம்.

---

**கதை மூலம் ஆங்கிலம் கற்போம்**

# wise fox



There lived an old tiger in a forest . He could not hunt animals as he used to do when he was becoming difficult to get prey. The tiger thought "I have lost my strength and speed of my youth. Unless l find some trick I will starve death"

After long thoughts the tiger struck upon a plan. He began to keep on saying "I am very old .i have turned v into a vegetarian" " I have become a sanyasi;" "I will not hunt animals" and so on.

Soon these words spread in the jungle. Innocent animals came to pay respect in the tiger thinking that the tiger had turned into a saint. The tiger pounced on animals as and when they came to his cave. These words fell in the ears of a fox. The fox began to think "can a tiger become a saint? He was eager to find the truth.

Stealthily the fox approached the tiger's cave. He minutely and carefylly examind the fool prints of animals. He found all foot prints going towards the cave but not returning from the cave. He declared throughout the forest "the tiger is a cheat .Dont go to the cave"

The tiger had to starve to death.

**SATANIC WORDS ARE NOT TO BE BELIEVED**

தமிழ் மொழிபெயர்ப்பு - 19 ஆம் பக்கத்தில்

# நினைவில் ஒரு மழைச்சாரல்

பச்சைவயல்ஓரத்திலே
பசி எடுத்த நேரத்தில
குத்திவைச்ச பார்வையில
செத்ததடி என்மனசு

சோறும் இறங்கல
சொதியும் ருசிக்கல
பாவி உன் பார்வைபட்டு
பசிமறந்து போச்சுதடி

ஊரும் தெரியல
உறவும் புரியல
உன் பார்வை மட்டுந்தான்
என் கண்ணில் நிக்குதடி

நெல்லுக் கதிரு வந்து
உன்லே உரசயில
என் உடம்பு எரியுதடி
இது என்ன மாயமடி?

கால் கொலுசு சத்தமிட
தூக்கி வைச்ச கையுக்குள்ள
கசங்கின உன் புடவை
கண்ணடிச்சு சிரிக்குதடி
என் மனசு மெல்லத்தான்
கவி ஒண்ணு வரையுதடி.

எட்டாத கனியிதன்னு
எம்புத்தி சொன்னாலும்
மனசு மட்டும் என்கிட்ட
மல்லுக்கட்டி நிக்குதடி

சேத்து வயலோட
நாத்துநடும் என் பொழப்பை
சிங்காரி உன்கிட்ட
சொன்னாலும் புரியாது.


கூடு விட்டு கீழேவந்த
குருவிக்கு கூடுகட்ட
கூடவே வாடான்னு
குதிக்காலில் நிக்கிறியே

சிணுங்கி நீகேக்கையில
சிரையுதடி என்மனசு
மூச்சிரைக்க நீ சொன்னா
மொத்தமா தொலையிறனே

புடவைத் தலைப்புக்குள்ள
பொத்திவைச்ச மாங்காயை
பாதிகடிச்சுட்டு தரவா உனக்கின்னு
அப்பாவியா கேக்கிறியே..

விழிக்கடையில் நீர்துளிர்க்க
அழிச்சுப்புட்டேன் கண்ணீரை
வார்த்தை ஏதும் சொல்லாமல்
வாங்கித்தான் திங்கிறனே

பொத்திவைச்ச ஆசைகளை
பூப் பூக்க வைக்கிறியே
எத்தி எத்தி என் மனசில்
எப்படித்தான் சாயிறியோ..





be bold for change
மார்ச் 08

ஓட்டைக் கூரைக்குள்ள
ஒழுகிற தண்ணிக்குள்ள
கலர் கலரா வரும்கனவில்
கண்ணே உன் உருவம் தானே.


சத்தியமா எனக்கென்ன
ஆச்சின்னே புரியல
சமைஞ்ச பொண்ணு போல
வெக்கப்பட்டு நிக்கிறனே.

கண்ணுக்குள்ள உன்னை வைச்சு
கனவு காணும் ஏங்கிட்ட
மாடி வீட்டு மகராசன்
மாப்பிள்ளைன்னு சொல்லுறியே

சித்தம் கலங்கித் தான்
சிலையா நான் நிக்கையில
பத்து விரலசைச்சு பளிச்சின்னு சிரிக்கிறியே

பாம்பா நீ பழுதையான்னு
பாவி எனக்கு புரியலயே?
முள்ளா நீ மலரான்னு
முடிச்சுப்போடத் தெரியலயே?
வரனா வந்தவரு
கோட்டுசூட்டுப்போட்டவரு
வெள்ளைஉருவமுன்னு
வெக்கப்பட்டுநீசொல்ல

உயிரும் உருகுதடி
உணர்வும் கருகுதடி
என்பிறப்பு எதுக்குன்னு
எனக்கிப்போ தோணுதடி
நித்தம்நித்தம் சேத்துக்குள்ள
நிக்கிற என் பிழைப்பை
என்னான்னு சொல்லுறது?
எப்படித்தான் வெல்லுறது?



மணிவைச்ச சிலையாட்டம்
மணமகளா நிக்கையிலும்
கச்சிதமா பொருந்துதான்னு
கண்ணாலகேக்கிறியே?


பொங்கிவந்தகண்ணீரை
பொசுக்குன்னுஅடக்கிப்பிட்டு
புன்னகைமுகத்தோட
பொருத்தமுன்னுநாசொல்ல

கன்னக்குழிதெரிய
கலகலன்னுசிரிக்கிறியே
பேசஏதும்தோணலயே
கடகடன்னுநான்போறன்

என்கனவின்அர்த்தமெல்லாம்
எனக்கிப்போ புரியுதடி
என் வாழ்க்கை எப்போதும்
வெறுந்தாள் தான் புரியுதடி

காலங்கள் போனதடி
காயங்கள் ஆறாமல்
உப்பட்டி சுமக்கையிலும்
உரசும் உன் நினைவுகள் தான்.

கோபிகை ✍








மகளிர் தின கட்டுரை

# அலட்சியம் வேண்டாம் பெண்ணே

அன்று ஒரு காலம் பெண்களை அடிமைகளாகவே நடத்தினர். அவர்கள் சுயமாக சிந்திக்கவோ செயற்படவோ சந்தர்ப்பங்கள் அமைந்ததில்லை. வீடு தான் அவர்கள் உலகம் பெண்கள் சமையல் வேலைக்குத்தான் என்ற அற்பமான ஒரு எண்ணம் பரவலாக இருந்தது.

தற்போது பெண்கள் படித்துப் பல்வேறு பட்டங்களைப் பெறுகின்றார்கள். பல்வேறு துறைகளில் பாதம் பதிக்கின்றார்கள். அவர்களின் பாதங்கள் பதியாத துறையே இல்லை எனும் அளவிற்கு அவர்கள் வளர்ச்சியடைந்துள்ளார்கள். இவையெல்லாம் சமுதாய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு என நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

படிப்பிலும் சரி ஏனைய துறைகளில் நுழையும் போதும் சரி இன்று குடும்பத்தினரின் ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் பெண்களுக்கு அதிகம் கிடைக்கின்றது. இருந்த போதிலும் சில சில இடங்களில் பெண்களை அடிமைகளாகவும் நடத்துகிறனரெனினும் இன்றய காலத்தில் அதிக பெண்கள் வெளியிடங்களுக்குத் தனியே சென்றுவரக்கூடிய துணிச்சலுடையவர்களாகவும் உள்ளனர். அவர்கள் சுயமாக சிந்தித்துச் செயற்பட போதிய சுதந்திரம் கிடைக்கிறது. இந்த சுதந்திரத்தை பெண்கள் எவ்வகையில் பயன்படுத்துகின்றனர் என்பதை நோக்கும் போது சில பெண்களின் நடவடிக்கைகள் பெண்ணினத்திற்கே இழுக்கை ஏற்படுத்துகின்றது. சுதந்திரமாக சுற்றித் திரியும் பெண்கள் வாழ்வின் திசையை மேற்கத்தைய கலாசாரத்தின் பக்கம் திருப்பி கண்மூடித்தனமாக நடக்கின்றனர்.

இதன் பின்விளைவுகள் பற்றி சிந்திப்பதில்லை. சுதந்திரம் எவ்வளவு அவசியமோ அதுபோலதான் பாதுகாப்பும். சிலர் நவநாகரீகம் என்ற போர்வைக்குள் சிக்கி நற்குணங்களை மறந்து அலைந்து திரிகின்றனர். நினைத்தபடி செயற்பட சுதந்திரம் அவசியம் தான் எனினும் நமது செயல்கள் மற்றவர்களுக்கு சங்கடம் தர கூடாது. பொது இடங்களில் பெண்கள் அதிகாரங்களை வெளிப்படுத்தக்கூடாது. அன்பாக பேசி அழகானதொரு உறவை வளர்க்க வேண்டும். நம்மீது நன் மதிப்போடு நடப்பவர்களுடன் நாம் மரியாதையாக நடக்க வேண்டும். எவ்வளவு தான் நாம் முற்போக்கு சிந்தனை உடையவராக இருந்தாலும் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை அவசியம். அமைதியான புன்னகை கலந்த முகம் தான் வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் தரும் என்பதை மறவாது நடவுங்கள் பெண்களே.

பெண்களின் மீது இயற்கையின் வாயிலாக இறைவன் விதித்துள்ள பங்களிப்புதான் சமுதாய வளர்ச்சிக்காகப் பெண்கள் அளிக்க வேண்டிய நியாயமான,



உண்மையான பங்களிப்பாகும். அது அடுத்த தலைமுறையை உருமாற்றும் பங்களிப்பாகும். அதுவும் அவர்கள் சான்றோர்களாக உருமாறும் வகையில் பங்களிப்பதாகும். அவர்களின் அத்தகைய பங்களிப்பில் தனி மனிதர்களிடம் நிம்மதியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், மனித சமுதாயத்தில் அமைதியும் அபரிமிதமாக வளர்ச்சியடையும். இதுவே உண்மையான சமுதாய வளர்ச்சி!

விஞ்ஞானம் விரவிக்கிடக்கும் இன்றைய உலகில் பெண்களின் இந்த நியாயமான உண்மையுடன் கூடிய பங்களிப்பு மிகப்பெரிய ஒரு தியாகமாகத் தேவைப்படுகின்றது என்பது மிகப்பெரும் உண்மையாகும்.

பெண்கல்வியே சமுதாய முன்னேற்றத்திற்குச் சிறந்தவழி என வழிகாட்டுகிறார் பாரதியார். பெண்களை எண்ணத்தால், சொல்லால், செயலால் இழிவுபடுத்துவது அறிவற்ற செயல் என்றும் அதனை அறவே நீக்க வேண்டும் என்றும் பாரதியார் குறிப்பிடுகின்றார். பெண்ணின் வாழ்வியலை வகுத்தால், அது கல்வியில் தொடங்க வேண்டும். வேறு பிறவழிகளில் பெறமுடியாத முன்னேற்றத்தைக் கல்வியால் பெறமுடியும் என்பது பாரதியாரின் அழுத்தமான நம்பிக்கை.

எதிர்கால சமுதாயத்தின் வளத்திற்கும் நலத்திற்கும் பெண்களின் பங்கு இன்றியமையாதது என்பது யதார்த்த பூர்வமான உண்மை ஆகும். பெண் போற்றுதற்குரியவள் எனும் உண்மையை உள்ளத்தில் தாங்கி பிறர் மகிழவும் மலரவும் வீட்டிற்கும் நாட்டிற்கும் கண்ணாக விளங்கி புதுமைகள் புரிந்து புது உலகம் அமைப்போம்.

தருவது அனுப்பிரியா

(15 ஆம் பக்க ஆங்கிலக்கதைக்கான கருத்து)

# புத்திசாலி நரி

| | |
|---|---|
| wise Fox - புத்திசாலி நரி | spread - பரவுதல் |
| prey - உணவு | innocent - அப்பாவி |
| unlees - முடியாவிட்டால். | to pay respects - மதிப்பளிப்பதற்காக. |
| struck upon a plan - திட்டம் ஒன்றை தீட்டியது. | ponuce - பாய்தல் |
| sanyasi - சந்நியாசி | cave - குகை |

ஒரு காட்டில் வயதான ஒரு புலி வாழ்ந்து வந்தது. அதற்கு இளமைக்காலத்தில் விலங்குகளை வேட்டையாடி உண்டது போல் தற்போது முடியவில்லை. இதனால் உணவுக்காக மிகுந்த சிரமப்பட வேண்டி இருந்தது. தான் இளமைக்காலத்தில் இருந்த பலத்தையும் வேகத்தையும் இழந்துவிட்டதா கவும் உணவுக்காக ஏதாவது தந்திர உபாயத்தை கண்டுபிடிக்கா விட்டால் பட்டினியால் இறக்க வேண்டி வரும் எனவும் நினைத்தது அந்தப் புலி. நீண்ட சிந்தனைகளின் பின்பு ஓர் திட்டத்தை வகுத்தது.

தனக்கு வயதாகிவிட்டபடியால் சைவமாக மாறிவிட்டதாகவும் இனிமேல் விலங்குகளை வேட்டையாடி உண்ணமாட்டேன் எனவும் சொல்லிவந்தது. இந்தத் தகவல் விரைவாக காடு முழுவதும் பரவியது. அப்பாவி விலங்குகள் இந்த சைவப் புலியை நம்பி புலியின் குகைக்குள் சென்றபோது அந்தப்புலி சட்டெனப்பாய்ந்து சிறிய விலங்குகளை வேட்டையாடி உண்டது. புலியின் இந்தத் தந்திரோபாயம் ஒரு நரியின் காதுக்கு எட்டியது. ஒரு புலி சைவமாக முடியுமா என சிந்திக்கத் தொடங்கியது. அது உண்மையைக் கண்டறிய ஆர்வமாக இருந்தது. நரி யாருக்கும் தெரியாமல் புலியின் குகையை நெருங்கியது. சில நிமிடங்கள் விலங்குகளின் காலடிப் பதிவுகளை கவனமாகப் பரிசோதித்தது.இதன்படி எல்லா விலங்குகளும் குகையை நோக்கி உள்ளே செல்லும் பாத அடி களே இருந்தது. குகையில் இருந்து திரும்பிவரும் பாத அடிகள் இருக்கவில்லை. இதன் மூலம் இந்தப் புலி எல்லோரையும் ஏமாத்திவிட்டதெனவும் குகைக்குள் யாரும் செல்லவேண்டாம் எனவும் காடு முழுவதும் நரி தெளிவுபடுத்தியது. இதனால் புலி சில நாட்களில் பட்டினியால் செத்துவிட்டது.

**போதனை: பகட்டுவார்த்தைகளை நம்பக்கூடாது.**

எங்கள் வீட்டில் நான் நால்வரில் கடைக்குட்டி. என்னை இன்னும் அவர்கள் அதே போல் தான் பார்க்கிறார்கள். எந்த முடிவிலும் என் பங்கு அதிகமாக ஏன் இருந்ததாகக் கூட நினைவில்லை. எல்லாத்திலும், 'அவ சின்னப் பொண்ணு. அவகிட்ட என்ன கேக்க?! அவளுக்கு என்ன தெரியும்?!' என்ற எண்ணம் எல்லாருக்கும். இப்போதும் கூட அவர்களுக்கு நான் என் வயதையும் நிலையையும் குறிப்பிட்டுச் சொன்ன பிறகே கருத்துக்கள் கேட்கப்படுகின்றன. அவர்களுடன் என் வயதும் அனுபவமும் கூட வளர்கிறது என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. நீ என்றுமே எங்களுக்குக் கடைக்குட்டிதான் என்று பெருமை வேறு. நிறையச் சலுகைகளை அனுபவித்திருந்த போதும் அதற்குச் சமமான அங்கீகாரயிழப்பும் இருக்கத்தான் செய்தது.

# மூத்த மருமகளான கடைசி மகள்



ஆனால் என் கணவர் மூத்த மகன். இப்போது புரிந்திருக்கும் என் கதை. ஆம், நான் மூத்த மருமகள். திருமணக் கொண்டாட்டம் ஒரு வாரம் ஓடியது. எல்லாச் சொந்தபந்தங்களுடன். காரணம் எங்களுடையது அவர்கள் வீட்டில் முதல் திருமணம். எல்லாரும் சின்னப் பிள்ளைகள், என்னை அக்கா என்றும் அண்ணி என்றும் சுத்திச் சுத்தி வருவார்கள். எல்லாம் முடிந்து எல்லோரும் அவரவர் ஊர்களுக்குப் போனபின், என் கணவர் குடும்பத்துடன் மட்டுமான முதல் நாள். காலை அத்தை (மாமியார்),'' இன்று நீ சமை'' என்றார்கள். நானும் சந்தோசமாகத் தக்காளி சாதமும், உருளைக் கிழங்கு வறுவலும் செய்தேன். என் கணவர், கொழுந்தனார் இருவர், மாமா (மாமனார்), அத்தை (மாமியார்) எல்லோருக்கும் நான் பரிமாறினேன். என் சின்னக் கொழுந்தன் என் அத்தையிடம், இதுதான் தக்காளிச் சோறு. நீயும் செய்வியே ஒண்ணு!

be bold for change
மார்ச் 08

என்றார். என் அத்தை (மாமியார்), ஆமா, நல்லா இருக்குடா. என்ன செய்ய? எனக்குத் தெரிஞ்சதச் செய்றேன். நீ நல்லாச் சாப்பிடு'' என்றார்கள். மாமாவும் நல்லா இருக்கும்மா என்றார். முதல் வெற்றி. புகுந்த வீட்டில்.

என் வீட்டில் மூன்று பெண்கள், ஒரு பையன். அண்ணன் பெரும்பாலும் அத்தை வீட்டில்தான் இருப்பார். காரணம், அத்தைக்கு ஓர் அழகான மகள் இருந்தாள் என்பதல்ல. அவர்களுக்கு வாரிசு இல்லாததால் அண்ணனே அதுவாக இருந்தார். அப்பா இல்லை. அதனால் பெரும்பாலும் நான்கு பெண்களாக நாங்கள் இருந்ததே அதிகம். ஆனால் இவர் வீட்டில் தலைகீழ். எல்லாம் ஆண்கள். ஒரே ஒரு பெண் அத்தை (மாமியார்). எனக்கு மிகவும் வித்தியாசமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் துண்டு, கைலி, சட்டை என்று ஆண்கள் சமாச்சாரமாகவே இருந்தது. என் துணிமணிகளும் கூட என்னைப் போலவே தனித்து நின்றன. கொஞ்சநாள் ஆனது. என் துணிமணிகள் கொடிகளுக்குப் பழக்கப்பட. என்னைப் போலவே.

நிறையக் கேட்டேன், சொன்னேன், புரிந்து கொண்டேன், புரியவைத்தேன். மொத்தமாக செட் ஆகிவிட்டேன். என் கொழுந்தனார்கள் என்னை ''மதினி என்று மரியாதையுடன் அழைக்கும் போதும். என் கணவர் என்னை ''மூத்தவளே'' என்று அழைக்கும் போதும், கொழுந்தனாரைக் கண்டிக்கும் போது குழந்தை போலாகி அவர் விளக்கம் கொடுத்தபோதும், எல்லாவற்றிற்கும் மேல் என் அத்தை (மாமியார்) எல்லாக் காரியங்களிலும் மூத்த மருமகள் நீ இல்லாம நல்லாவே இருக்காது என்று என்னிருப்பை முக்கியப் படுத்திய போதும் நான் முழுமையாக மூத்தவளானேன். என் மகள் மூத்த பேத்தி.

மகன் மூத்த பேரன். என் கொழுந்தனார்கள் எல்லோருக்கும் திருமணம் முடிந்தது. எல்லாத்திலும் நான் முன்னிறுத்தப்பட்டேன். எல்லா மருமகள்களுக்கும் நானே முன்னோடி. எல்லோரும் என்னையே பின்பற்றினர். நான் சொந்தபந்தங்களை எப்படி முறை வைத்து அழைத்தேனோ அப்படியே அவர்களும் அழைத்தனர். என் அத்தையும் அவர்களிடம், கவிதா இப்படித்தான் செய்வாள்; அப்படித்தான் செய்வாள் என்று கூறியதுண்டு.

எல்லோருக்கும் என்மேல் இருந்த மரியதையும் அன்பும் பிடித்திருந்தது. பிடித்திருக்கிறது. என் வீட்டில் எனக்கு இல்லாத ஒரே விஷயம் இது  அந்த மூத்தவள் என்ற அங்கீகாரம். அதை அனுபவித்து விட்டேன். பிறப்பினால் எனக்குக் கிடைக்காத கிடைக்க முடியாததைக் கூட எனக்குக் கிடைக்க வைத்தது எங்கள் திருமணம். என் ஆசைகள் நிறைவேறிவிட்டன. நான் திரும்ப என் வீட்டில் என் அம்மாவுக்கு மூத்த மகளாகி அனுபவிக்க எண்ணிய எல்லாம் திரும்பப் பிறக்காமல் இப்பிறப்பிலேயே நடந்தது ஓர் அதிசயம் தானே?!

பெண் பிள்ளைகள் இல்லாத வீட்டு மருமகள்கள் கூடுதல் அதிர்ஷ்டசாலிகள் என்றே நினைக்கிறேன். காரணம் அவர்கள் ஆண்களின் எதார்த்தமான பேச்சிலும், அக்கறை தெரியாத செயலிலும், மூழ்கி இருக்கும் போது நாம் கேட்கும் உடம்பு சரியில்லையா அத்தை? என்ற உணர்ச்சி கலந்த அக்கறை அவர்களை முழுமையாக நம்மை நேசிக்கச் செய்கிறது. என் அம்மாவிடம் நான் கேட்டது போல் இல்லாமல் கூட அது இருக்கலாம். ஆனாலும் நான் காட்டிய அக்கறையை விட அதிகம் காட்ட அவர்களுக்கு மகள் இல்லையே. அங்கு தான் என் ஈகோ வெல்கிறது. இது என் குடும்பக் கதை.

ஆனால் சில வீடுகளில் ஆண் பிள்ளைகள் பெண்களை விட அதிகம் அக்கறையையும் அன்பையும் வெளிக்காட்டத் தெரிந்தவர்களாக இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். என் துரதிர்ஷ்டம் நான் அதைப் பார்த்ததில்லை. எங்கள் வீட்டில் அப்படி இல்லை. அக்கறை அன்பு எல்லாம் மனதுக்குள் பூட்டி வைத்து விட்டு சாவியை ஆண்கள் தொலைத்து விட்டனர். அவர்கள் அகராதியில் அக்கறை, அன்பு இதற்கு வேறு பொருள். அது பெண்களுக்குப் புரியாத மொழியில் எழுதப் பட்டிருப்பதால் அதைப் படிக்க முடிவதில்லை. நானும் படிக்க முயன்றதில்லை. எது எப்படியோ எனக்குக் கடைக்குட்டியாக இருப்பதால் கிடைக்கும் எல்லாமும், மூத்தவளாக இருப்பதில் கிடைக்கும் எல்லாமும் கிடைக்கிறது. எனக்கு என் வாழ்க்கையில் என்னுடைய ஞாயமான ஆசைகள் எல்லாம் நிறைவேறி வருகிறது. இறைவன் துணையோடு.

ஆக... நடக்க முடியாத ஒன்று என்பது என்றுமே இல்லை என்பதே இந்தக் கதையின் நீதி!



# காதல் மற்றும் திருமண வாழ்க்கை குஷியாக அமைய வேண்டுமா?

**காதலும், கல்யாணமும் வாழ்க்கைச் சக்கரம் சுழலச்சுழல சலித்துப்போய்விடும். ஆனால் இரண்டுமே வாழ்கையின் உன்னதமான உணர்வுகள். இந்த உறவை எப்படி அதன் இனிமை மாறாமல் பாதுகாத்து கொள்வது என்பது பற்றிய ஆலோசனைகள்**

01) நீங்கள் உங்கள் துணையின் மீது உங்களுக்கு உள்ள மரியாதையை வெளிப்படுத்த வேண்டும்.

02) உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

03) சின்னச்சின்ன பிரச்சினைகளை எல்லாம் பெரிதுபடுத்தாமல், பேசி சமாதானம் செய்து கொள்ளுங்கள்.

04) ஒரு சண்டை வந்தால் அதை மறந்து மன்னிக்க வேண்டும். அடிக்கடி அதைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

05) கடந்த காலத்தின் கசப்பான சம்பவங்களை மறந்துவிட வேண்டும். அதையே நினைத்து மனதை குழப்பிக்கொள்ளக்கூடாது.

06) அவர்கள் உங்களுக்காக ஒரு சிறிய விஷயம் செய்தால் கூட பாராட்டி உங்களது நன்றியை தெரிவியுங்கள்.

07) உங்கள் துணையை ஊக்குவியுங்கள். உறுதுணையாக இருங்கள்.

08) எதையும் முழுவதுமாக ஆராயாமல் தீர்மானிக்காதீர்கள்

09) நேர்மையாக உங்களது பிரச்சனைகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்

10) உங்கள் துணையிடம் இருந்து கிடைக்கும் அன்பை விட அதிகம் கொடுங்கள்.

11) முக்கியமான நிகழ்வுகள், நாட்களை மனதில் வைத்து, அந்த தருணங்களை ஒன்றாக கொண்டாடுங்கள்

12) ஒவ்வொரு சந்திப்பின் போதும் அன்பின் அடையாளமான முத்த பரிமாற்றங்கள் அவசியம்

13) ஒவ்வொரு இரவு உணவும் ரொமாண்டிக்காக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்

14) வேலைப்பளுவின் காரணமாக உங்கள் துணையின் மீது கவனம் செலுத்தாமல் இருக்க கூடாது.

15) இரவு தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக உங்களது அலைப்பேசியை அணைத்து வைக்க வேண்டும்.

16) அடிக்கடி உங்களது துணைக்கு இன்ப அதிர்ச்சி கொடுங்கள்

17) இருவரும் இணைந்து புதிதான மகிழ்ச்சியான செயல்களை செய்ய தொடங்குங்கள்

18) அடிக்கடி உங்களது துணையை வெளியே அழைத்து செல்லுங்கள்.

**இதை எல்லாம் பின்பற்றுகள்...! உங்க காதல் வாழ்க்கை குஷியோ குஷி தான் ......!**

**நன்றி இணையம்**

be bold for change மார்ச் 08

நந்தவனப் பூக்கள்



# எத்தனை வயசு ஆனாலும் நீ எனக்கு குழந்தைதானே

மணவாழ்க்கை என்பது அழகானது, ஆயிரம் ஆயிரம் பூக்களால் அர்ச்சிக்கப்படவேண்டியது. அதில் இன்பமும் துன்பமும் கலந்தே பயணிக்கும். ஊடலும் கூடலும் இணைந்த இன்பமே இல்லறம் ஆகும். அதனை சரியாய் புரிந்து நடப்போரும் உண்டு. அதன் தார்ப்பரியம் புரியாது பிரிந்து வாழ்வோரும் உண்டு. பிரிந்துபோகுமாறு நடப்போரும் உண்டு.

இதில் திருமண நாளின் போது எடுத்துக்கொண்ட உறுதிமொழியை செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக மட்டுமே இணைந்துவாழும் தம்பதியரும் ஒரு வகையினரே. என்ன செய்வது திருமணம் செய்தாயிற்று, வாழ்ந்து முடிப்போம் என எண்ணுவோரும் உண்டு. இவ்வாறானவர்களின் இத்தகைய மனநிலையானது அடுத்து வரும் தலைமுறைக்கும் கடத்தப்படுகின்றது. அதாவது ஒரு இல்லறத்தை எவ்வாறு பார்க்கின்றனரோ அவ்வாறே அதுபற்றிய கணக்கினையும் இட்டுக்கொள்கின்றனர் வரும் சந்ததியினர்.

கனிகா அவ்வாறான ஒரு அழகிய இல்லற வாழ்வை கண்டு வளர்ந்தவள், அவள் கண்ட இனிய இல்லறத்தின் சாயல்கள் அவளுடைய ஆழ்மனதில் மாறா விம்பங்களை பதிவிட்டிருந்தது. அதே போன்றதொரு அழகிய வாழ்க்கையையே தானும் வாழவேண்டும் என எண்ணினாள். அவளது எண்ணங்கள் வண்ணமயமாக வளர காரணமானவர்கள் அவளது வீட்டிற்கு எதிர்வீட்டிலிருந்த சதாசிவம் அங்கிளும் சுகுணா அன்ரியும் தான்.

கனிகாவிற்கு பத்துவயது இருக்கும் போது அவர்கள் அந்த வீட்டிற்கு குடிவந்தனர். சதாசிவம் சேர்தான் அந்த ஊர் பாடசாலையின் அதிபர். அவர்களிற்குப் பிள்ளைகள் இல்லை. சதாசிவம் அங்கிளின் தங்கை மகனையே தமது மகனாக வளர்த்துவந்தனர். விடுதியில் தங்கியிருந்து படித்தான். எப்போதாவது வீட்டிற்கு வரும்போதுதான் அவனைக் காணலாம். சுகுணா அன்ரியும் சதாசிவம் அங்கிளும் அவன் மீது அன்பை பொழிவார்கள். அவனும் அவர்கள் மீது மிகுந்த அன்புடனே இருந்தான். ↓

மாற்றத்தின் அடிப்படையாக இரு

## இல்லறம் இனித்திட

அவன் ஊருக்குப்போய்விட்டால் கனிகாதான் அந்த வீட்டின் செல்லப்பிள்ளை. எப்போதும் அவர்களுடன் தான் அவளது பொழுதுபோகும். பெற்றோரை இழந்துவிட்ட கனிகா பாட்டியின் அரவணைப்பில் தான் வாழ்ந்துவந்தாள். அவள் மீது அன்பு காட்டிய அவர்கள் இருவரையும் அவளுக்கும் பிடித்துப்போனது.

காலையில் எழுந்து மனைவிக்கு சமையலில் உதவிகள் செய்வது முதல் மாலை தோட்ட வேலை வரை சதாசிவம் அங்கிள் நாள் முழுதும் பம்பரம் போலவே இயங்கிக்கொண்டிருப்பார். கணவனின் ஒவ்வொரு தேவைகளையும் பார்த்துப்பார்த்து கவனித்துக்கொண்டிருப்பார் சுகுணா அன்ரி. ஏதாவது அலுவலாக கணவன் வெளியே சென்றாலும் அவர் வரும் வரை வாசலையே பார்த்துக்கொண்டிருப்பா. ஓரளவு விபரம் தெரிந்த பின்னர் என்ன அன்ரி, ஏன் வாசலில் நிக்கிறீங்கள்? என்றால் ஒண்டுமில்லை, சும்மாதான் என்பார். ஆனால் கண்ணில் ஒருவித ஏக்கம் கலந்துநிற்கும்.

இப்போது கனிகா பெரிய பெண்ணாகிவிட்டாள். பத்தொன்பது வயதை அடைந்துவிட்ட அவளிடம் தாயில்லாப்பெண் என்ற பரிவையும் பாசத்தையும் சேர்த்துக்காட்டிய சுகுணா அன்ரிதான் எப்போதும் அவளது ஹீரோயின். சிறு வயதில் புரியாத பல விடயங்கள் எல்லாம் இப்போதுதான் அவளுக்குப் பரிந்தது. சதாசிவம் அங்கிள், சுகுணா அன்ரி இருவருக்குமே சற்று வயசாகிவிட்டிருந்தது. முதுமையின் தளர்வுகள் மெல்ல அவர்களைத் தழுவினாலும் மாறாத அன்புடனும் நிறைந்த பாசத்துடனுமே இருவரும் வாழ்ந்தனர்.

சில நாட்களில் சுகுணாஅன்ரி எழுவதற்கு முன்பே எழுந்து தேனீர் தயாரித்து கையில் கப்புடன் சதாசிவம் அங்கிள் நிற்கும் காட்சியைக்கூட கண்டிருக்கிறாள் கனிகா. அவளைக் கண்டதும் அடக்கமான புன்சிரிப்புடன் அன்ரிக்கு ஏலாது என்பார். அன்ரி நாற்பத்தைந்து வயதைக் கடந்த காலத்தில், சில நாட்களாகவே அன்ரியின் உடல்நிலையில் சோர்வு காணப்பட்டது. வீட்டின் பாதி வேலைகளையும் தானே செய்துமுடிக்கும் அங்கிளைப்பார்க்கும் போது பெருமையாக இருக்கும் கனிகாவிற்கு. தானும் தன் பங்கிற்கு தேவையானவற்றைச் செய்தகொடுத்தவிட்டுத் திரும்புவாள்.

ஒரு நாள் அவள் உள்ளே நுழைய அவர்கள் இருவரும் கதைத்துக்கொணடிருந்தது அவளது செவிகளில் தெளிவாக விழுந்தது. ஐயோ! இன்னும் சின்னப்பிள்ளையாவே என்னைப் பாக்கிறீங்க, என்ற அன்ரியிடம் எத்தனை வயசு ஆனாலும் நீ எனக்கு குழந்தைதானே என்றார் அங்கிள்.

இந்தக் காட்சி கனிகாவின் மனதில் பல நாட்களாய் வலம் வந்தது. வாழ்க்கை இப்படித்தான் அமையவேண்டும் என ஆசைகொண்டாள். தனக்கு வரப்போகும் கணவனும் கூட சதாசிவம் அங்கிளைப் போலவே வரவேண்டும் என எண்ணத்தொடங்கினாள். தனது மணவாழ்க்கையை அவ்வாறே கற்பனை செய்தவள் பல எதிர்பார்ப்புகளை உள்ளத்தில் தாங்கி தனது மணவாழ்விற்காய் காத்திருந்தாள்.

வீட்டிலே திருமணப்பேச்சு நடப்பது மெல்ல அவளுக்கும் புரிந்தது. பாட்டியிடம் தன் எதிர்பார்ப்புகளைக்கூறவும் முடியவில்லை. இரண்டே நாட்களில் சுகுணா அன்ரியிடமிருந்து இனிப்பான செய்தியொன்று வந்தது. அவர்கள் தமது மகனைப்போல வளர்த்த சுதாகருக்கு கனிகாவை திருமணம் செய்ய திட்டமிட்டிருப்தாகவும் அவளுக்கு சம்மதமா எனவும் கேட்டனர். சுதாகரை அவள் இரண்டுமூன்று தடவை பார்த்திருக்கிறாள். ஆனால் சுகுணா அன்ரியின் மூலம் அவனைப் பற்றி நிறையவே அறிந்திருந்தாள். பாட்டிக்கு சம்மதமென்றால் தனக்கும் சம்மதம் எனவும் தன்னிடம் இருப்பது ஒரே ஒரு கண்டிசன் தான் எனவும் கூறியவள் என்ன? என்ற சுகுணா அன்ரியிடம் எனக்கு வரப்போகும் கணவன் சதாசிவம் அங்கிளைப்போல இருந்தால் சரி என்றாள்.

சிரித்துவிட்டு, அவளை இறுக கட்டி அணைத்துக்கொண்ட சுகுணா அன்ரி, அதையே சுதாகரிடமும் கூறியிருந்தார். திருமணத்திற்கு முன்பே தன் எண்ணங்களை சுதாகரிடம் பகிர்ந்துவிட்டிருந்தாள் கனிகா. அவற்றையெல்லாம் கேட்ட சுதாகரின் மனதிலும் அழகான இல்லற வாழ்வின் ஆசைகள் துளிர்த்தது. தனது மாமனாரைப் போலவே மனைவியைப் புரிந்துகொண்ட கணவனாக கடைசிவரை வாழவேண்டும் என எண்ணினான். சுதாகர்கனிகா திருமணம் மிகவும் கோலாகலமாய் நடந்தது. தனது வளர்ப்பு பெற்றோரின் ஆசிகளுடனும் இல்லறத்தின் புரிதல்களுடனும் வாழ்க்கையைத்தொடங்கினர்.

காலம் உருண்டோடிவிட்டது. சுதாகர் கனிகாவும் நாற்பது வயதை நெருங்கிவிட்டனர். இரண்டு குழந்தைகளுக்கு தாயாகிவிட்டபோதும் கணவனின் கரைகாணா அன்பில் அழகான இல்லறத்தில் திளைத்தாள் கனிகா.

**திருமதி சந்தியா சந்தோஷ்**

நட்சத்திர ஜோக்ஸ்



# சிரிப்போம்.... சிந்திப்போம்...!

ஒருவருக்கு வீட்டில் டெலிபோன் பில் அதிகமாக வந்தது. அவர் தன் மனைவியிடம் நான் நண்பர்கள் உறவினர்களுக்கு போன் செய்ய அலுவலக போனை பயன்படுத்துகிறேன், நீதான் அதிகமாக பேசியிருப்பாய் எனக் கூறினார். அனால், அவர் மனைவியோ, நான் வேலை செய்யும் இடத்தில்தான் போன் பேசு கிறேன்.... என்றார்.

நம் மகன் அவனது நண்பர்களிடம் பேசியதால் பில் அதிகரிக்கலாம் என்றார் அவர் மனைவி. மகனோ நான் வேலைசெய்யும் கம்பனியில் போன் உண்டு. அதில் இருந்துதான் நான் போன் செய்கிறேன் என்றான்

நம் வீட்டில் வேலை செய்யும் பெண் அடிக்கடி டெலிபோன் செய்வதை பார்த்திருக்கிறேன் என்றான் மகன். உடனே கணவனும் மனைவியும் வேலைக்காரப் பெண்ணை அழைத்து இது பற்றிக் கேட்டனர். இதற்கு அந்தப்பெண் ''என்னை எதற்காக திட்டுகிறீர்கள்'', ''உங்களைப்போலதான் நானும். நான் வேலை செய்யும் இடத்தில் இருந்து என் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் போன் பேசுகிறேன்'' என கூறியதும் அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.



ஆஸ்பத்திரிக்கு எப்படி போகனும்?

ரோடோடதான்!!



படிச்சி முடிச்சப்புறம் என்ன செய்யப்போறே?

புக்கை மூடிடுவேன்



காலில் என்ன காயம்?

செருப்பு கடித்து விட்டது...

பின்ன அதை மிதிச்சா அது சும்மா இருக்குமா?

# இலக்கிய முத்து

காப்பியக்கோ
அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



இலங்கையில் புகழ் பூத்த மூத்த இலக்கியவாதிகளை இன்றைய இளைய பரம்பரையினருக்கு ஒளி அரசியினூடாக அறிமுகம் செய்து ஆவணப்படுத்த உள்ளோம். அந்த வகையில் எமது மலருக்கு அதன் மணமே விளம்பரமாகும். இலக்கிய முத்தில் இம்மாதம் மணம் பரப்புவர் காப்பியக்கோ அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களாவார். இதோ அவர் பற்றிய சுய விபரம்

மருதமுனையைச்சேர்ந்த புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் -ஆயிஷா உம்மா தம்பதிகளின் மகனாக பிறந்தவர்தான் இந்த ஜின்னா ஷரிபுத்தீன். இவர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி கல்லூரி ஆகியவற்றில்கல்வி கற்றவர். உயர்தர சித்தியை அடுத்து இராஜகிரியவிலுள்ள ஆயுர்வேத பல்கலைக் கழகத்தில் கற்று சுதேச வைத்தியரானார். தனியார் மருத்துவ நிலையத்தில் வைத்தியராக கடமையாற்றினார். ஹம்சியா பரீதாவை தனது வாழ்கைத்துணைவியாக கரம் பிடித்த இவருக்கு அர்ஷத் முஜீப், றோஷன் ஹாமீட், ஷப்ராஸ் முஹம்மத் என்ற பெயர்களில் மூன்று ஆண் மக்களும் குர்ஷித் ஷாமிலா என்ற பெயரில் ஒரு மகளும் உள்ளனர். இவர்கள் மூலம் பேத்தி பேரன்மாரும் உள்.

1965 ஆண்டில் இலக்கியத்துறையில் பிரவேசித்த இவர் இன்று வரை காவியம் கவிதை-சிறுகதை தொகுப்புகளாக சுமார் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி சாதனை படைத்துள்ளார். இன்றும் இன்னும் ஒயாது எழுதிக்கொண்டிருக்கிறார். இதுவே இவரது சிறப்பம்சமாகும். தனது ஞானத்தந்தையாக பத்திரிகைத்துறை ஜாம்பவான் அறிஞர் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவை குறிப்பிடுகிறார்.

இவரது முதலாவது நூலான முத்து நகை 1989இல் வெளிவந்தது. அதையடுத்து பாலையில் வசந்தம்-மஹ்ஜபீன் காவியம் -புனித பூமியிலே காவியம்-பனிமலையின் பூபாளம்- மலையகக் கவிதைத் தொகுப்பான கருகாத பசுமை- - கடலில் மிதக்கும் மாடிவீடு (சிறுவர் பாடல்) - அகப்பட்ட கள்வன் (சிறுவர் படக்கதை) - எங்கள் உலகம் (சிறுவர் பாடல்கள்) திருமறையும் நபிவழியும்-வேரறுந்தநாட்கள் - ராகுலுக்கு ஒரு புதுவண்டி சிறுமியும் மந்திரக் கோலும் பெற்றமனம் ஆகிய சிறுகதைத் தொகுப்புகள்-

பண்டார வன்னியன் காவியம் -திருநபி காவியம்-தீரன் திப்புசுல்தான் காவியம் -வாத்தியார் மாப்பிள்ளை காவியம் - ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள்- மஹ்ஜபீன் காவியம் -எல்லாள காவியம் - நாயனொடு வசனித்த நந்நபி (மூஸாநபி காவியம்) ஆகிய காப்பியங்கள் இலக்கிய உலகில் மிகுந்த வரவேற்பை பெற்ற- விருதுகள் பல பெற்ற காவியங்களாகும். எனவே தான் இவர் தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகத்தினால் காப்பியக்கோ விருது வழங்கி

கௌரவிக்கப்பட்டார். கலாசார அமைச்சு 2005ம் ஆண்டுக்கான கலாபூசணம் அரச விருது வழங்கி கௌரவித்தது. அதுமட்டுமல்ல, கவிக்கதிரோன் - காவியத்திலகம் -காவியக் கவிமணி -கலைத்தீபம் போன்ற பல்வேறு பட்டங்களாலும் கௌரவிக்கபபட்டவர். துபாய் சங்கமம் தொலைக் காட்சி நிறுவனம் கவிச்சக்கரவர்த்தி விருது வழங்கி இவரை கௌரவித்தது. இலங்கை கம்பன் கழகத்தினால் மகரந்தச் சிறகு விருதும்- 2016 தஞ்சாவூர் பல்கலைக் கழக இலங்கைக் கிளை தனா கல்வி நிறுவகத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.

இவரது 'மஹ்ஜபீன் காவியம்' - 'புனித பூமியிலே காவியம்' என்னும் இருகாவியங்களும் கவிமாமணி அகளங்கன் (ரி.தர்மராஜா) அவர்களால் ஆய்வுசெய்யப்பட்டு 1999ல் கவிஞர் ஜின்னாஹ்வின் 'இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப் பெற்றது. 2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இந்தியத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.ஹம்ஸா அவர்களால் 'ஜின்னாஹ்வின் இரு குறுங்காவியங்கள்' என்னும் தலைப்பில் அதே காவியங்கள் ஆய்வு செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டு ஆய்வரங்கக் கோவையிலும் வெளியிடப் பெற்றது. மஹ்ஜபீன் காவியம்- புனித பூமியிலே காவியம் ஆகிய இரு காவியங்களும் இந்திய தமிழ் நாட்டின்- வேலூர் மாவட்ட மேல்விசாரம் அப்துல் ஹக்கீம் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். முகம்மது அலி அவர்கள் ஈழக் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் ஆய்வு செய்யது சென்னைப் பல்கலைக் கழகத்தில் 2006ம் ஆண்டில் டாக்டர் பட்டம் பெற்றார். சென்னை எஸ்.ஐ.ரி. கல்லூரி பேராசிரியை செல்வி 'கருகாத பசுமை' நாவலை ஆய்வு செய்து ஆறாவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்தார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி செல்வி சியாமினி 'ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காவியங்கள் ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் தனது சிறப்புக் கலைமானிப் பட்டத்திற்காக (எம்.ஏ) ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளார் .

இவ்வாறு பல்துறை ஆளுமை கொண்ட ஒரு எழுத்தாளர் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது தமிழ் பேசும் நல் உலகிற்கே நற்பெருமையாகும். இத்தகைய சிறப்புமிக்க பல்துறை கலைஞர் காப்பியக்கோ அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் இன்னும் நூறாண்டு காலம் வாழ்ந்து இலக்கிய உலகிற்கு மேலும் பல நூல்களை தரவேண்டும் என நாமும் ஒளி அரசிசார்பில் வாழ்த்துகிறோம்.

**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் முகவரி:**

**:16. SCHOOL AVENUE,**
**OFF STATION ROAD,**
**DEHIWALA, SRI LANKA.**

தொகுத்துத் தருபவர்-
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் ✍
071-4842169




# பிறந்தநாள் வாழ்த்துகள்

**கடந்த மாதம் பிறந்தநாளைக் கொண்டாடிய ஒளிஅரசியின் வாசகர் குழந்தைகள்**

**S. ரக்ஷனா**
31.01.2017

**ஆபியா அக்தரி**
02.02.2017






## இம் மாத போட்டிப்பரீட்சைக் கையேட்டுக்கான விடைக் குறிப்புக்கள்

### பொது விவேகத்திற்கான விடைகள்.

1. 15
2. சனிக்கிழமை
3. தந்தை
4. அகிலன்
5. தெற்கு
6. 7
7. இழைத்தவராயினும், புரிந்தனன்
8. ஒவ்வோர், உழைத்தனர்.
9. ஈட்டுவேன், பெறுவான்
10. சேதார,நிறம்.
11. ஒளிந்திருக்கின்றது, பலப்படுத்துவர்.
12. 4
13. 2
14. 3

---

### பொது அறிவு வினாவிற்கான விடைகள்

01. Malcolm Turnbull
02. நசீர் ஜாம்ஷெட்
03. மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி
04. உரிமை, சமத்துவம், சுதந்திரம்
05. யாழ்ப்பாணத்திலுள்ள எழுவைதீவில்
06. டெக்கின் பல்கலைக்கழகம்
07. 2015.08.10இலிருந்து
08. வைஸ் அட்மிரால் ரவீந்திர விஜேகுணவர்த்தன.
09. 2016.11.25
10. மாகாண சபைகள் அமைச்சு
11. 1977
12. பின்லாந்து
13. உமா ஓயாத் திட்டம்
14. பேராசிரியர் மாலனி அந்தகம
15. இலங்கை
16. சொயுஸ்
17. கேப்பாபுலவு
18. வெல்லஸ்ஸ
19. களுத்துறை

**பெப்ரவரிமாத ஒளிஅரசியில் இது துரோகமல்ல என்ற சிறுகதை எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இச்சிறுகதை காவலூர் அகிலன் என்பவரால் எழுதப்பட்டது என்பதை குறிப்பிடுகின்றோம்.**





be bold for change மார்ச் 08

### சக்கரையைக் குறைக்கும் வெந்தயக்கீரை சமையல்

# வெந்தயக்கீரை சப்பாத்தி

நம் ஆரோக்கியத்திற்கு நன்மை செய்யும் நல்ல குணங்கள் பல வெந்தையக்கீரையில் உள்ளது. நாம் தான் அதை சரியாகப் பயன்படுத்திக்கொள்வதில்லை. ஆரம்பகட்ட சக்கரை ரேயாளிக்கு வெந்தயக் கீரை நல்ல பலனைத் தருகிறது. தீவிர சக்கரை நோயாளர்கள் வெந்தயக் கீரையை சரியானபடி பயன்படுத்தினால் இரத்தத்தில் சக்கரையின் அளவைக் குறைக்க முடியும். வெந்தயக் கீரையை அடிக் கடி உணவில் பயன்படுத்தி வந்தால் மலச்சிக்கல் பிரச்சனை வராது, குடல்புண் இரணத்தை ஆற்றும் குணமும் வெந்தயக் கீரைக்கு உண்டு. வெந்தக் கீரையோடு சிறிது ஓமம் சேர்த்துப் பயன்படுத்தினால் வாயுத் தொல்லை நீங்கும். இப்படி இன்னும் பல நல்ல விளைவுகள் வெந்தையக்கீரையை அடிக்கடி பயன்படுத்தினால் கிடைக்கும்.

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| **வெந்தயக்கீரை** | **ஒரு கட்டு** |
| **கோதுமை மாவு** | **2 கப்** |
| **தயிர்** | **1/2 கப்** |
| **உப்பு** | **தேவையான அளவு.** |

**செய்முறை.**

வெந்தயக்கீரையை சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக்கொள்ளவும். அதில் பாதியை எடுத்து கோதுமை மாவு, தயிர் சேர்த்துப் பிசையவும். தண்ணீர் சேர்க்கக்கூடாது. ஒருமணி நேரம் ஊறவைத்த பிறகு சதுரம் அல்லது முக்கோணமாக மடித்துக்கொள்ளவும். தோசைக்கல்லில் எண்ணேய் விட்டு இரு பக்கமும் வேகவைத்து எடுத்துக்கொள்ளவும். உடல் சூட்டைத் தணிக்கக்கூடியது. குடற்புண், வாய்ப்புண், சக்கரை நோய் உள்ளவர்களுக்கு இந்த வெந்தயக்கீரை சப்பாத்தி நல்ல உணவு.

# வெந்தயக்கீரை பச்சடி



**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| வெந்தயக்கீரை | - | 2 கட்டு |
| கடுகு | - | 1ஸ்பூண் |
| மிளகு | - | 1ஸ்பூண் |
| சீரகம் | - | 1/2 ஸ்பூண் |
| தக்காளி | - | 3 |
| உப்பு | - | தேவையான அளவு. |
| புளித்தயிர் | - | 400 மிலி |
| பச்சைமிளகாய் | - | 5 |

**செய்முறை**

வெந்தயக் கீரையை சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக்கொள்ளவும். அடுத்து மிளகு , சீரகம் இரண்டையும் பொடித்துக் கொள்ளவும். பிறகு நறுக்கிய கீரை,நறுக்கிய தக்காளி, பச்சை மிளகாய்,மிளகு,சீரகம்,உப்பு, சிறிது கொத்தமல்லி ஆகியவற்றை தயிருடன் சேர்த்து நன்கு கலந்துகொள்ளவும்.

இரும்புச்சத்து, நார்ச்சத்து நிறைந்த இந்த பச்சடி குடல் சார்ந்த பிரச்சனைகள் உஷ்ண நோய்களை தீர்க்கக்கூடியது. சக்கரை நோயாளிகள் அவசியம் சாப்பிடவேண்டிய உணவு இது.

மாற்றத்தின் அடிப்படையாக இரு

அறிந்துகொள்வோம்

இந்த 7 சந்தர்ப்பங்களில் தான் பெண்கள் அதிகமாக பொய் பேசு வார்களாம்! பெண்கள் அதிகமாக பொய் பேசும் 7 சந்தர்ப்பங்கள் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது.

பொய்கள் இல்லாத உறவே இல்லை, காதலன் காதலி, கணவன் மனைவி என்று மட்டுமல்ல நண்பர்கள், ஆசிரியர்கள் என எல்லா உறவுகளிலும் பொய்கள் இருக்கின்றன. பொய், சண்டை என்பது உப்பை போல, அது சிறிதளவு இருந்தால் தான் உறவில் இருக்கும் ருசியை உணர முடியும். அதுவே, அதன் அளவு அதிகமாகிவிட்டால் மொத்தமாக நாசமாகிவிடும். அப்படி பெண்கள் ஆண்கள் உறவில், பெண்கள் அதிகமாக பொய் பேசும் சில சுவாரஸ்யமான சந்தர்ப்பங்கள் பற்றி இங்கு காணலாம்...

**சந்தர்ப்பம் 1** கணவன் தன்னிடம் இருந்து மறைக்கும் விஷயங்களை போட்டு வாங்க வேண்டும் என்ற சந்தர்ப்பங்களில், பொய்களை கண்டு பிடிக்க பொய் பேசுவார்களாம்.

**சந்தர்ப்பம் 2** வீண் செலவு செய்ய கணவன் பணம் கேட்கும் போது, தங்களிடம் சேமித்து வைத்த பணம் இருந்தாலும், இல்லை என பொய் கூறுவார்களாம்.

# பெண்கள் அதிகமாக பொய் பேசும் 7 சந்தர்ப்பங்கள்



**சந்தர்ப்பம் 3** குழந்தைகள் செய்த தவறுகளை கணவனிடம் இருந்து மறைக்க காலம், காலமாக அம்மக்கள் பொய் கூறி வருகிறார்கள்.

**சந்தர்ப்பம் 4** கடினமான சூழ்நிலைகள் வீட்டில் நிலவும் போதும் கூட, காதலனிடம் இருந்து மறைத்து, அது காதலனை சங்கடப்படுதிவிட கூடாது, பாதித்து விட கூடாது என பொய் பேசுவார்களாம் காதலிக்கும் பெண்கள்.

**சந்தர்ப்பம் 5** என்னை அவங்க அழகா இருக்கிறதா சொன்னாங்க, இவங்க அழகா இருக்கிறதா சொன்னாங்க என தற்பெருமை தம்பட்டம் அடித்து பொய் பேசுவார்கள்.

**சந்தர்ப்பம் 6** ''இது ரொம்ப ரகசியம், நான் யார்க்கிட்டயும் சொன்னதே இல்ல, உன்கிட்ட சொல்றேன் நீ யார்கிட்டயும் சொல்லிடாத...'' என்று சொல்லிவிட்டு, அனைவரிடமும் அந்த விஷயத்தை கூறி கொண்டிருப்பார்கள்.

**சந்தர்ப்பம் 7** ''நான் பொய்யே பேசமாட்டேன், பொய் பேசுறவங்கள பாத்தாலே எனக்கு பிடிக்காது...'' இப்படி பேசுபவர்கள் தான் அதிகம் பொய் பேசு வார்கள்.

# நீரிழிவினால் ஏற்படும் நரம்புத் தொகுதிப் பாதிப்புக்கள்


## நீரிழிவு ஓர் அறிமுகம்

நீரிழிவு நோயானது, சதையினால் சுரக்கப்படும் இன்சுலின் ஹோமோன் சுரப்பு பெருமளவில் குறைவடையும் போது அல்லது அதன் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படும் போது, குருதியில் குளுக்கோஸ் எல்லை மீறி அதிகரிப்பதால் ஏற்படுகிறது.

அதிகரிக்கும் குருதிக் குளுக்கோஸ் ஆனது உடலின் பல அங்கங்களில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. முக்கியமாக கண், நரம்புத் தொகுதி, இதயம் மற்றும் சிறு நீரகத்தை இது வெகுவாக பாதிக்கின்றது.

கடந்த இருதசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் நீரிழிவு நோயானது பெருமளவில் அதிகரித்துள்ளது. ஆண், பெண் இருபலாரையும் நீரிழிவு சரிசமனாகவே பாதிக்கிறது. நீரிழிவு ஏற்படும் சந்தர்ப்பமானது, பின்வரும் காரணிகளால் அதிகமாகி உள்ளது.

### நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகள்





1. குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் உள்ளமை
2. அதிக உடல்நிறை (உடற்திணிவுச் சுட்டி $\geq$ 25kg /m2)
3. உடற் பயிற்சியின்மை
4. இனம்
5. ஏற்கனவே அறியப்பட்ட நீரிழிவிற்கு முன்னான நிலை
6. கர்ப்பகால நீரிழிவு உடல்நிலை கூடிய பிள்ளைப்பேறு >4kg
7. உயர்குருதியமுக்கம் ( $\geq$ 140/90 mnHg)
8. அதிகரித்த கொலஸ்ரோல் (HDL < 35mg/dl, TG >250mg/dl)
9. சூலக நீர்க்கட்டிகள் (Polycystic ovarian disease)>, தோல் மடிப்புக்களில் கருமை படர்ந்த நிலை (Acanthosis nigricans)

உலக சுகாதார நிறுவனமானது நீரிழிவு நோய் நிர்ணய எல்லையை பின்வருமாறு கூறுகிறது. குணங்குறிகள் உள்ள நோயாளரில் பின்வரும் ஓர் ஆய்வுகூட முடிவும், குணங்குறிகளில்லாதவர்களிற்கு இரு வெவ்வேறு ஆய்வுகூட முடிவுகளும் தேவைப்படுகிறது.

1. 08 மணித்தியாலங்கள் உணவு எதுவும் உட்கொள்ளாமல் குருதியில் குளுக்கோஸ் அளவு > 7.0mm 1/l (126mg/dl) (Fasting Plasma Glucose)
2. எழுந்தமான குருதிக் குளுக்கோஸ் அளவு >11.1mm o1/L (200mg/dl) (Random plasma glucose)
3. HbA1c> 6.5 நீரிழிவானது குணப்படுத்தமுடியாததாயினும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியது

மருத்துவம்

# நரம்புத் தொகுதி ஓர் அறிமுகம்



மனித நரம்புத் தொகுதி முழுவதும் சிறப்புக் கலங்களான நரம்புக் கலங்களால் (Neurone) ஆனது. அது தூண்டல்களை வாங்கி நரம்புகளினூடான கணத்தாக்கங்களாக விளைவு அங்கங்களிற்கு கடத்தும் தொழிலைச் செய்கிறது. இதனால் மனித உடலானது தூண்டல்களிற்கேற்ற ஒருங்கிணைந்த துலங்கல்களை விளைவுகளாக காட்டக் கூடியதாகவுள்ளது.

மனித நரம்புத் தொகுதியானது விசேடமாக கடந்த காலங்களில் பெற்ற தரவுகளை சேமித்து ஒருங்கிணைத்து தேவையான பொழுதுகளில் வழங்கி பகுத்தறிவாகிய ஆறாம் அறிவால் உயர்ந்து விளங்குகின்றது.

நரம்புத் தொகுதியானது மைய நரம்புத் தொகுதி (Central nervous system) சுற்றயல் நரம்புத் தொகுதி (peripheral nervous system), தன்னியக்க நரம்புத் தொகுதி (Automatic nervous system) என வகைப்படுத்தப்படுகிறது.

மைய நரம்புத் தொகுதியானது, மூளையையும் (Brain) முன்னாணையும் (Spinal Cord) கொண்டது.

சுற்றயல் நரம்புத் தொகுதியானது, மண்டையோட்டு நரம்புகளையும் (Cranial nerves) முன்னாண் (Spinal nerves) நரம்புகளையும் கொண்டது.

தன்னியக்க நரம்புத் தொகுதியானது பரிவு (sympathetic)> பராபரிவு (Parasympathetic). நரம்புகளைக் கொண்டது.

தன்னியக்க நரம்புகள் இதயம், சுரப்புகள் மற்றும் வழவழப்பான தசைகளின் தொழிற்பாட்டிற்கு உதவுகிறது. உடலில் அவசர நிலைமைகளின் போது பரிவு நரம்புகளும் சக்தி சேமிப்புக்கும் புதுப்பித்தலிற்கும் பராபரிவு நரம்புகளும் தொழில் ஆற்றும்.

மூளை மற்றைய அங்கங்களைப் போலன்றி குளுக்கோசை மாத்திரமே போசனைப் பொருளாக பயன்படுத்துகிறது. அதனால் குருதிக்குளுக்கோஸ் கூடியநிலையிலும் குறைந்த நிலையிலும் மூளையானது பாதிப்படைகிறது.

**01 நீரிழிவு நோயாளர்களில் ஏற்படும் நரம்புப் பாதிப்புகள்**

நீரிழிவினால் ஏற்படுகின்ற உயர்மட்ட குளுக்கோஸ் ஆனது, குருதிக் குழாய்களில் இருவேறு விதமான சிக்கல்களை உருவாக்கும்.

1. பருமனான குருதிக்குழாய்ச் சிக்கல்கள் உதாரணம் :- பாரிசவாதம் (Stroke) (Macro vascular Complications)
2. நுண்ணிய குருதிக்குழாய் சிக்கல்கள் உதாரணம் - நீரிழிவு நரம்புப் பாதிப்பு (Diabetic neuropathy) (Micro vascular Complications)

**பாரிசவாதம்**

மூளைக்கு குருதியானது இரு பெரும் நாடிகளுடாக (Carotid & Vertebral) வழங்கப்படுகிறது. அந்நாடிகளிலோ அல்லது அதன் கிளைகளிலோ ஏற்படும் கொழுப்புப்படிவுகளாலும் அவை உடையும் போது ஏற்படும் இரத்த உறைவுக் கட்டிகளாலும் உண்டாகும் அடைப்பு மூளையில் ஏற்படுத்தும் பாதிப்பினாலேயே பாரிசவாதம் உருவாகிறது.

திடீரென்று ஏற்படும் இரத்தோட்டக் குறைவினால் மூளையின் அப்பகுதி படிப்படியாக இறப்படைய நேரிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மூளைப்பகுதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் உடல்பகுதி செயலிழக்கிறது.

- பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரிலும் பார்க்க நீரிழிவு நோயாளர்களில் இருமடங்காகவும் துரிதமாகவும் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

be bold for change
மார்ச் 08

**நீரிழிவு நோயாளர்களில் பாரிசவாதம் ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகளாவன**

1. குருதிக் குளுக்கோஸ் கட்டுப்பாடில்லாமல் இருத்தல்.
2. அதிகரித்த உடற்பருமன். (Metabolic Syndrone)
3. அதிகரித்த குருதிக் கொலஸ்ரோலின் அளவு.
4. புகைப்பிடித்தல்.
5. குடும்பத்தில் பாரிசவாதம் உள்ளமை.
6. அதிகரித்த வயது.
7. சிறு நீரில் அல்புமின் (Micro Albuminuria) வெளியேறல்.

நீரிழிவு நோயாளர் பாரிசவாதத்தைத்தடுக்க செய்ய வேண்டியவை

1. குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
2. உடல் பருமனைக் குறைத்தல்.
3. இரத்த அமுத்தத்தைக் கட்டுப்படுத்தல் (< 130/80 mm Hg)
4. இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் குறைத்தல்.
5. புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்.
6. பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் (Aspirin, Clopidogrel ) போன்றவற்றை தவறாது உள்ளெடுத்தல்.

பாரிசவாதம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் (ஒரு பக்க கையோ அல்லது காலோ அல்லது கையும் காலுமோ செயலிழத்தல், பேச்சுத் தடை, நடைத் தள்ளாட்டம், திடீர் கண்பார்வைக் குறைவுகள்) உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் குருதிக்கட்டியை கரைக்கும் மருந்து (Thrombolytic Therapy) பாரிசவாத அறிகுறி ஏற்பட்டு முதல் 4 1/2 மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படல் வேண்டும்.

பாரிசவாதம் ஏற்பட்ட பின்னும் தவறாது மருந்துகளை உட்கொள்வதோடு உடற்பயிற்சிகள், ஆலோசனைகள் என்பவற்றை ஒழுங்காக பெற்றுக் கொண்டு மேலுமொரு தாக்கம் வராமல் பாது காக்க வேண்டும்.

**02. நீரழிவால் ஏற்படும் நரம்பு நோய் (Diabetic neuropathy)**

நரம்புகளிற்கு குருதியை வழங்கும் நுண் குருதிக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் நீண்ட கால உயர் குருதிக் குளுக்கோஸ் ஆகியவற்றால் இது ஏற்படுகிறது. வயதான நோயாளர்களில் இது நிரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே இணங்காணப்படலாம். ஆனால் இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவை உடையவர்களில் நீரிழிவு ஏற்பட்டு 10-20 வருடங்களின் பின்பே இது வெளிக்காட்டப்படுகிறது. இது பின்வருமாறு வகைப்படும்.

1. சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு (Symmetrical mainly sensory polyneuropathy Distal)
2. சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு (Acute painful neuropathy )
3. ஒற்றை நரம்புப் பாதிப்பு பல்வேறு ஒற்றை நரம்புகள் தனித்தனியாகப் பாதிக்கப்படல். (mononeuropathy and Mono neuritis multiplex)
4. சமச்சீரற்ற இயக்க நரம்புப் பாதிப்பு (Diabetic amyotrophy)
5. தன்னிக்க நரம்பு நோய்கள். (Autonomic neuropathy)

**1. சமச்சீரான உணர்ச்சி நரம்பு பாதிப்பு**

இதன் ஆரம்ப அறிகுறிகளாவன நோவையோ வெப்பத்தையோ அல்லது அதிர்வுகளையோ உணரமுடியாத விறைப்பு நிலையாகும். இதன் நாட்பட்ட நிலைகளில் பஞ்சின் மேல் நடப்பது போல் உணர்வார்கள்.

கால்களே கைகளைவிட அதிகம் பாதிப்படையும். உணர்ச்சிகள் குறைவுறுவதால் சிறுசிறு காயங்களும் கவனிக்கப்படாமல் கொப்புளங்களாகவோ அல்லது புண்களாகவோ காணப்படும். மூட்டுகளிற்கான நரம்புப் பாதிப்பு நரம்பிழந்த மூட்டுக்களாக (Charcot's joints) உருவாகும்.

**2. சருதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு**

நோயாளிகள் கால்கள், பாதங்கள் போன்றவற்றில் எரிவு, நோ போன்றவற்றைக் கொண்டிருப்பர். இரவுகளில் கூடுதலாக இருக்கும். படுக்கை விரிப்பின் அழுத்தமே தாங்க முடியாமல் அவதியுறுவர். இது நீரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே காணப்படலாம். அத்துடன் குருதிக் குளுக்கோசை திடீரென கட்டுப்பாட்டில் கொண்டுவரும் போதும் இது ஏற்படுகிறது. நீரிழிவை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இது தானாகவே 3-12 மாதங்களில் மாறும்.


இதில் ஒரு வகையானது நாட்பட்ட நோவுடனா பாதிப்பு நீண்டகால நோயாளிகளிலே இது ஏற்படுகிறது. சிகிச்சை பலன் அளிப்பதும் கடினம்.

**3. தனித் தனி நரம்புகளின் பாதிப்பு**

இந்த வகையான பாதிப்பு உடலின் எந்த நரம்பையும் பாதிக்கலாம். கண்தசை நரம்புகள் கூடுதலாகப் பாதிக்கப்படும். தானாகவே 3-6 மாதங்களில் முழுமையாக குணமடையும்.

**4. நீரிழிவால் ஏற்படும் தசை மெலிவு**
(DM amyotrophy)

வயதான ஆண் நீரிழிவு நோயாளர்களிலேயே இது கூடுதலாக ஏற்படும். நோவுடன் கூடிய தசை மெலிவு ஏற்படும். தொடைகள் தோள்களே பாதிக்கப்படுகிறது. தொடவே முடியாதவாறு நோவாக இருக்கும். இது சரியாக குருதிக் குளுக்கோஸை கட்டுப்படுத்தாதவர்கால்களிலேயே காணப்படுகிறது. இது குருதியில் குளுக்கோசைக் கட்டுப்படுத்த சுகமாகிவிடும்.



**5. தன்னியக்க நரம்பு நோய்கள்**

நீரிழிவு நோயாளர்களில் இப் பாதிப்பு கூடுதலாக குணங்குறிகள் வெளிக்காட்டப்படாமலே இருக்கும். அரிதாகவே குணங்குறிகள் வெளிக்காட்டப்படும். படுக்கையிலிருந்து எழும்போது ஏற்படும் தலைச் சுற்று ஓய்வு நிலையிலும் அதிகரித்த இதய ஓட்டம், தொடர்ச்சியான வாந்தி, இரவில் வயிற்றோட்டம் போன்றவை இதனால் ஏற்படுகிறது.

ஆண்மைக்குறைவும் (Impotence) இதனாலேயே ஏற்படுகிறது.

நீரிழிவு நோயாளர்கள் நரம்புப் பாதிப்பை தவிர்க்க குருதிக் குளுக்கோஸை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கால்களை கிரமமாக அவதானித்து காயங்கள், புண்கள் ஏற்படுவதை உடனுக்குடன் கண்டு சிகிச்சை பெற வேண்டும்.

**நீரிழிவை வெற்றிகொண்டு பாதிப்புக்கள் ஏற்படாது வாழ்வோமாக.**

**வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜ் , வைத்திய கலாநிதி சிவதி. பிரதீபன்**

**(நரம்பியல் நிபுணர்) நரம்பியல் பிரிவு**

**நரம்பியல் பிரிவு யாழ் போதனா வைத்தியசாலை**

**யாழ் போதனா வைத்தியசாலை**

# காதல் முதல் கல்லறை வரை.

**''கண்ணில் ஒரு வலி இருந்தால்
கனவுகள் வருவதில்லை ....
பூங்காற்றிலே உன் சுவாசத்தை
தனியாக தேடி பார்த்தேன்....''**

செவிகளுக்கு இனிமையான பாடல் பக்கத்து வீட்டில் ஒலிப்பினும் கயல் கண்களில் கண்ணீரையே வரவழைத்திருந்தது. கருவிழியை மறைத்திருந்த கண்ணீர் வழிய வாசலை வெறித்துப்பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

படலை திறக்கும் சத்தம்கேட்டு விழிநீர் துடைத்து வில்லங்கமாய் இதழ் சிரித்து கதவை அடைந்தாள் கயல்.

எப்பொழுதும் கட்டவிழ்த்த ஆட்டைப்போல துள்ளிவரும் தன் மகன் நடை தளர்ந்து மெய் சோர்ந்து வருவதைக் கண்டு கட்டி அணைத்து காரணம் வினவினாள். அதற்குவிடையாய்,

''அப்பா எப்போ மா வருவார்?'' என்னும் வினாவே கிடைத்தது சக்தியிடமிருந்து.

அவ் வினாவிலேயே பள்ளியில் என்ன நடந்திருக்கும் என்ற விடை கிடைத்துவிட்டது அவளிற்கு. பாவம் அந்த பிஞ்சிடம் எப்படி சொல்வாள் அவன் தந்தை இனி வரப்போவது இல்லை என. இறந்திருந்தாலும் இறைவனிடம் சென்றாரடா மகனே எனலாம், அதுவும் இல்லையே எப்படி புரியவைப்பாள்? அடுப்படி கறை படிந்த அந்த முந்தானையில் அவன் மூக்கை துடைத்துவிட்டு ஏதோ சாட்டிற்கு சமாதானம் செய்தாள்.

உணவு ஊட்டி மடிமீது உறங்கவும் வைத்தாள்.

தானும் பூச்சு பூசாத அந்த முரட்டுச் சுவற்றில் தலைசாய்த்து உறங்க எத்தனிக்கையில், வாடிக்கையாளர் ஒருவர் நாளை நடைபெற உள்ள சந்நிதி ஆலய திருவிழாவிற்கு செல்வதற்காக சாறி பிளவுஸ் தைக்க தந்ததும் இன்று பின்னேரம் தருவதாக வாக்களித்ததும் நினைவிற்கு வந்தது. பதறி எழுந்து ஓடினாள் தையல் இயந்திரத்திடம்,

அழகாய் வெட்டி வைத்த துணிகளை இணைத்து தைக்கலானாள் கயல். சுழல்கின்ற தையல் சக்கரத்துடன் அவளது நினைவுகளும் கடந்த காலத்தை நோக்கி சுழன்றது..

கயல் பெயரிற்கு ஏற்ற பேரழகி, தாய் தந்தையின் செல்ல மகள். அண்ணனின் சுட்டித் தங்கை, பள்ளியில் முதல் மாணவி. நண்பர் கூட்டத்திற்கு தலைவி. இப்படி அவள் வகிக்கும் பாகங்கள் பல. நடுத்தர குடும்பம் எனினும் வீட்டில் அவள் தான் மகாராணி. வழமை போல அன்றும் பள்ளிக்கு கிளம்பினாள் கயல். சீராக இரட்டை ஜடை பின்னி இமைகள் இடையே பொட்டிட்டு தேவதையாக நண்பியர் கூட்டத்திற்கு மத்தியில் நடந்து சென்றாள். அப்பொழுது அவள் தோழி அகிலாவின் குரல்'' அடி கயல் அவன பாரடி உன்னத் தான் பாத்திட்டே நம்ம பின்னாடி வாறாண்டி'' என்றாள் மெதுவாக. அந்த உருவத்தின் மீது தன் கடைக்கண் பார்வையை வைத்தாள். அவன் அவனேதான்.

இவனா!! இவன் ஏன் என் பின்னால வாறான் குழப்பத்துடன் நடந்தாள். அவன் பெயர் ஊர் எதுவும் தெரியாது. அனால் அவனை ஒருமுறை பார்த்துள்ளாள் கயல்.

அன்று தன் அண்ணனுடன் ஆலயம் சென்று வரும்போது அவன் ஒரு சிறுவனை வீதியில் வைத்து அடித்துக்கெண்டிருந்தான். அவள் தமயன் ''கயல், பார் சின்னப் பையன் கிட்ட தன் வீரத்த காட்டுறான்'' என்று கூற 'பொறுக்கி' என அவளும் உள்ளுக்குள் திட்டிக்கொண்டே கடந்து சென்றனர். ஆயினும் அவன் இவர்களை கண்டு கொண்டதாய் தெரியவில்லை.

அன்று பார்த்த அவன் இன்று ஏன் என்பின் வருகிறான் குழப்பமும் பயமும் தொற்றிக்கொள்ள வேகமாக நடந்தாள். ஆயினும் அவன் முன்னால் சென்று வழிமறித்தான் .


''கயல் உன்கூட கொஞ்சம் பேசணும் தனியா''

விழி அகன்று எச்சில் விழுங்கி நின்ற கயலை நோக்கி மேலும் தொடர்ந்தான்.

''உனக்கு என்னை தெரியாது, ஆனாலும் நான் உன்ன மூணுமாசமா தொடர்ந்து வந்திட்டிருக்கன், இன்னைக்குதான் உன் முன்னாடி வந்து பேச தைரியம் வந்திச்சு''

தளர்ந்த குரலில் தயங்கி தயங்கி அவன் பேசியது கயலிற்கு தைரியத்தை வரவழைத்தது.

'' என்னால தனியா எல்லாம் வரமுடியாது. அதோட சின்ன பையன்கிட்ட தன் வீரத்த




காட்டுற ரௌடிகிட்டலாம் பேசுறதுக்கு ஒண்ணுமில்லை'' என்று கூறி நடந்தாள்.

''கொஞ்சம் நில்லு கயல், அன்னைக்கு அவன் நீயும் உங்க அண்ணனும் கோவில் வாசலில் கழட்டி வைச்ச செருப்பை களவெடுக்க பாத்தான், அதுதான் அடிச்சன் என்ன தப்பா நினைக்காதே மா'' என்று பரபரப்பாய் சொல்லி முடித்தான்.

கயல் சற்று நிதானித்தாள் ''ஹெய் கொஞ்சம் வெய்ட் பண்ணுங்கடீ'' என்று நண்பியரை பணித்துவிட்டு

''ஏன் நீங்க என் பின்னாடி வாறிங்க'' ''உங்களுக்கு என்ன வேணும்'' என்பதற்குள்

''கயல் நா உன்ன அதே கோவில்லதான் ஒருநாள் பாத்தன், பாத்த நாள்ள இருந்து உன்னையேதான் நினைச்சிட்டு உன் பின்னாலயே சுத்திட்டு இருக்கன்,

நீ என்கூட இருந்தா என்னோட வாழ்கை மட்டுமில்லாம உன் வாழ்க்கையும் நல்லா இருக்கும் என்று நினைக்கிறன், நான் உன்னை விரும்புறன் கயல்'' என்றான்.

அவன் பேச்சு அவளை கவரத்தான் செய்தது ஆயினும் கோபமாக

''முதல்ல நீங்க யாரு, எனக்கு இதெல்லாம் பிடிக்காது வழியவிடுங்க, நான் போகணும்'' என்றாள்.

''இல்ல கயல் ப்ளீஸ் நில்லு, இன்னைக்கு எனக்கு பிறந்தநாள் அதுதான் இன்னைக்கே என் லவ்வ சொல்ல வந்தன், ப்ளீஸ் கயல்'' எனும் அவனது கெஞ்சல் அவளிடம் சற்று இரக்கத்தையும் ஏற்படுத்தியது.

''எனக்கு இந்த காதல் எல்லாம் சரிவராது என்னை விட்டுடுங்க'' என கூறிவிட்டு நடந்தாள். ''கயல்... கயல்...'' பின்னிருந்து அவன் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில்''கயல் என்னோட பிறந்த நாளையே என் இறந்த நாளா மாத்திடாத, நில்லு'' ஆக்ரோஷமாக கேட்ட குரலால் அதிர்ந்து திரும்பினாள்.

கயல் தனக்குள் உண்டான கலவரத்தை மறைத்தபடி ''ஐயோ! ஏதும் பண்ணாதீங்க, நான் கதைக்கிறன், பள்ளிக்கூடம் விட்டு வரும் போது இதே இடத்துக்கு வாங்க'' என்று சொல்லி கிளம்பினாள்.

அவளது பதில் அவனை மகிழ்வித்தது. பள்ளியும் முடிந்தது. எப்போதும் முதல் ஆளாய்



வெளிவரும் கயலை காணவில்லை. எல்லோரும் செல்கிறார்கள். இறுதியாக கயலின் நண்பிகளும் வந்தாயிற்று. பொறுமை இழந்தவன், அவள் நண்பி அகிலாவிடம் விசாரித்தான்.

கணக்கு வாத்தியார் பரீட்சை பேப்பர் திருத்துவதற்கு உதவியாக வைத்துள்ளதாய் சொல்லிக்கொண்டே ஓடினாள்,

ஆயினும் அவள் பேச்சில் இவனிற்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஏனெனில் அவன் பின்தொடர்ந்த வரை அவள் தாமதமாக வந்ததே இல்லை, ஒருவேளை தனக்குப் பயந்து வேறு பாதையால் போயிருப்பாளா, வாய்ப்பே இல்லை இருக்கும் ஒரு வழியும் இதுதான். இல்லை பள்ளிக்கூடத்திலேயே ஒழிஞ்சிருக்காளா? அகிலா சொன்னது உண்மைதானா இல்லை கயலிற்கு ஏதும் ஆபத்தா???

குழப்பமும் பயமும் அவனை வாட்டியது
கயல் எங்குதான் போனாள்!!!!!

**நினைவுகள் நீளும்....**

தருவதுசுகன்ராஜ்

மாற்றத்தின் அடிப்படையாக இரு

மகளிர் தின சிறப்பு சிறுகதை

# கானல் நீரும் கலைந்த கனவுகளும்



எனக்கு கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அழுகை வந்தது. ச்சே எத்தனை எதிர்பார்ப்பு, எத்தனை ஆசைகள் எல்லாம் தவிடுபொடியாயிற்றே என்னும் நினைப்பே வேதனையை அதிகரித்து என்னை மேலும் மேலும் அழத் தூண்டியது. எவ்வளவு ஆசையாய் வளர்த்த செடி கொடிகள், பூவும் பிஞ்சுமாய் கண்ணுக்கு இனிமையாக மாடியெங்கும் பசுமையாக இருந்ததே. பார்க்கப் பார்க்க தாங்க முடியாத கவலையாக இருந்தது. கேட்பவர்களுக்கு இது இயல்பாக இருக்கலாம் ஆனால் செடி,கொடிகளை உயிராகக் கருதி, அவற்றுடன் நட்போடு பேசி அவை வளரும்போது கூடவே சேர்ந்து பூரித்துக் கொள்பவர்களுக்கு எனது கவலை உறுதியாகப் புரியும்.

அப்பாவிற்கு வேலை மாற்றலாகி இந்த வீட்டிற்கு வந்த பின்னர், பள்ளி விடுமுறைக்காலத்தில் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று தொடங்கிய மாடித் தோட்டம். செடி கொடிகளில் ஆர்வம் உள்ளதால் எனக்கும் அவற்றிற்குமிடையேயான பாசப் பிணைப்பை விட்டுவிட மனமின்றிச் சிறிய அளவில் ஆரம்பித்துச் சிறிது காலப் பகுதிக்குள் மாடிப் பகுதியையே ஒரு பசுமைத் தோட்டமாக மாற்றி வைத்திருந்த எனக்கு இப்போதைய நிலையைப் பார்க்கும்போது அழுகை வருவதில் வியப்பு ஏதுமில்லை.

''அடுத்த ஆண்டு உனக்கு முதன்மையான தேர்வு இருக்கின்றது இதுதான் உன்னுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கும், இப்போது எதற்கு உனக்கு இந்தத் தோட்டம் துரவெல்லாம். இப்போது ஆரம்பித்தால் நாள் முழுதும் செடி கொடிகளோடே கதை பேசிக்கொண்டிருப்பாயே, அடுத்த ஆண்டு முடியட்டும்'' என்று சொன்ன அம்மாவையும் மீறி ஆரம்பித்த என் கனவுத் தோட்டம்.இன்று என் கண்முன்னே கலைந்து கிடக்கின்றது.

அம்மாவிற்கும் ஆர்வம் இருந்தும் என்னுடைய கல்விக்காகவே இந்த ஆலோசனையிலிருந்து அவர் பின்வாங்கினார்.ஆனால் என் ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவே வாழும் அப்பாவிற்கு முன்னால் அந்த ஆலோசனைகள் ஒன்றுமில்லாதவையாகிவிட்டன. ''செடி வளர்ப்பதென்பது நல்லதுதானே, நலமாக வாழ வழி சொல்லும்போது நீ ஏன் அவளுடைய படிப்பை மட்டும் பார்க்கின்றாய் இதுவும் வாழ்க்கைப் பாடம்தானே'' என்ற பதிலால் என்

ஆசைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மறுநாளே செடி வளர்ப்பதற்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட செடி வளர்ப்புப் பைகள், மண்,மண்புழு உரம், தேங்காய் நார் கழிவுக் கட்டிகள், விதைகள் என எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு வந்தோம். மூன்றுபேருமாக செடி வளர்ப்புப் பைகளில் மண் கலவைகளை இட்டு விதைகளை விதைத்திருந்தோம். தினமும் காலையில் எழுந்ததும் மொட்டை மாடிக்கு ஓடிச்சென்று எந்தப் பையில் எந்த விதைகள் முளைத்திருக்கின்றன என்று கணக்கெடுப்பதே என் முதல் வேலையாக இருந்தது.

நாளடைவில் எங்கள் தோட்டத்தின் விதைகள் சிறிது சிறிதாக முளைத்து செடி, கொடிகளாகின. காலை, மாலை என இரண்டு நேரமும் அவற்றுடனேயே பொழுது கழிந்தது. பாடசாலை ஆரம்பித்ததும்கூட இதே வழக்கம் தொடர்ந்தது. பாடசாலையிலும் என்னுடைய மாடித் தோட்டம் பற்றிய பெருமைகளைச் சொல்லத் தவறவில்லை.

ஒரு வரிசையில் கத்தரி, இன்னொரு வரிசையில் தக்காளி, இன்னொன்றில் மிளகாய், வெண்டை எனப் பல வரிசை களில் செடிகளும், அதை அடுத்தாற்போல் கீரை, கொத்தமல்லி,புதினா போன்றவையும் மற்றொருபுறத்தில் பாகல், பயற்றங்காய், பூசணி என கொடிகளுமாக வளர ஆரம்பித்திருந்தது. இணையப் பக்கங்களில் இருந்து இயற்கை முறையில் காய்கறிகளை விளைவிப்பதற்கான முறைகளையெல்லாம் ஒரு ஆய்வுப் படிப்பிற்குரிய மாணவியைப் போன்று ஆராயத் தொடங்கினேன்.

உயிர்காக்க உணவளிக்கும் உழவர்கள் போல் என்னை எண்ணிக்கொண்டு அப்பாவிற்கே ஆலோசனைகளை அள்ளி வழங்கினேன். அப்பா! நாம் விதைகள் போடும்போதே மண்புழு உரமெல்லாம் போட்டிருக்கின்றோம். ஆனால் நிலவள ஊக்கியான அமிர்த கரைசலை உருவாக்கிப் பயன்படுத்தினால் செடிகளெல்லாம் நன்றாக வளருமாம் அதை நாமும் உருவாக்கிப் பயன்படுத்தலாமா?'' அந்த ஆலோசனையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பால்காரம்மாவின் உதவியுடன் மாட்டு சாணம், மாட்டு மூத்திரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டோம். மேலும் நெய், பசும்பால், பசுந்தயிர், இளநீர்,வெல்லம், பூவன் பழம் என எல்லாவற்றையும் குறிப்பிட்ட நாட்கள் இடைவெளிப்படி முறையாகக் கலந்து முப்பது நாட்களின் முடிவில் அமிர்த கரைசல் உருவாக்கப்பட்டது. தண்ணீரோட்டு சேர்க்க வேண்டிய விழுக்காட்டின்படி சேர்த்து அதுவும் தெளிக்கப்பட்டாகிவிட்டது.

''அப்பா மீன் அமிலம் எனப்படும் இயற்கை உர உருவாக்க முறை ஒன்றைப் படித்தேன்.நாட்டுச் சர்க்கரையும் மீன் கழிவையும் ஒன்றாகச் சேர்த்து இறுக்கமாக மூடி வைத்து நாற்பத்தைந்து நாட்கள் கழித்து எடுத்தால் பழ வாசனை அடிக்குமாம், அதைத் தண்ணீரோடு கலந்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டுமாம்''

''என்னம்மா நீ புதிது புதிதாக என்னமோ சொல்கின்றாய், இதை இன்னொருமுறை செய்துகொள்வோமே'' என்று அப்பா நிறுத்திக் கொண்டார். ஆனால் அம்மா ''அவள் சொல்வது உண்மைதான். நான் ஊரில் இருக்கும்போது மீன் கழிவுகளை அப்படியே கருவேப்பிலை, எலுமிச்சைச் செடிகளுக்குக் கீழே புதைப்பதைப் பார்த்திருக்கின்றேன். அது நன்றாக வளர்ந்து காய்த்துக் கொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் தெரியவில்லை. இவள் சொல்லும்போதுதான் புரிகின்றது'' என்று என் (இணையக்)கண்டுபிடிப்பிற்கு பாராட்டுப் பட்டயம் வழங்கினார்.

இலைகள் எல்லாம் சிறு தளிர்களில் இருந்து பெரிதாகி, ஒவ்வொன்றாய் அதிகமாகி அனைத்து மரங்களும் வளரத் தொடங்கியது. மாலையில் செடி கொடிகளோடு ஒருத்தியாகப் போய் அமர்ந்துகொண்டு ஒவ்வொரு செடியும் வளர்ந்திருக்கும் முறையைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்திருக்கும்போது செடிகளின் புன்னகையோடு பக்கத்து வீட்டுத் தமிழினி அக்காவின் புன்னகையும் சேர்ந்தே கிடைத்தது.

என்னிடம் புன்னகைக்கும் அவர் அலைபேசியில் கோவமாகவும், சில சமயங்களில் அழுதவண்ணமும் பேசு வதைக் கவனிக்கவும் தவறவில்லை. நிச்சயமாகி இருப்பதாக அம்மாவும் தமிழினி அக்காவின் அம்மாவும் இந்த வீட்டிற்கு வந்த புதிதில்; அறிமுகமான நாளில் பேசிக்கொண்டது நினைவுக்கு வந்தது.'' அந்தப் பெண் நல்ல திறமையாளியாம், பல்கலைக் கழகத்திலேயே முதலிடமாம், இப்போது ஏதோ பெரிய பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைத்திருக்கின்றதாம், என்னென்னமோ படித்திருக்கின்றாள்.

அப்பெண் நல்ல திறமையாளிதான்'' என்று அம்மா பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் அன்றிரவு.

அக்காவைப் பிடிப்பதற்கு எனக்குத் தனிப்பட்ட முறையில் இன்னுமொரு முக்கிய காரணமும் இருக்கின்றது. மாடியில் மட்டுமன்றி வீட்டின் முன்வாசல் பகுதியிலும் அதிகளவு பூமரங்களை வைத்துப் பராமரித்து வருகின்றார். மாடிப் பகுதியில் மட்டுமே நாங்கள் வசிப்பதால் கீழே பூ மரங்களை நட்டு வளர்க்க முடியாத ஆசையை அந்த அக்காவின் பூ மரங்களைப் பார்த்துதான் நிறைவேற்றிக் கொண்டிருந்தேன்.

அன்றும் வழக்கம்போல எழுந்து முகம்கூடக் கழுவாமல் மாடிக்குச் சென்ற எனக்கு இன்ப அதிர்ச்சி. அங்கொன்றும் இங்கொன்றுமாக மஞ்சள் நிறத்தில் பூக்களைத் தாங்கிய வண்ணம் தக்காளிச் செடிகள் புது மலர்ச்சியுடன் நின்றிருந்தது.

''அப்பாஆஆஆ .... அம்மாஆஆஆஆ...... '' என்று கத்தியபடியே வீட்டிற்குள் ஓடிச் சென்றேன். ''அப்பா தக்காளிச் செடி பூத்துவிட்டது.....'' எதிர்ப்பட்டவரிடம் சொல்லிக்கொண்டே சமையலறையை நோக்கி ஓடினேன் '' ''அம்மா தக்காளி பூத்திருக்கின்றது '' என்றேன். ''தெரியும் இலக்கியா, நேற்றுப் பார்க்கும்போதே மொட்டு சிறிய அளவில் இருந்தது.'' என்றபடி மீண்டும் அடுப்பிலிருந்த உணவை கவனிக்கத் தொடங்கினாள். நேரத்திற்கு எல்லாவற்றையும் முடித்துவிட்டு வேலைக்குக் கிளம்பவேண்டுமே என்ற வேகம் அவளுக்கு.

எனக்கும் முன்கூட்டியே செடிகளின் மாற்றம் ஓரளவுக்குத் தெரிந்திருந்தது. அரும்புகள் தோன்றியிருந்ததைப் பார்க்க முடிந்தது.ஆனால் பூக்களாக மலர்ந்து செடிகளில் எல்லாம் மஞ்சள் மஞ்சளாக நிறைந்திருந்து மனதைக் கொள்ளை கொண்ட அழகைப் பார்த்த என்னால் இருப்புக்கொள்ள இயலவில்லை. பாடசாலையில் ஒன்றாகப் படிக்கும் இசையரசிக்கும் அழைப்பு எடுத்துச் சொன்னேன். பின்னேரம் வந்ததும் பக்கத்து வீட்டுத் தமிழினி அக்காவுக்கும் காட்ட வேண்டும் என்று எண்ணியபடியே குளிக்க சென்றேன்.

அதன் பின்னர் ஒவ்வொரு செடியாகப் பூக்கத் தொடங்கியது. ''என்ன பூவெல்லாம் பூக்க ஆரம்பித்து இத்தனை நாளாகிவிட்டது. இன்னும் காய்கள் வரவில்லையே'' என்றபடி இலைகளை நகர்த்திப் பார்த்துச் செடிகளில் தேட ஆரம்பித்துவிட்டேன். ஆனால் காய்க்குப் பதிலாக தக்காளி,அவரைச் செடிகளில் பூச்சி பிடிக்கத் தொடங்கியிருந்தது.

''என் செடிகளில் வந்து தாக்குதல் நடத்தும் அதிகாரம் இந்தப் பூச்சிகளுக்கெல்லாம் எப்படி வந்தது. எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டுகின்றேன் பாருங்கள் '' என்றபடி இணைய மந்திரத்தை மறுபடியும் கையிலெடுத்தேன்.வேப்பம் புண்ணாக்கை ஒரு மெல்லிய துணியில் கட்டி, நீரில் பாதி நாள் ஊற வைத்து அந்த சாற்றை எடுத்து செடிகளுக்கு தெளித்தால் பூச்சி போய்விடும் என்று முயற்சி செய்தேன். இந்த தடவை அம்மாவின் துணையோடு பூச்சிகளுக்கெதிரான போர் நடாத்தி முடிக்கப்பட்டது.

தக்காளியில் இருந்த பூச்சிகள் கொஞ்சம் இரக்கம்காட்டி நகர்ந்து போயிருந்தது. ஆனால் அவரைச் செடியில் கறுப்பாய் கூட்டம் கூட்டமாய் வந்து அமர்ந்திருந்த பூச்சிகள் போவதாய்த் தெரியவில்லை. உன்னை விட்டு நகர்வேனா என்பது போல கூட்டம் கூட்டமாக வந்தமர்ந்து எரிச்சலைத் தந்தது. ச்சே என்ன பூச்சிகள் இவை இப்படி வந்து என் செடிகளையெல்லாம் பாழாக்குகின்றனவே என்ற சினம் எழுந்தது.

சிறிய அளவில் மாடியில் செடி வைத்திருக்கும் எனக்கே இந்த அளவுக்கு கோவம் வருகின்றதே.இதையே தொழிலாகச் செய்பவர்களுக்கு எப்படி இருக்கும். உழவர்கள் என்ன செய்வார்கள், இதுபோல் எத்தனை தொல்லைகளைத் தாண்டி நமக்கான உணவுப் பொருட்களைத் தந்து கொண்டிருக்கின்றார்கள் என்று எண்ணும்போது கவலையும் நன்றியும் சேர்ந்தே வந்தது. எத்தனை தடைகளைத் தாண்டி இந்தக் காய்கறிகள் நம்மிடம் வந்து சேர்கின்றன என்ற சிந்தனை வந்ததால் அன்றிலிருந்து பிடிக்காத காய்கறிகளைக் குப்பைத் தொட்டியில் போடும் பழக்கமும் நின்று போனது.

ஆனால் இந்தப் பூச்சிகளை எப்படி ஒழிப்பது என்று யோசித்தபோது திடீரென்று பொறி தட்டியது. இதுதான் அசுவினிப் பூச்சியா? இதைப்பற்றி படித்திருக்கின்றோமே என்ற நினைவு பிறக்க அதற்கான தீர்வும் தெரிந்தது. இணையத்தில் படித்த தகவலை மீண்டும் ஒருமுறை படித்து உறுதி செய்தபின் தனியாகவே அதைச் செய்து முடித்தேன்.

ஆம்! துருக் கறைகளைக் கூட அகற்றும் என்று கூறப்படும் குறிப்பிட்ட அந்தக்

குளிர்பானத்தை வாங்கி நீர் கலக்காமல் அப்படியே தெளிக்கும் கருவி கொண்டு தெளித்துவிட்டேன். மறுநாள் காலையில் வந்து பார்த்த அப்பாவும் அம்மாவும் பெரும்பாலும் பூச்சிகளற்ற நிலையில் இருந்த அவரைச் செடிகளையும் என்னையும் வியந்து பார்த்துப் பாராட்டினர். எல்லாப் புகழும் இணையத்திற்கே என்று கூறி நகைத்துக்கொண்டேன்.

வீட்டிலுள்ள காய்கறிக் கழிவுகள் எல்லாம் வழக்கம்போல உரமாகின. சிறிது சிறிதாக அனைத்துச் செடிகளிலும் பிஞ்சு பிடிக்கத் தொடங்கின. எந்தச் செடியிலெல்லாம் பிஞ்சு பிடித்திருக்கின்றதென ஓடிச் சென்று பார்ப்பதே என் வழக்கமாக இருந்தது. ''ஏய் அப்படியெல்லாம் காய்களை எண்ணக்கூடாது என்ற அம்மாவைப் பார்த்து '' ''எண்ணவில்லையம்மா, எந்தச் செடியெல்லாம் காய்த்திருக்கின்றதென பார்க்கின்றேனம்மா'' என்றபடி சொல்லிக்கொண்டே காய்கறிகள் பற்றிய என் கணக்கெடுப்பை நாளும் தொடர்ந்தேன்.

பல நாட்களுக்குப் பின்னர் தமிழினி அக்காவை அன்று மாடியில் பார்த்தேன்.''என்ன இலக்கியா உன்னுடைய செடிகள் எல்லாம் காய்க்க ஆரம்பித்துவிட்டதுபோல'' என்றாள். எனக்கோ பெருமை தாளவில்லை. '' ஆமாம் அக்கா எல்லாச் செடியும் காய்த்திருக்கின்றது, ஆனால் சில செடிகள் இன்னும் பூக்கவே ஆரம்பிக்கவில்லையக்கா'' என்று என் கவலையைக் கூறினேன்.

''நமது ஆசைக்காக எதையும் அவசரப்படுத்தக்கூடாது, காலம் வரும்போது அதுவாகப் பூக்கும். கவலைப்பட்டு உன்னையும் வருத்தி செடியையும் வருந்த வைத்துவிடாதே'' என்றாள். ஏதோ புதிர்போல பேசுகிறாளே என்று எண்ணுவதற்குள் அவளது அலைபேசிக்கு அழைப்பு வந்தது.

''பெண்ணாகப் பிறந்தால் எந்த ஆசையுமே இருக்கக்கூடாதா, ஏன் உங்கள் எண்ணம் இப்படியாக இருக்கின்றது. கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என ஏன் நினைக்கின்றீர்கள்? நீங்களெல்லாம் எப்படி இருந்தாலும் உங்கள் பேச்சுக்கெல்லாம் இசைந்து நடந்தால் மட்டும்தான் பெண்ணென்று ஏன் ஒரு அளவீட்டை வைத்திருக்கின்றீர்கள். எங்களுக்கும் மனது இருக்கின்றதென்பதைக் கொஞ்சம் நினைவில் கொள்ளலாமே''

''இது திமிரல்ல, என்னுடைய கருத்து.படித்த உங்களாலேயே புரிந்துகொள்ள முடியவில்லையே''. இன்னும் என்னமோ பேசியபடியே மாடியின் எதிர்ப்புறத்தை நோக்கித் தமிழினி அக்கா நடந்து சென்றாள்.நான் என் செடி, கொடிகளை நோக்கி நகர்ந்தேன்.

''சரியான ஒரு கருத்தைச் சொன்னால் அதை ஏன் திமிரெனச் சொல்கின்றீர்கள், படித்ததால் பேசுவதாகக் குறை சொல்லாதீர்கள். உண்மையைப் பேசுவதாக ஏற்றுக்கொள்ளலாமே.........'' காற்றில் கரைந்து வந்தது தமிழினி அக்காவின் குரல்.அதற்குமேல் எதுவும் கேட்க முடியாதபடி செடி,கொடிகள் என்னைத் தம்மிடம் ஈர்த்துக்கொண்டது.

சில நாட்கள் கடந்து சென்றது. என் கனவுகளைப் போலவே சில காய்கள் கொஞ்சம் பெரிதாகத் தொடங்கின. காய் எல்லாம் பெரிதாகி நன்றாகக் காய்த்ததும் சிறியளவில் இருந்தாலும் பரவாயில்லை.தெரிந்தவர்களுக்குத் தரவேண்டும்.முதல் காய்த்திருக்கும் காய்கறிகளை சமைத்துச் சுவைக்க வேண்டும். தன் பூச் செடிகளிலிருந்து பூக்களைத் தரும் தமிழினி அக்காவிற்கும், இயற்கை உரத்தை வழங்கும் பாற்காரம்மாவிற்கும், பக்கத்து வீட்டும் பாட்டிக்குமென அனைவருக்கும் சிறிதளவேனும் கொடுக்க வேண்டும் என்று பட்டியலிட ஆரம்பித்தேன். சமையல்
கற்றுக்கொள்ளவில்லை என்று அம்மா சொன்னாளே இந்தக் காய்கறிகள் பறித்ததும் இவற்றை நானே சமைத்துக் காட்டுகின்றேன் என உறுதி எடுத்துக்கொண்டேன். தினமும் பல ஆசைகள், கனவுகள் , தூக்கத்தில்கூட கனவெல்லாம் பூவும் காயுமாய் செடி,கொடிகளே வந்துபோயின.

காலையில் நான் பார்ப்பதற்கு முன்னர் சென்று எங்கள் மாடித் தோட்டத்தைப் பார்த்துவரும் அம்மா இன்று யோசனையோடே ''பின் வீட்டில் நேற்றைக்கு குரங்குகள் வந்து ஒரே சேட்டை செய்திருக்கின்றது. மதிலில் வைத்திருந்த தொட்டிகளைக் கீழே தள்ளிவிட்டிருக்கின்றதாம், மாமரத்தில் உள்ள காய்களை எல்லாம் பிய்த்துப் போட்டிருக்கின்றதாம்.இவள் ஆசைப்பட்டதால் நாமும் மாடியில் தோட்டம் ஆரம்பித்தோம். எந்த வேலியும் போடவில்லையே, என்ன ஆகப்போகின்றதோ'' என்று அப்பாவிடம் கூறிக்கொண்டிருந்தார்.

(தொடரும்)

பொலிகையூர் ரேகா





ஒவ்வொரு மனிதனும் அழகாகவே படைக்கப்பட்டுள்ளான். மனிதனின் பார்வைக்கு பார்வையே அழகு மாறுபடுகிறது. நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பல்வேறு இயற்கை பொருட்களில் நிறைய மருத்துவ குணங்கள், அழகுபடுத்தும் குணங்கள் உள்ளன.



# அழகான முகத்தோற்றத்திற்கு

**முகச்சுருக்கம் நீங்கி முகம் பளபளப்பாக**

★ தினமும் பாலில் தேவையான அளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் எந்த நோய்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடல் பெற்று விடும். முகம் அழகாகவும், உடல் பளபளப்பாகவும் இருக்கும்.

★ அதிகாலையில் வெறும் வயிற்றில் அத்திப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடல் அழகும், இளமையும் நாளுக்கு நாள் அதிகமாகும் என்று பழங்கால அரேபிய மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

★ முகச் சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணையில் மஞ்சள் தூளை சேர்த்து குழைத்து உடம்பிற்கு தடவி பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

★ தினமும் முகத்தில் ஒலிவ் எண்ணெய் பூசி வர முகச்சுருக்கம் நீங்கி பளபளப்பாக இருக்கும்.

★ ஒரேஞ் பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

★ உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும்.

★ பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

**முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க**

★ முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

★ முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

**முகத்தில் உள்ள தழும்புகள் மறைய**

★ இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி அரை மூடி எலுமிச்சம்பழம் சாறு ஆகியவற்றுடன் பயற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்படும் தழும்பும் மறையும்.

★முகத்தில் பருக்கள் இருந்தால் வெள்ளைப் பூண்டையும், துத்தி இலையையும் சம அளவு எடுத்து அதை நறுக்கி, பின் நல்லெண்ணெயில் போட்டுக் நன்கு காய்ச்சி தினசரி பருக்கள் உள்ள இடத்தில் தடவி வந்தால், விரைவில் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

★ வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேர்க்குரு வராமல், வெளியில் கருத்துப் போகாமல் இருக்கும்.

கோபிகை

be bold for change
மார்ச் 08

# பாரிசவாதத்திற்குப் பின்னரான தொழில் வழிச்சிகிச்சை முறை

தொழில் வழிச்சிகிச்சை முறையானது நாளாந்தச் செயற்பாடுகளை திரும்பக் கற்பதன் மூலம் பாரிச வாத நோயாளிகள் முழுமையான சுதந்திரமான வாழ்வை வாழ்வதற்கு உதவுகிறது.

தொழில் வழிச் சிகிச்சையாளர் பாரிசவாத நோயாளர்களின் தேவைகளை மதிப்பிட்டு பின்வரும் வழிகளில் உதவி செய்வார்.


★ பாரிசவாத நோயாளிகள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை மதிப்பிட்டு நோயாளிக்கும் அவர் குடும்பத்திற்கும் விளக்குவார்.

★ நோயாளியின் செயற்திறனை அதிகரிப்பதற்காக தன்னிச்சையாக வாழ்வதற்குரிய செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவார்.

★ நாளாந்த செயற்பாடுகள் செய்வது மற்றும் அதற்கு இயைபாக்கம் அடையச் செய்தல் பாரிசவாத நோயாளிகளுக்கான புனர்வாழ்வு அளிக்கும் தொழில் வழிச்சிகிச்சை முறையின் ஒரு பகுதியாகும்.

★ உதவிகளையும் தேவையான உபகரணங் களையும் வழங்குதல்.

★ பாரிசவாத நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப சூழல் உள்ளதா என அவதானித்தல்.



Hemorrhage/blood leaks

Clot stops blood supply

★ பாரிச வாத நோயாளி தொழிலுக்கு மீண்டும் திரும்புவதற்கு சிறந்த வளி மற்றும் ஆலோசனை வழங்கல்.

★ பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டவர் தனது சாதாரண தொழில் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக முதலாளியுடன் கலந்தாலோசித்தல்.

★ பாரிசவாத நோயாளிகளினை பராமரிப்பவர்களுக்கு உதவுதல்.

**தொழில்வழிச்சிகிச்சை முறையில் உள்ளடங்குபவை.**

★ ஒரு வாரத்தில் குறைந்தது ஐந்து நாட்கள் 45 நிமிடங்கள் வீதம் இச் சிகிச்சை வழங்குதல்.

★ பாரிசவாத நோயாளி எதிர்நோக்கும் குறைபாடுகளையும் பாதிப்புக்களையும் மதிப்பீடு செய்தல். (அவரால் கை கால்களை அசைக்க கூடிய தன்மை மற்றும் அதிலுள்ள குறைபாடுகள் பார்வை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் என்பவற்றில் உள்ள பிரச்சனைகளில் பிரதானமாக கவனம் செலுத்துதல்.)

★ உளவியலாளர்களுடன் இணைந்து சிந்திக்கும் திறன் சிந்தனையை ஒருமுகப்படுத்தல். மற்றும் ஞாபகசக்தியில் ஏற்படும் பிரச்சினை தொடர்பாக மதிப்பீடு செய்தல்.

★ பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவர் நாளாந்த செயற்பாடுகளான கழுவுதல் , உடைமாற்றுதல், தேநீர் தயாரித்தல், சமைத்தல் போன்ற செயற்பாடுகளை செய்யும் திறனை மதிப்பீடு செய்து பாதிக்கப்பட்டவருடனும் அவர் குடும்பத்தினருடனும் கலந்தாலோசித்து எவ்வாறு நாளாந்த செயற்பாடுகளை சிறப்பாக செய்யலாம் என ஆவோசனை வழங்குதல்.

★ தொழில் வழிச் சிகிச்சையாளர் பாரிசவாத நோயாளிக்கு உகந்த பயிற்சியளிப்பார். பாரிசவாதத்தால் பாதிக்கப் பட்டவர் ஆலோசனை கூறப்பட்ட பயிற்சிகளையும் நுட்பங்களையும் தவறாது ஒழுங்காக பயிற்சி செய்ய வேண்டும்.

★ பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவருக்கு எந்த நேரத்திலும் உதவி செய்யாது அவர் தானாக தனது செயற்பாடுகளை செய்வதற்கு அவர் குடும்பம் தூண்டுதலாக இருக்க வேண்டும். தொழில் வளிச்சிகிச்சை அவரது பாரிசவாதத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு முறையை அடையும் வரை தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

Dr.அஜினிஅரசலிங்கம் : விசேடநரம்பியல் வைத்தியநிபுணர் யாழ் போதனாவைத்தியசாலை

# ‘முடியாது’


“முடியாது” என்று முன்பே முடிவெடுத்துவிட்டால் நீங்கள் போகிற பாதையின் முகப்பிலேயே கதவை இறுகச் சாத்திவிடுகிறீர்கள் என்றுதான் பொருளாகும். அதற்குப் பதிலாக ‘முடியும்’ என்று நீங்கள் இலேசாக எண்ணினாலும் போதும். உங்களுக்குத் தானே வழி பிறக்கும். உங்கள் இலட்சியம் மனதிலே வலுப்பெற உங்கள் மனதின் ஆக்க சக்தி செயலாக மாறுகிறது. நீங்கள் செய்ய விரும்புவதை வாழ்க்கையில் சாதிக்க முயலவேண்டும். உங்கள் விருப்பத்தில் மிகுந்த செறிவு இருந்தால்தான் அப்படி நிகழும்.

சிலர் ஆசைப்படுவதுண்டு. அது மேலெழுந்தவாரியான நினைப்பு. ஏன் தெரியுமா? ஆசைப்படுபவருக்கே அது நடக்காது என்று தெரியும். உங்கள் மனதில் அது நடக்காது என்ற எண்ணம் இருக்கும்போது எப்படி ஆசை பலன் தரும்? இதே ஆசையில் நியாயம் இருந்தால் - பிறர் உரிமைகளைப் பாதிக்காதிருந்தால் - அது உண்மையான ஈடுபாடாக இருந்தால் - மனதில் திடமான வலுப்பெற்றிருந்தால் அதுவே உங்கள் இலட்சியமாக மாறிவிடும்.

எப்பொழுதும் உங்கள் மனதில் பலவீனங்களை வளரவிடாதீர்கள். அது உங்கள் தன்னம்பிக்கையை வேரறுத்துவிடும். உங்கள் முயற்சிகள் முழுப் பலனளிக்கவும், உங்கள் தன்னம்பிக்கை தழைத்துச் செழிக்கவும், நீங்கள் உங்கள் மனோ பலவீனத்தை அறவே ஒழித்துக்கட்டவேண்டும். உங்கள் மனதில் அதை ஒருபோதும் அனுமதிக்கவே அனுமதிக்காதீர்கள்.

வேலையின் பளு வேலையில் மட்டும் இல்லை. அது உங்களுடைய மனதைப் பொறுத்தது. பெரிய கடினமான வேலையையும் நீங்கள் திட்டமிட்டுச் சிறுகச் சிறுகச் செய்வதன் மூலம் உங்களால் சுலபமாக்கிக்கொள்ள முடியும். வேலையை முழுமையாகப் பார்க்கும்போது உங்களுக்கே மலைப்பாக இருக்கும். அதே வேலையை நீங்கள் பகுத்துப் பார்க்கும்போது அது எளிமையானதாகிவிடுகிறது. பெரிய காரியங்கள் பலத்தினால் மட்டும் ஆகிவிடுவதில்லை. அவை நீடித்த உழைப்பினாலேயே முற்றுப் பெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருபோதும் விரக்திக்கு ஆளாகாதீர்கள். தவிர்க்கமுடியாத நிலையில் விரக்தி மேலோங்கினால் அதன் மத்தியிலேயே முயற்சியைத் தொடரக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கு மனத் திண்மையும், தன்னம்பிக்கையும் ஏற்படும்.



பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பாருங்கள். அவர்கள் அவசியம் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட விபத்துகளை மன உறுதியோடு சமாளித்திருப்பதை அறிவீர்கள். செய்யும் காரியம் நியாயமானதாக இருக்கிறதா, அறிவுபூர்வமாக இருக்கிறதா என்பதை முதலில் முடிவுசெய்துகொள்ளுங்கள். அதன் பிறகு நீங்கள் அதில் மனஉறுதியுடன் ஈடுபடலாம். எதிரிக்கு அஞ்சாதீர்கள். குறுக்கிட்டால் பின்வாங்காதீர்கள். வெற்றியின் இலக்கு நோக்கி முனைப்புடன் செயற்படுங்கள். அதன் பிறகு உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க எவராலும் முடியாது. நீங்களே வெற்றி வீர வீராங்கனைகள்.

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பைத் தேடுவது அவசியம். வாய்ப்புகள் உங்களைத் தேடிவரும் என்று எண்ணாதீர்கள். அதற்காக காத்திராதீர்கள். நீங்கள் வாய்ப்புகளைத் தேடிச்சென்று கண்டுபிடித்துச் செயற்படவேண்டும். ஒரு மனிதனுக்குள்ள சிறப்பான தன்மையே அவன் அல்லது அவள் செயற்படக்கூடியவன் என்பதுதான்.

அதனால் நீங்கள் 'என்னால் முடியும்' என்று எண்ணினால் போதும். அந்தக் காரியம் அநேகமாக முடிந்த மாதிரிதான்.

'உங்களையே நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்' என்றார் சாக்ரடீஸ். தன்னை அறிந்துகொள்ளாத எந்த மனிதனும் வாழ்க்கையில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. எதையும் நீங்கள் பொறுப்புடன் மேற்கொண்டு அதில் ஈடுபட்டு உழைக்கும்போதுதான் நீங்கள் உங்களுடைய ஆற்றலை உணர்வீர்கள். உங்கள் செயல்தான் திறமையை வெளிப்படுத்தும். எதற்கும் தயங்கி நிற்காதீர்கள். தயக்கம் நேரத்தை வீணாக்கிவிடும். காரியத்தைப் பார்த்து நீங்கள் மலைக்கவும் கூடாது. காரியத்தில் ஈடுபட்டு அதைச் செய்ய தானகவே அதன் பளு குறையும். எதிலும் துணிந்து ஈடுபடுங்கள். நீங்களே வெற்றியை அடைவீர்கள்.

கே.யோகேந்திரன்



## பென்சில் ஓவியம்

**தங்கம்மா அப்பாக்குட்டி (7 ஜனவரி, 1925 - ஜூன் 15, 2008) இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும் ஆவார். ஈழத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவர். ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்துச் சேவையாற்றி வந்தார். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்தலைவராகச் செயற்பட்டு வந்தார். ''சிவத்தமிழ்செல்வி'' என்று அழைக்கப்பட்டுவருகின்றார்.**

இம்மாத **பென்சில் ஓவியம்** BY YOGA

yoganads@gmail.com
0754419019

விழிப்புணர்வு கட்டுரை

# போதை உள்ளம் நரகம் செல்லும்...

## போதைப் பொருள் பாவனை: ஓர் இஸ்லாமிய நோக்கு!

உண்பதற்கோ பருக்வதற்கோ ஏதுமில்லாத ஓரிடத்தில் ஒருவர் மாட்டிக்கொண்டுள்ளார் பசி, தாகத்தின் கொடுமையால் அவர் இறப்பை நோக்கி நகர்கிறார் என்ற நிலையில் அவருக்கு தாகம் தீர்க்க மதுசாரம்/ போதை கலந்த ஏதேனும் தான் கிடைத்திருக்கிறது என்றால்

இந்நிலை தான் நிப்பந்தம்

இப்போது அவர் அதை அருந்துவதில் தவறில்லை (அல்லாஹ் மிக அறிந்தவன்)

ஆட்கொல்லி போதைப் பொருட்கள்

மதுபானத்தைப் போலவே கஞ்சா, அபின், ஹெரோய்ன் போன்ற போதை வஸ்துக்களும் ஹராமானவையாகும்.

மதுபானம் அருந்தியவருக்கு இஸ்லாமிய சட்டத்தின் படி (ஹத்) தண்டனை நிறைவேற்றப்படும். 40 அல்லது 50 கசையடிகள் மதுபானம் அருந்தியவருக்கு வழங்கப்படும்.

ஹெரோயின் போன்ற மிக ஆபத்தான போதைப் பொருட்களை கடத்துபவர்கள், வியாபாரம் செய்பவர்கள், ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கப்படவேண்டும் என்பது நவீன கால இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் சன்மார்க்கத் தீர்ப்பாகும்.

புகைத்தல் ஹராமாகும்

மதுபானம், போதைவஸ்த்துக்களைப் பற்றிப் பேசும்போது புகைப்பிடித்தல் பற்றிய ஷரீஅத் நிலைப்பாட்டையும் நாம் கலந்துரையாடுவது அவசியமாகும்.

இன்று பாவனையில் இருக்கும் சிகரெட், சுருட்டு, பீடி போன்றவை ஆரம்ப காலத்தில் பரவலாக இல்லாமல் இருந்த காரணத்தினாலும் இவற்றுக்கு பயன்படுத்தப்படும் புகையிலை முதலானவற்றினால் விளையும் சுகாதாரக்கேடுகள் பற்றி அன்று அறியப்படாமல் இருந்த காரணத்தினாலும் புகைத்தல் பற்றிய தெளிவான மார்க்கத் தீர்ப்பை ஆரம்பகால இமாம்கள் வழங்கவில்லை. அண்மைக் காலம் வரை புகையிலையின் தன்மை, புகைத்தலால் ஏற்படும் விளைவுகள் பற்றிய அறிவுபூர்வமான, விஞ்ஞான ரீதியிலான தெளிவான முடிவுகள் பெறப்படாததனால் புகைப்பிடித்தல் பற்றிய தீர்ப்பிலும் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவி இருக்கின்றன.

சிலர் புகைத்தல் மக்ரூஹ் என்றார்கள். வேறு சிலர் முபாஹ் (பிழையானதல்ல) அது ஆகுமானது என்றார்கள். மற்றும் சிலர் ஹராம் என்று தீர்ப்பு வழங்கினார்கள். தற்காலத்தில் பெரும்பாலான ஆலிம்கள் புகைத்தலை ஹராம் என்றே கருதுகிறார்கள். புகைத்தல் ஹராமானது என்பதற்கு நியாயமான பல காரணங்களைக் காணமுடிகிறது. அவற்றைச் சுருக்கமாக கீழே நோக்குவோம்.

**1. போதையை ஏற்படுத்துதல்:**

புகைத்தல் போதையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக ஆரம்ப பழக்கமுடையோருக்குச் சிறிது கூடுதலாகவே போதை ஏற்படுகிறது. ஏனைய போதைவஸ்துக்களைப் பாவிப்பதன் மூலம் ஏற்படுகின்ற அளவுக்குப் போதை ஏற்படாத போதும், மிகக் குறைந்த அளவிலாவது புகைப்பவர்கள் போதை கொள்கிறார்கள். குறைந்தளவு போதையை ஏற்படுத்தக்கூடியதும் ஹராமானது என்பது நபிமொழி.

**2. சோர்வை ஏற்படுத்துதல்:**

புகைப்பதனால் போதை ஏற்படுவதில்லை என்று வாதிப்போரும் புகைத்தல் சோர்வை ஏற்படுத்துகிறது என்பதை மறுப்பதில்லை.

நபியவர்கள் உடல் உறுப்புக்களில் சே ா்வை ஏற்படுத்தக் கூடியவற்றையும் தடுத்துள்ளார்கள். இது பற்றிய ஹதீஸ் முஸ்னத் அஹ்மத், அபூதாவூத் முதலான கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

இவற்றுடன் புகைப்பதனால் மூன்று வகையான தீமைகள் விளைகின்றன.

**(i) உடல்நலனுக்கு ஏற்படும் கேடு:**

புகைப்பதனால் உடல்நலனுக்கு ஏற்படும் பயங்கரமான பாதிப்புக்களைப் பற்றியும் சுகாதாரக் கேடுகளைப் பற்றியும் நவீன மருத்துவம் மிக விரிவாகப் பேசுகிறது. ஒரு காலத்தில் புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி உறுதியான, முடிவான அறிவியல் ரீதியான ஆய்வுகள், முடிவுகள் இருக்கவில்லை என்பதனால் இது பற்றிய நிலைப்பாடுகளும் வேறுபட்டன. ஆனால் இன்று இதன் கேடுகள் குறித்து எத்தகைய சந்தேகத்தையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு இது பற்றிய ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.

வருடாந்தம் புகைத்தல் தொடர்பான நோய்களினால் 2.5 மில்லியன் மக்கள் வயதாவதற்கு முன்னதாகவே இறப்பதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கிறார். அதாவது ஒவ்வொரு 13 வினாடிகளுக்கும் ஒரு மரணம் இதன் மூலம் சம்பவிக்கிறது. மற்றுமோர் ஆய்வின்படி புகைப்பதனால் தினமும் 300 பேர் கொல்லப்படுகிறார்கள். இன்னுமோர் ஆய்வின்படி தினமும் இரண்டு சிகரெட்டுக்கு மேல் புகை பிடிப்பவர்களில் நான்கில் ஒருவர் வயதாவதற்கு முன்பே இறக்கிறார்.

புகைத்தலால் பல்வேறுபட்ட நோய்கள் உருவாகின்றன. புகைப்பிடிப்பதனால் ஏற்படும் நோய்களில் புற்றுநோய் குறிப்பிடத்தக்கதாகும். பலவிதமான புற்றுநோய்கள் இருக்கின்றன. பிற புற்றுநோய்களைக் காட்டிலும் நுரையீரல் புற்றுநோயால் அதிகமான மக்கள் மரணமடைகிறார்கள்.

90க்கும் அதிகமான நுரையீரல் புற்றுநோய், புகைப்பிடிப்பதனால் ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. இந்த நோய் தொற்றிக் கொள்ளும் அபாயம், புகை பிடிக்காதவர்களைக் காட்டிலும் புகைப்பிடிப்பவர்களுக்கு 15 மடங்கு அதிகமாகவுள்ளது. தொண்டை அல்லது வாய்ப்புற்று நோய் அபாயத்தை புகைப்பிடித்தல் தோற்றுவிக்கிறது. மேலும் புகைப்பிடிக்காதவர்களை விட புகைப்பிடிப்பவர்கள் உணவுக்குழல், இரைப்பைப் புற்றுநோயினால் இறக்கும் அபாயம் அதிகம் இருக்கிறது. புகைப்பிடிக்காதவர்களை விட புகைப்பிடிப்பவர்கள் சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீரக புற்றுநோய் ஆகியவற்றாலும் தாக்கப்படும் ஆபத்தும் அதிகம் என ஆய்வுகள் கூறுகின்றன.

புகைப்பிடித்தல் இதய நோய்களுக்கும் முக்கிய காரணமாக விளங்குகிறது. புகைக்கப்படும் சிகரெட்டின் எண்ணிக்கை அதிகரிக்கும் அளவுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் தீவிரமடைகிறது.

சிகரெட்டில் நிகோடின் அடங்கலான 4000 கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் இருப்பதாக விஞ்ஞானம் கூறுகிறது.

புற்றுநோய்கள், இருதய நோய்கள் மட்டுமன்றி புகைப்பிடிப்பதால் அபாயகரமான சுவாசக் கோளாறுகளும் ஏற்படுவதாக அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. மார்புச்சளி, ஆஸ்துமா, எம்பீஸிமா (Emphysema) உட்பட மற்றும் பல சுவாசக் கோளாறு நோய்களை புகைத்தல் தீவிரப்படுத்துகிறது என்பதற்கு போதிய அறிவியல் ஆதாரங்கள் கிடைக்கின்றன.

புகைப்பிடித்தல் இனப்பெருக்க சு காதாரத்திற்கும் ஊறுவிளைவிக்கும் என்பதும் மருத்துவம் கூறும் மற்றுமோர் உண்மையாகும்.

சொத்தைப்பல், பல்விழுதல், ஈறு வீக்கம், வாயில் துர்நாற்றம் முதலான பல நோய்களுக்கும் புகைத்தல் காரணமாக அமைகிறது.

மேலும் புகைத்தல் நுகர்திறனைக் குறைக்கின்றது. உபயோகிக்கும் மருந்துகளின் பயன்தரும் திறனைக் குறைக்கிறது. குடற்புண் நோய்களை தீவிரப்படுத்துகிறது.

இதுவரை கண்ட விளக்கங்களிலிருந்து புகைப்பிடித்தல் உடல் நலனை எவ்வாறு கடுமையாகப் பாதிக்கிறது என்பதை விளங்க முடிந்தது. இவ்வாறு மனிதனின் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியன இஸ்லாமிய நோக்கில்




ஹராமானவையாகவே கொள்ளப்படுகின்றன. அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

**உங்களை நீங்களே கொல்ல வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மிகவும் அன்புடையோனாக இருக்கின்றான் (அந்நிஸா: 25)**

மேலும் உங்களை நீங்களே அழிவுக்கு உட்படுத்திக் கொள்ளாதீர்கள் (அல்பகரா:195)

மனிதனுக்கு கேடுவிளைவிக்கும் அனைத்தையும் நபிகளார் தடுத்துள்ளார்கள் என்பதற்கு பல ஹதீஸ்கள் ஆதாரமாக உள்ளன. இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை வகுக்கும்போது கவனத்திற் கொள்ளும் அடிப்படையான விதி, நலன்கள் நன்மைகள் விளைதல் வேண்டும். தீங்குகள், கேடுகள் தவிர்க்கப்படல், அல்லது தடுக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

புகைப்பிடிப்பதனால் விளைகின்ற மூன்று வகையான கேடுகளில் உடல்நலத்திற்கு ஏற்படும் கேடுகளைப் பற்றியே இதுவரைக்கும் கலந்துரையாடினோம். இரண்டாம் வகைக் கேடு பொருள் நஷ்டமாகும்.

**(ii) பொருள் நஷ்டம்:**

புகைப்பிடிப்பதனால் பணம் விரயமாகிறது. உடலுக்கோ, ஆன்மாவுக்கோ எத்தகைய பயனுமளிக்காத ஒன்றிற்காக பணம் விரயமாக்கப்படுகிறது. வீண்விரயம் செய்வதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள். அல்குர்னும் இதனைக் கண்டிக்கிறது.

வீண்விரயம் செய்யாதீர்கள், ஏனெனில் மிதமிஞ்சிச் செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்கள்


வீண்விரயம் பற்றி இமாம் இப்னு ஹஸ்ம் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

வீண்விரயம் செய்வது ஹராமாகும். வீண்விரயம் (மூன்று வகைப்படும்)

1. அல்லாஹ் விலக்கியவற்றில் செலவு செய்வது. அது ஒரு கொசுவின் இறக்கையளவு அற்பமாக இருப்பினும் சரியே.

2. அவசியம் தேவையற்ற ஒன்றில் செலவுசெய்தல். இந்தச் செலவினால் குறித்த நபரின் செல்வநிலை அகலும் ஆபத்து ஏற்படும்போது அதுவும் வீண்விரயமாகும்.

3. செல்வத்தை வீணாக வீசியெறிதல், இது குறைந்தளவுடையதாக இருப்பினும் சரியே



**(iii) ஆன்மாவுக்கு ஏற்படும் தீங்கு**

புகைத்தலுக்கு பழக்கப்பட்டவர்கள் தமது மனோவலிமையை இழந்து, இத்தீய பழக்கத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். ஏதோ காரணத்தால் புகைப்பிடிக்கின்ற சந்தர்ப்பத்தை இழக்கின்ற வேளையில் இத்தகையோரின் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் கேவலமானதாகவும் கீழ்த்தரமானதாகவும் அமைகின்றன என்பதை அவதானிக்க முடியும்.

எனவே, சுகாதார கண்ணோட்டத்தில் நோக்கினாலும், பொருளாதார கண்ணோட்டத்தில் பார்த்தாலும், ஆன்மிகக் கண்ணோட்டத்தில் அணுகினாலும் புகைப்பிடித்தல் ஹராமானது என்ற கருத்தே மிகைத்து, பலமானதாக விளங்குகிறது. அல்லாஹ்வே யாவற்றையும் நன்கு அறிந்தவன். **(முற்றும்)**

ஷிஃபா இப்ராஹிம், மருதமுனை

**1.நாட்கால் நடல்**

இதை பந்தகால் நடுவது என்பார்கர்கள்.பந்தகால் நடுவதற்கு வேரில்லாமல் துளிரும் மரத்தை வெட்டி நடவேண்டும்.மரத்தின் நுனியில்,முனை முறியாத மஞ்சள்,12 மாவிலைகள்,பூ மூன்றையும் இணைத்து கட்டவேண்டும்.பின்பு நட வேண்டிய குழியில் வெள்ளி நாணயம், பூ, நவதானியம் இவற்றை போட்டு போட்டு பந்த கால் நட வேண்டும். சாம்பிராணி காண்பித்து தேங்காய் உடைக்கவேண்டும்.பந்தகால் நட்டவுடன் மரத்தின் அடியில் பால் ஊற்றி, மஞ்சள், குங்குமத்தை மேல் நோக்கி தடவ வேண்டும். மாவிலை, நவதானியம், வெள்ளி நாணயம், பூ, தீய சக்திகளை உள்வாங்கிக் கொள்ளும். பிரபஞ்சத்தில் உள்ள பஞ்சபூதங்களுக்கும் அறிவிக்கை செய்து ஆசி பெறுவது நோக்கமாகும்.

## திருமணச்சடங்குகள்

# சிலவும் அதன் ஆழமும்



**2.பொன்னுருக்குதல்**

திருமாங்கல்யம் என்பது சுமங்கலியின் சின்னம் ஆகும்,போற்றி பாதுகாக்க படவேண்டியது ஆகும்.நல்ல நாளில்,தீர்க்க சுமங்கலியாக வாழ்வதற்கு மாப்பிள்ளை வீட்டில் வைத்து உரிய நபரிடம் ( பொற்கொல்லர் ) புதிய பொன் கொடுத்து திருமாங்கல்யம் செய்யவேண்டும்.

**3.காப்பு கட்டுதல்**

காப்பு என்பது அரண் போன்றது . மங்களகரமான சக்தி வாய்ந்த மங்கள் உரு வாய்ந்த மஞ்சள் கயிற்றை காப்பாக கட்டுவது . திருஸ்டி . மற்றும் அசுர சக்திகளால் இடையூறுகள் வராமல் தடுப்பதற்கு . காப்புக்கட்டுவதில் இருந்து மறு நாள் காப்பு அவிழ்க்கும் வரை திருமணம் சம்பந்தமாஅனைத்து நிகழ்ச்சிகளையும் தடையின்றி செய்வேன் என்பதை உறுதி செய்யும் சடங்காகும் . அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறும் வண்ணம் இடையூறு வராமல் காக்குமாறு தெய்வத்தை வேண்டிக் கட்டப்படுவது ஆகும்.

**4.தாரை வார்த்தல்**

தாரை என்றால் நீர் என பொருள். நீருக்குத் தீட்டில்லை. நீர் மந்திர நாத ஒலியின் அதிர்வை ஏற்கக்கூடியது . இப்படி தெய்வத்தன்மை வாய்ந்த நீரை இதற்கு பயன்படுத்துகின்றனர். திருமணச் சடங்குகளில் மிகமுக்கியமானது தாரை வார்த்தல். தாரை வார்த்தபின்பு தான் மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டும் உரிமையை அடைகின்றான்.

என் மகளை தெய்வங்களின் சாட்சியாக உனக்கு மனைவியாக கொடுக்கின்றேன் என மணமகளின் பெற்றோர், தாரை வார்த்து கொடுக்க மணமகனின் பெற்றோர் உங்கள் மகளை இனி எங்களது மறு மகள் ( மருமகள் ) ஆக ஏற்றுக் கொள்கின்றோம் என்பதற்கான உறுதிமொழி. எனவே தான் மாப்பிள்ளையின் தாயார் கை ஏற்றுக்கொள்ளும் விதமாக அடியில் இருக்க, அதற்கு மேல் மணமகனின் தந்தையின் கை, மணமகனின் கை, மணப்பெண்ணின் கை, மணப்பெண்ணின் தந்தையின் கை, எல்லாவற்றிற்கும் மேலாக மணப்பெண்ணின் தாயாரின் கை. இந்தவரிசையில் கைகளை வத்து இச்சடங்கு நடைபெறும். உரிமையை விட்டுக்கொடுப்பதற்கு அடையாளமாக செய்யப்படும் சாஸ்திரப்பூர்வமான சடங்கு தாரை வார்த்தல் என்ப்படும்.

நன்றி இணையம்



# வியக்கவைத்த 2017 கம்பன் விழா











கம்பன் புகழ்விருது 2017 வழங்கி கௌரவிக் கப்பட்ட பேராசிரியர் சாலமன் பாப்பையா

இலங்கை, இராமாயணத்தோடு மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதால் இராமாயண பூமி எனச் சொன்னாலும் தவறில்லை எனத் தோன்றுகிறது. இன்னும் சொல்லப் போனால், இலங்கை, இராமாயண பூமியே என்பதை நிரூபிக்கும் முகமாக அகில இலங்கை கம்பன் கழகம் ஆண்டுதோறும் கோலாகலமாக கம்பனுக்கு விழா எடுத்து அதனூடாக இராமாயணத்தின் பெருமையை உலகத்தமிழர்களுக்குப் பறைசாற்றுகின்றது.

இவ்விழாவானது சென்ற மாதம் 09, 10, 11, 12 ஆகிய தினங்களில் வெள்ளவத்தை, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஆரம்பமானது. ஐஸ்வர்ய லக்ஸ்மி கோயிலில் இருந்து கம்பன் பட ஊர்வலத்துடன் நிகழ்வு ஆரம்பமாகி மங்களவிளக்கேற்றல், கடவுள் வாழ்த்து, தலைமை உரை, தொடக்க உரை என்பவற்றுடன் தொடர்ந்தது. இதனைத்தொடர்ந்து ''கம்பனின் அரசியல்'' என்னும் நூலும் ''கம்பன் விழா 2016'' மற்றும் ''இசை விழா 2016 '' ஆகிய இறுவெட்டுக் களும் வெளியிடப்பட்டன. முதலாம் நாளின் இறுதி நிகழ்வாக ''பெரிதும் ஆச்சர் யம் தரும் அனுமனின் அறிவுத்தடுமாற்றம் எது?'' என்னும் தலைப்பிலான பட்டிமண்டபம் இடம்பெற்றது.

மறுநாள் ''வேற்றுமை ஒழிய கம்பன் விளம்பிடும் செய்தி கேட்போம்'' என்னும் தலைப்பிலான கவியரங்க நிகழ்வும் ''இன்று சந்திக்கும் இவர்கள்'' என்னும் கம்பராமாயண பாத்திரம் ஏற்றல் நிகழ்வு இறுதி நிகழ்வாகவும் இடம்பெற்றது. ''மூன்றாம் நாள் கம்பனும் இளங்கோவும்'' என்னும் தலைப்பில் அமைந்த ஒப்பீட்டு ஆய்வு பேராசிரியர் வி. அசோக்குமரன் அவர்களால் வழங்கப்பட பட்டிமண்டபம் எஸ். ராஜா தலைமையில் ''எண்ணத் துள் இடம் பிடிக்கும் ஏந்திழை எவள்?'' என்னும் தலைப்பில் அமைந்த விவாத அரங்கு இடம்பெற்றது.

மாலை நிகழ்வின் சிறப்பாக கம்பன் இசைத்த

→



தமிழ் சான்றோர் அனைவரையும் ஒரே இடத்தில் நேரடியாக பார்க்க கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம்

மாற்றத்தின் அடிப்படையாக இரு

கவியெல்லாம் நான் என்ற தலைப்பில் அமைந்த உரைஅரங்கு இடம்பெற்றது. ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் இருவருமே அற்புதமான பொருள் பொதிந்த கருத்துக்களை முன்வைத்து சிறப்பாக உரையாற்றினர். அந்த பாரதியே, பாரதி உருவம் கொண்டு வந்துவிட்டது போல அவரது பாடல்களையும் அதன் உட்கருத்தினையும் சிறப்புற எடுத்தியம்பினார் பாரதி பாஸ்கர். தமிழறிஞர் சாலமன் பாப்பையா தலைமையிலான மேன்முறையீட்டுப் பட்டிமண்டபமும் சிறப்புற அமைந்திருந்தது. விருது வழங்கல் நிகழ்வுடன் இனிதாக நிறைவுற்றது கம்பன் விழா 2017.

உள்நாட்டு வெளிநாட்டு சர்வதேச இலக்கியவாதிகள், தமிழ் சான்றோர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அழைத்து அவர்களை கௌரவித்து, இவ்விழாவை ஒழுங்கமைத்தமையானது கம்பவாரதி ஜெயராஜ் ஐயாவின் தலைமையில் இவ் விழா ஏற்பாட்டாளர்களுக்குச் சபாஷ் போடவைத்த ஒரு செயற்பாடாகும் என்பதுடன் இலக்கிய ஆர்வலர்களின் விழிகளுக்கு விருந்தளித்த, எண்ணங்களுக்கு தீனிபோட்ட ஒரு செயற்பாடுமாகும். அதிலும் தற்போதைய அரசியல் நிலவரத்தினைக் கருத்தில்கொண்டு ஒரு இலக்கிய விழாவில் இலக்கிய ஆர்வம் கொண்ட அரசியல்வாதிகளை இணைத்து அவர்களின் கருத்துக்களையும் பதிவிட்டமை பாராட்டப்படவேண்டியமையாகும். நிகழ்விற்கான மேடை அலங்கரிப்பு என்பது மிகச் சிறந்த முறையில் கண்ணைக்கவரும் வண்ணம் வெவ்வேறு நிறக்குடைகளைக்கொண்டு அமைக்கப்பட்டிருந்தமையும் பாராட்டிற்குரியதாகும். அலையெனத் திரண்டிருந்த மக்களின் இலக்கியத்தேடலுக்கு சிறப்புற விருந்தளித்த பெருமை கொழும்பு கம்பன் கழகத்தையே சாரும்.

ஆயினும் அதனிலும் ஓரிரு குறைகள் இருக்கத்தான் செய்தது. தேவாரம் பாடுவது என்பது இறைவனுக்கான பணியாகும். அதற்கெல்லாம் பொன்னாடை போர்த்துவது என்பது சற்று சிந்திக்கவேண்டிய விடயமாகும். அதுமட்டுமன்றி காலை நிகழ்வுகள் அருகிலுள்ள சிறிய மண்டபத்தில் இடம்பெற்றமையும் மக்களுக்கும் வந்திருந்த பேச்சாளர்களுக்கும் அசௌகரியமாகவே தோன்றியது. இக்குறைகளை நீக்கினால் அடுத்துவரும் ஆண்டுகளில் உலகமே வியக்கும்அளவில் இவ்விழா அமையும் என்பது திண்ணமாகும். காலத்தராசில் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு பொற்கவிஞனாம் கம்பனை நினைவூட்டும் இந்நிகழ்வில் ஒளிஅரசியும் கலந்து நிகழ்வின் பதிவுகளை வாசகர்களுக்காகத் தந்ததில் நிறைவும் பெருமிதமும் அடைகிறாள்.

ஜயிலா

---

**உதவி (3)**

## அரசியின் உதவிக்கரம் :-

### கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்

**5000/=**




ஒளிஅரசி நான்காம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இம் மகிழ்வான தருணத்தில் போரினால் அல்லது அசாதாரணமான விபத்துக்களால் பாதிக்கப்பட்டு கல்விப் புலமை அதிகம் இருந்தும்வறுமையின் நிமித்தம் கல்வி கற்பதற்கு முடியாமல் சிரமப்படும் மாணவர்களுக்கும், கலை வளர்க்க சிரமப்படும் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம்.


மார்ச் உதவிச்செயற்றிட்டமானது சாவகச் சேரியைப் பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான ஒளிஅரசியின் வாசகர் **திரு.திருமதி சர்வானந்தன்** குடும்பத்தினரால் மீசாலையைச் சேர்ந்தவரும் தற்போது யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலய மாணவியுமான விக்னராசா கனிநிலா என்பவருக்கு வழங்கப்படுகின்றது.

இம்மாணவியின் தந்தையார் கடந்த யுத்தத்தில் காணாமல் போனோர் பட்டியலில் இணைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு : E-mail : oliarazi33@gmail.com, 0114320695 - 0714 273035

மாற்றத்தின் அடிப்படையாக இரு

தம்மண்ண செட்டியார் வழங்கும்



புதிய தொடர்
20 பகுதிகள்

மனங்களின் வகை
இரண்டல்ல மூன்றே!
என வலியுறுத்தும்
" மூன்று மனங்கள் எனும்"
பாகம் 1 அடுத்த இதழில்
வெளிவரும்

# மனோவசியம் என்னும் மனோசக்தியின் இரகசியங்கள்

இறைவன் மனிதனைப் படைக்கும்போதே அவனிடம் சகலவிதமான சக்திகளையும் வைத்தே படைத்திருக்கிறான். ஆனால், நாம் நம்மிடம் இருக்கும் மகாசக்திகளைப் பற்றித் தெரியாமலும், அவற்றின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றை எப்படி செயற்படுத்துவது என்று தெரியாததினாலும் வாழ்க்கையில் பல கஷ்டநஷ்டங்களையும், சிரமங்களையும் அனுபவித்து வருகிறோம்.

மனிதன் படும் துன்பங்களுக்கும், கரை சேரமுடியாமல் சம்சார சாகரத்தில் உழன்று பலனற்று பல பிறவிகளை எடுத்துக்கொண்டிருக்கவும் காரணம், அவன் மனதில் எழும் எண்ணங்களைத் 'தன்னுடையதாகக்' கருதிச் செயற்படுவதுதான். அதனால்தான் 'மனம் போன போக்கெல்லாம் போவேண்டாம்' என்று பெரியோர்கள் சொன்னார்கள். கர்மம் செயற்பட - துன்பங்கள் வலுப்பட மனம்போல் மனிதன் செயற்படுவதுதான் காரணம்.

இறைவன் நம் உள் மனம் மூலமாக இயங்கி, நாம் பிறந்ததுமுதல் இறக்கும்வரை நம்மைக் காப்பாற்றி நம் உடம்பை இயக்கிக்கொண்டு இருக்கிறான். உண்மையை உணர்ந்துகொண்டால் - நம்மிடம் உள்ள சக்திகளை எப்படி உபயோகிப்பது எனவும் தெரிந்துகொண்டால் நாம் நிச்சயம் சுகபோக வாழ்வு வாழலாம்.

நமது சக்திகளால் நாம் நன்மை அடைவதுடன், பிறருக்கும் நன்மையைச் செய்யலாம். நம்மிடம் மறைந்திருக்கும் மகாசக்திகளை உபயோகித்து பலனடையும் வழிமுறைகளையும், வாழ்க்கையில் நமக்கு நாமே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் எவை என்பதையும் இனி பார்ப்போம்.

நமக்கு மனோதிடத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக கீழே கொடுத்துள்ள திடசங்கல்ப வாச கங்களை - அதாவது, தன்னம்பிக்கை மந்திரத்தை முதலில் மனப்பாடம் செய்து மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

**தன்னம்பிக்கை மந்திரம்**

*"சகல அறிவுகளுக்கும் ஊற்றாவது என் உள் மனமே. என்னையும் எனது சரீரத்தில் உள்ள மனோ சக்திகள் எல்லாவற்றையும் இறைவன் அருளால் ஆண்டு நடத்துவது என் ஆழ்மனமே. தெய்வம் என்னிடத்தில் உள்ளது. அந்தத் தெய்வம் அபார சக்தியை எனக்குக் கொடுத்திருக்கிறது. நான் நினைத்ததை முடிக்கும் வல்லமை என் உள்மனதுக்கு உண்டு. என்னால் முடியாதது என்று ஒன்றுமே இல்லை. நான் செய்வேன். நான் செய்வேன். என்னால் எதையும் செய்து முடிக்கமுடியும். என் சக்தி அபாரமானது. என் அபாரமான சக்தியால் நான் நினைத்த காரியம் எவ்விதத்திலும் கைகூடும். தெய்வம் என்னில் - நான் அதனில். ஆகவே, அண்டசராசரங்களில் உள்ள சக்திகளின் ஆற்றல்கள் அனைத்தும் என்னுள் பாய்ந்து பலன் தருவதால் என்னால் எதையும் செய்துமுடிக்க முடியும். நான் செய்வேன். முடியும், முடியும். ஓம்."*

இந்தத் திடமான வாசகத்தை மன உறுதியுடனும், உணர்வுடனும் தினசரி பல முறை மனதில் சொல்லி மனப்பாடம் செய்துகொள்ளுங்கள். எந்தக் காரியத்தை நாம் செயற்படுத்த ஆரம்பிக்கும்போதும் முதலில் இந்தத் திடசங்கற்பத்தை ஒரு முறை சொல்லிவிட்டு ஆரம்பித்தால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி யடையலாம்.

மாற்றத்தின் அடிப்படையாக இரு

கற்க கசடற

ஆரம்பம் - 1929

கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# தங்க மங்கை தனுசிகா



கிளிநொச்சியின் இன்னொரு அடையாளம்

அண்மையில் இலங்கையின் தேசிய மேசைப்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலையில் இடம்பெற்றது. இப்போட்டியில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த பதினொரு போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இறுதிப்போட்டி கிளிநொச்சிக்கும் கொழும்பிற்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் யாரும் எதிர்பாராத வகையில் போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திவந்தார் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவி பாலகிருஸ்ணன் தனுசிகா. போட்டியின் நிறைவில் 2016ம் ஆண்டுக்கான தேசிய மேசைப்பந்தாட்டப் போட்டியின் வெற்றியைத் தனதாக்கி தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார் தனுசிகா.

பன்னிரண்டு வயது பிரிவில் தேசிய மட்டத்தில் சாதனை புரிந்த இம்மாணவி உதயநகர் கிழக்கைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் விஜயலக்ஸ்மி ஆகியோரின் புதல்வியாவார். இவரது தகப்பனார் சிறுவியாபாரம் செய்பவர் எனவும் தாயார் ஒரு மாற்றுவலுவுடையவர் எனவும் தெரிவித்துள்ள தனுசிகா மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எஸ்.குமார், பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர் வினோகாந் ஆகிய இருவருமே தனது வெற்றிக்கான பயிற்சியை சிறப்புற வழங்கியவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக மேசைப்பந்துப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கம் பெற்ற முதல் மாணவியான தனுசிகா தனக்கும் தனது குடும்பத்திற்கும் தனது பாடசாலைக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்து கிளிநொச்சியின் தங்க மகளாக தனது பெயரைப் பொறித்துள்ளார்.

அண்மைக்காலங்கில் வடபகுதி மாணவர்கள் விளையாட்டுத்துறைகளில் சாதனைகள் புரிந்து வருவது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். இவர்களுக்கான தேவைகள் இன்னும் அதிகமாக பூரணப்படுத்தப்பட்டால் அதாவது அவர்களுக்கான விசேட உபகரணங்கள், விசேட பயிற்சிகள் என்பவை அப்பாடசாலைகளிலேயே வழங்கப்பட்டால் இச்சாதனைகள் மேலும் அதிகரிக்கலாம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் பதிவிடுகின்றோம்.

**கிளிநொச்சியின் மற்றொரு சாதனை மாணவியாக தனுசிகா மிளிர்கின்றாள்**

தொகுப்பு
கோபிகை

be bold for change
மார்ச் 08



# கவிதை எழுதுபவர்கள் எல்லோரும் கவிஞர்களா ?

*வி. ருக்குமணன், நெடுந்தீவு*

❓ கவிதை எழுதுபவர்கள் எல்லோரும் கவிஞர்களா அம்மு??

✓ அடுப்பு ஊதுபவர்கள் எல்லோரும் சமையல்காரர்களா ருக்குமணன்?

---

*பிரகாஸ், ஹட்டன்*

❓ பெண்கள் பேஸ்புக் பயன்படுத்துவது சரியா?

✓ சமூக வலைத்தளங்களை நன்மை கருதி மட்டும் பயன்படுத்தினால் யார் வேண்டுமென்றாலும் பயன்படுத்தலாம்.

---

*மீரா, குடத்தனை*

❓ எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கச் சுலபமான வழி சொல்லுங்க அம்மு?

✓ மகிழ்ச்சி என்பதும் ஒரு மாயை. அந்த மாயையை எந்தக் கேள்வியும் கேட்காமல் அனுபவிக்க வேண்டும். அதாவது, 'நான் உண்மையில் சந்தோஷமாக இருக்கிறேனா? என்று உங்களைப் பார்த்து நீங்களே கேள்வி கேட்டுக்கொண்டால்... போச்சு!

---

*அபிராமி கிளிநொச்சி*

❓ காதலைப் பற்றி ஒரு தத்துவம் சொல்லுங்க அம்மு?

✓ முட்டாளுக்குப் பிடிக்கும் ஞானம். ஞானிகளுக்கு ஏற்படும் முட்டாள்தனம்!

---

*கயானா- லுனுகல*

❓ அம்மு. அறிவுக்குத் தந்தை யார்?

✓ தந்தை அனுபவம் தாய் திருமதி ஞாபகம்!

*யாதவன் - மன்னார்*

❓ ''கண்ணதாசன் - வைரமுத்து... ஒப்பிடுங்க அம்மு?

✓ ''சின்ன வயசுல இருந்தே நான் வியந்து பார்த்த மகா கவிஞன் கண்ணதாசன். பாரதிராஜாவின் முதல் படமான '16 வயதினிலே படத்தில் 'ஆட்டுக் குட்டி முட்டையிட்டுனு இறவாப் புகழ்கொண்ட பாடல் கொடுத்தவர். தமிழ் சினிமாவின் மிகச் சுமாரான பல படங்களைக்கூடத் தன் பாடல் வரிகளால் வரலாற்றில் இடம் பிடிக்கவைத்த பிறவிக் கவிஞன்... கவியரசர்!

அவர் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்ப வந்தவர் மண்ணின் மகாகவி வைரமுத்து. பாரதிராஜாவின் மண் சார்ந்த படங்களுக்குத் தனது வைர வரிகளால் உயிரூட்டியவர் வைரமுத்து. பாரதிராஜா விதை போட்டார். இன்று விருட்சமாக வளர்ந்து நிற்கிறார் வைரமுத்து.

இரண்டு பேருமே தமிழ்த் தாயின் அற்புதமான தவப்புதல்வர்கள்!''

---

*சுரேக்கா - புற்றளை*

❓ மனசில சம்மட்டியால அடிக்கிறமாதிரி நச் என்று ஒரு கவிதை சொல்லுங்க பார்க்கலாம் அம்மு?

✓ சிகரெட்டை
விடச்சொல்லி
நச்சரித்தான்
நண்பன்...
விட்டுவிட்டேன்
நண்பனை

இது தமாசாக பாரதிராஜா கூறிய கவிதை.

குறிப்பு - வாசகர்களே! உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்
அல்லது
Oli Arazi என்ற முகநூலில் பதிவிடுங்கள்.

வாழ்வின் அர்த்தங்கள்

வணக்கம் வாசகர்களே!!!

**மீண்டும் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் இந்த தொடரினூடாக நான் மனித வாழ்வில் இசையினுடைய, முக்கியத்துவத்தை பற்றியும் அது எமது வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவுகின்ற விதத்தைப் பற்றியும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.**



# வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி!

அத்தியாயம் 3

தேய்ந்த நிலவு திரும்ப வளரும் மந்திரம் சங்கீதம் என்பதற்கு அமைய கற்றவர்கள், கல்வி அறிவு இல்லாத பாமரர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என அனைத்தையுமே அடக்கி ஆளுகின்ற சக்தி இசைதான். இசையினுடைய இத்தகைய பங்களிப்பினை இன்றைய விஞ்ஞான ஆய்வாளர்கள் கூட உறுதிப்படுத்திக் கூறி இருக்கின்றார்கள். இதற்கு உதாரணமாக தாவரங்களினை எடுத்துகூறலாம் .நாள் ஒன்றுக்கு குறைந்தது இருமணி நேரமாவது இசையினைக் கேட்ட தாவரங்களின் முதலுருப்பகுதியானது அதிகளவு வளர்ச்சியையும் அசைவினையும் காட்டுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விஞ்ஞான ஆய்வுகளைஎல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு எமது சைவசமயம் கூறுகின்ற நம்பிக்கைகளையும் புராணக் கதைகளையும் வைத்து நோக்கினால் அங்கும் இசை உயர்வாகவே சொல்லப்பட்டிருப்பதனை காண முடிகிறது. குழல் ஊதுகின்ற மாயக்கண்ணன் கோகுலத்துப் பசுக்களை மேய விட்டு மாலை நேரமானதும் அவைகளை திரும்ப அழைப்பதற்காக என்ன செய்வான் என்று எமது புராணக் கதைகள் கூறுகின்றன. புல்லாங்குழலை எடுத்து இனிமையான கானத்தினை அவன் ஊதுகின்ற நேரம் அந்த இசைக்கு கட்டுப்பட்டு பசுக்கள் எல்லாம் அவனிடத்தில் வந்து சேர்ந்து விடும் என்பது நம்பிக்கை.

இதை விட இராவணனுடைய கதையினை கூறலாம். இராவணன் சிவபெருமானுக்கு தன் மேல் ஏற்பட்ட கோபத்தினை தணிப்பதற்காக பாடல் பாடி அவரை குளிர்வித்தான் என்பது இன்னொரு கதை, இப்படியெல்லாம் மதங்களினூடாக இசையின் முக்கியத்துவமானது காட்டடப்படுகின்றது.

இவ்வாறாக புராணக் கதைகளிலும் முக்கியம் பெறும் இசை மனித வாழ்க்கையில் முக்கியம் பெறாமல் போய்விடுமா??? நிச்சயமாக இல்லை. மனிதருடைய வாழ்விலும் இன்றைய காலப் பொழுதுகளில் இசை முக்கிய பங்களிப்பை வழங்கி

வருகிறது. உடல் மற்றும் உள சம்மந்தமான ஆரோக்கிய விடயங்களில் மொத்தமாக சொல்லப் போனால் மனிதனை முன்னேற்றப் பாதையில் உயர்த்தி அவனுடைய ஆயுளை நீடிக்க செய்வதில் இசை பெரும் பணி செய்கிறது. இன்று உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளிலும் வாசிப்புச் சிகிச்சையினை போன்றே இசை சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இசைச் சிகிச்சையானது குறைந்தளவு ஆற்றல் கொண்ட உளவிருத்தி குறைந்த சிறுவர்களின் கல்விக்கு பெரும் உதவியாக உள்ளது. எழுத்து, சொல், இசை என மூன்று விதமாகவும் கல்வியினை வழங்குகின்ற போது அவர்கள் வேகமாக கல்விச் செயற்பாட்டிற்குள் நுழையக் கூடியதாக உள்ளது.

இவர்களை விட நீரிழிவு நோயாளர்கள், மன நோயாளர்கள், மது மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து விலக நினைத்தும் விலக முடியாது தவிப்பவர்கள் ஆகிய அனைத்து தரப்பினருக்கும் இந்த இசை சிகிச்சையானது பெரும் பங்கு நல்குகிறது. உண்மையிலேயே எந்த அளவு கொடிய மனிதரையும் மென் மனம் கொண்டவளாக மாற்றுகின்ற சக்தி இசைக்கு உண்டு, இதற்கு எடுத்துக்காட்டாக முடத்தாமக்கண்ணியரால் பாடப்பட்ட பாலை நிலத்திற்குரிய பாலை பண்பாட்டினை இங்கு குறிப்பிடலாம்.

எழுதுவது:
பாலாஜினி – பளை

**ஆறலை கள்வர் படை விட அருளின்**
**மாறுதலை பெறர்க்கும் மருவின பாலை.**

பாலை நிலத்தில் வாழ்கின்ற மனிதர்கள் எல்லோரும் சூறையாடி பிறர் பொருட்களை கவர்ந்து அதன் மூலம் வாழ்கின்றவர்கள். இரக்கம் என்பதே இல்லாத கொடியவர்கள், ஆனால் அத்தகைய கொடியவர்களை கூட பாலைப்பண் ஆனது மாற்றிவிடும் என்று சொல்லிச் செல்கிறது. அந்தப் பாடல். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இசையானது இன்று நவீன தொழிநுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினால் அதனுடைய தன்மை கெட்டு அழிந்து போகிறது என்பது குறிப்பிடத்தக்க இன்னொரு விடயமாகும். அது ஒருபுறமிருக்க, நம்மில் எத்தனை பேர்தான் எம்மிடமுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இசையை பயன்படுத்துகிறோம் என்பது இன்னொரு கேள்வி. இன்று சாப்பிட கூட நேரமில்லாத நாம் அவசரமாக ஓடிக் கொண்டிருக்கிறோம். எமது மனம் எப்போதும் ஒரு நிலையில் இருப்பதே இல்லை, மாறிமாறி அது அலைபாய்ந்து கொண்டே இருக்கின்றது. அத்துடன் எப்போதும் அது ஏதாவது அழுத்தத்திற்கு உட்பட்டுக் கொண்டே இருக்கின்றது.


இன்றைய காலப் பகுதியில் உங்களில் எத்தனையோ பேர் எத்தனையோ விதமான மன அழுத்தங்களுக்கு ஆளாகி அதிலிருந்து விடுபட முடியாது தவித்துக் கொண்டிருப்பீர்கள். அத்தனை பேருக்கும் இருக்கிறது அருமருந்தான இசை, ஆனால் யாருமே அதை ஒரு சிகிச்சையாக கேட்பதில்லை. உண்மையாகவே நாள் ஒன்றிற்கு இரு மணிநேரமாவது மனதிற்குப் பிடித்த மெல்லிசையை கேளுங்கள். இப்படியாக தினம் செய்து வந்தீர்களாயின் உங்களை அறியாமலே உங்கள் நடை உடை பாவனையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். இசையானது உங்கள் சிந்தனையை அதிகரிக்கச் செய்யும்.

இதுவரை காலமும் ஒரு குறிப்பிட்ட திசையிலே சிந்தித்து வந்த உங்களின் எண்ணமும் நோக்கமும் மாற்றமடையும். பல தரப்பட்ட வழிகளில் உங்கள் சிந்தனை விரிவடையும். இசையானது உங்கள் மனதிலே நேர் மறையான எண்ணக் கருக்களை தோற்றுவிக்கும். இந்த நேர் மறையான எண்ணங்கள் நீங்கள் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு உதவும். உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ இலட்சியங்கள் நியைவேறாது இருக்கும், அவற்றை முயற்சித்துப்பாருங்கள். இசையோடு முயற்சியுங்கள். அக்கனவு நிச்சயம் நிறைவேறும். இது ஒன்றும் வாய் வார்த்தை அல்ல, உண்மையிலே உணர்ந்து அனுபவம் வாய்ந்தவர்களால் கூறப்பட்டது.

எனவே எல்லோருமே இன்றிலிருந்து உங்கள் முயற்சிகளை இசையுடன் மேற்கொள்ளுங்கள். பிறந்திருக்கும் புதிய வருடத்தில் இசையை கேளுங்கள் அதனுடன் வெல்லுங்கள் வாழ்க்கையை...

தொடரும்...

**சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்**
**ஆகாயம் பூக்கள் தூவும் காலம்**



# ஆண் பெண் உளவியல் உண்மைகள்

**எ**ன் திருமணத்திற்குப் பிறகு என் கணவர் எனக்கு அளித்த முதல் பரிசு ஒரு புத்தகம். அது **MEN ARE FROM MARS; WOMEN ARE FROM VENUS** அதைப் படிக்கும் போது கிடைத்த தெளிவு வாழ்க்கைக்குப் பல நேரங்களில் உதவியிருக்கிறது. வெகுநாள் கழித்து இப்போது அதே போன்ற இன்னும் ஒரு புத்தகம் பரிசாக அல்ல எதேச்சையாகக் கிடைத்திருக்கிறது. அது **WHY MEN DONT LISTEN WOMEN CANT READ MAPS.** மிக அருமை. என்னால் இந்தப் புத்தகத்தைக் கீழே வைக்கவே முடியவில்லை. ஆனாலும் அதில் என் கருத்தையும் இணைத்து ஒரு விமர்சனமாக எழுதலாம் என்ற முயற்சி இது.

ஆண்கள் பெண்கள் இருவரும் வெவ்வேறு, ''யார் சிறந்தவர்?'' என்ற கேள்வியை நோக்கி ஓடுவதை விட இருவரும் வெவ்வேறு என்பதில் தெளிவு மிக முக்கியம் என்றே தோன்றுகிறது. இருவரும் சமம், எங்களாலும் எல்லாம் செய்ய முடியும் என்ற வாதத்தை விட இருவரிடமும் உள்ள அறிவையும், திறமையையும் ஒரு சேரப் பயன்படுத்தி சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதே சிறந்தது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து.

நம்முடைய உடல் வேறுபாடு சில வேலைகளை எளிதாகவும் கடுமையாகவும் உணரச் செய்கிறது. ஆண்கள் பொதுவாகவே உடல் வலிமை அதிகம் உடையவர்கள். ஒரு அறையில் ஆண், பெண் இருவரையும் சரிசமமாக நிரப்பினால் அதில் ஆண்கள் ஏழு சதவிகிதம் உயரமாகவும், எட்டு சதவிகிதம் கனமாகவும் இருப்பார்கள். ஆனால் அந்த அறையில் அதிக உயரமும் கனமும் கொண்டது ஒரு பெண்ணாகக்கூட இருக்கலாம். மொத்தமாகப் பார்த்தால் ஆண்களே அதிகம். எனவே எங்கள் காரில் சக்கரம் பழுதுபட்டால் என் கணவர் அதை மாற்றுவது எளிது. அதை விடுத்து என்னாலும் முடியும் என்று நாக்குத் தள்ள அதைச்

செய்துவிட்டு பின் இரண்டு நாட்கள் எழ முடியாமல் படுத்துக் கிடப்பது முட்டாள்த்தனம் அல்லவா?

ஆண்கள் பெரும்பாலும் நேர்பார்வை கொண்டவர்கள். வேட்டைக்காரர்கள்தானே. ஆனால் பெண்கள் விசாலப் பார்வை கொண்டவர்கள். இருவரின் வேறுபாடும் அறிவியல் சார்ந்த உண்மை. அதை உணர்ந்தால் பாதிக்கும் மேல் பிரச்சனைகளை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். பெண்களின் பார்வை குறைந்தது நாற்பத்தைந்து டிகிரி கோணத்தைத் தெளிவாக பார்க்க முடியும். அதிகமாகப் பெண்கள் நூற்று எண்பது டிகிரி கோணத்தில் எல்லாவற்றையும் பார்க்க முடியும். ஆண்களால் நேரே உள்ளதை மட்டுமே தெளிவாகப் பார்க்க முடியும்.

பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு உதவ முடியவில்லை. காரணம் அவர்களால் இபோதைய சூழ்நிலைகளை முழுதாகக் கிரகித்து அதற்கு முடிவைச் சொல்ல முடியவில்லை. ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி அறுபதுகளுக்குப் பிறகு பிறந்தவர்களினுடையதும் அதற்கு முந்தையவர்களின் பிரச்சனையும், யோசனையும் முற்றிலும் மாறுபட்டவை. இப்போது இருப்பவர்கள் சந்திக்கும் பிரச்சனை மாற்றம் நடைபெறுகிற காலத்தில் வரும் புதுப் புது பிரச்சனைகள். இதற்குப் பதில் வரலாற்றில் இல்லை. நாம்தான் தேடி வரலாறு எழுத வேண்டும். மிகக் கவனமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

அது நம் பிந்தைய தலைமுறைகளுக்குக் கண்டிப்பாக உதவியாக இருக்கவேண்டும். அதனால் ஒன்றுக்கு இரண்டு முறை படித்துப் பார்த்து நமக்கு நாமே பரீட்சித்துப் பின் அதைப் பதிவு செய்ய வேண்டும்.

ஆண்களால் பெரும்பாலும் பொருட்களைக் கண்டிபிடிக்கமுடிவதிலை. காரணம் அவர்கள் ஆண்கள் என்பது மட்டுமே. எல்லாருடைய வீட்டிலும் ஆண்கள் சாக்ஸைத் தேடுவதும் முடிவில் பெண்கள் எடுத்துக் கொடுப்பதும் அதற்கு ஆதாரம். முடியாததைச் செய்ய முயலும் போது ஒரு எரிச்சல் வரத்தானே செய்யும். அதற்குப் பதிலாக என்னுடைய முடிந்தமுடியாத உன்னுடைய முடிந்தமுடியாதவற்றைப் பிரித்து இருவரும் செய்தால் இருவருக்குமே அது லாபம்தானே.

என்னைப் பொறுத்தவரை எனக்கு பேருந்து ஓட்டுவதை விடக் கணக்குப் பார்ப்பது எளிது. அதை நான் செய்கிறேன். உனக்கு எது தானாக வருகிறதோ அதை நீ பார். ஆண், பெண் இருவரும் சேர்ந்து செய்யும் போது எல்லாம் எளிதே. புரிதல் மட்டுமே முக்கியம். அது மிகக் கடினம். ஆனால் அதற்காகச் செலவிடும் ஒவ்வொரு நொடியும் மிக முக்கியமான முதலீடு.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நடந்த ஆய்வில் பெண்கள் அதிகம் குழந்தைகளின் உணர்வுகளை புரிந்துகொள்கிறனர் என்று நிரூபணம் ஆகியுள்ளது. அவர்கள் அந்த அழுகையை மட்டும் வைத்து எதற்காக அழுகிறது என்பதைப் பார்க்காமலே கண்டுபிடித்துவிட்டனர். ஆனால் பத்து சதவிகிதம் ஆண்களால் கூட அது முடியவில்லை. எனவே, பெண்கள் மட்டும் தான் அம்மாவா? ஆண்கள் என்ன சும்மாவா? என்று பிதற்றாமல் குழந்தைகளின் நலன் கருதியும் அவர்கள் எதிர்காலம் கருதியும் பெண்களே வளர்ப்பில் அதிகப் பங்கு வகிப்பதே அடுத்த தலைமுறைக்கு நல்லது.

எத்தனையோ பெண்கள் ஆட்டோ ஓட்டுகின்றனர். இன்னும் அதிகமாகக் கடினமான வேலைகளைச் செய்கின்றனர். அதில் ஒன்றும் தவறே இல்லை. ஆனால் அந்தப் பெண்ணிடம், அதைவிட அதிகமாக பணம் தருகிறோம். நீங்கள் அதைவிட எளிமையான உங்களால் முடிகிற வேலையைச் செய்யுங்கள் என்றால் அந்தப் பெண்ணின் பதில் என்னவாக இருக்கும்? என்பதே என் கேள்வியாகயிருக்கிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்காகக் கஷ்டப்படும் பெண்களை அவர்களின் கஷ்டங்களை முழுமையாக புரிந்து கொண்டோமா நம்மைப் போல் சரிசமம் பேசும் அறிவாளிகள்? போட்டி போடுவதை விடப் புரிந்துகொள்வதே வெற்றி. எங்களால் செய்ய முடிந்ததை எல்லாம் உங்களால் செய்ய முடியுமா? என்று கேட்கும் ஆண் எவ்வளவு முட்டாளோ அதே அளவு எங்களாலும் எல்லாம் செய்ய முடியும் என்பதைச் சொல்லும் பெண்ணும் முட்டாளே.

நன்றி இணையம்



நட்சத்திர இல்லக்கரசி

# ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் தலைவி


## சிகாமணி ஹாஜியானி ஆமீனா முஸ்தபா

ஜனாதிபதி சட்டத்தரணியின் பாரியார்-அரசாங்க அமைச்சரின் அன்னை மட்டுமல்ல பல சங்கங்களை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் தலைவி தனது சமூக சேவைக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் கரங்களால் சிகாமணி என்ற சிறப்புப்பட்டத்தையும் பெற்றவர். இத்தனைக்கும் எவ்வித ஆணவமும் கொள்ளாதவர் அனைவருடனும் அன்போடு பழகுபவர். அவர் தான் சிகாமணி ஹாஜியானி ஆமீனா முஸ்தபா. இவரே எமது சர்வதேச மகளிர் தின ஒளி அரசி சிறப்பிதழின் நட்சத்திர இல்லத்தரசியாகவும் மகுடம் சூடிக்கொள்பவராவார்..

இனி அவரது கருத்துக்களை சுவைப்போமா?

காலியைச் சேர்ந்தவரும் பிரபல கம்பனி ஒன்றின் உரிமையாளருமான அல்ஹாஜ் மர்ஹும் ஹாஸிம் ஜிப்ரி சித்தி கதீஜா தம்பதிகளின் இரண்டாவது மகளாக கொழும்பு பம்பலப்பிட்டியில் பிறந்த நான் கொழும்பு -7 இல் அமைந்துள்ள மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். உயர்தரப்பரீட்சையிலும் சித்தியடைந்தேன். பாகிஸ்தான் சென்று மருத்துவத்துறையில் படித்து ஒரு டாக்டராக ஆசைப்பட்டேன். ஆனால் எனது பெற்றோர் என்னைத் திருமணம் முடித்துக் கொடுக்க ஆசைப்பட்டனர். அதற்கிணங்க 1966 ஆம் ஆண்டு கண்டியைச்சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவை வாழ்க்கைத்துணைவராக ஏற்றேன். எமக்கு அன்புக்கொரு மகளும் ஆசைக்கொரு மகனும் இருக்கின்றனர். எமது மகள் தற்சமயம் லண்டனில் பாரிஸ்டராக இருக்கிறார் மகன் பைசல் முஸ்தபா தற்போதைய அமைச்சரவையின் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராக இருக்கிறார்.

திருமணமான பின்னர் நான் எனது சகோதரியின் ஒத்துழைப்புடன் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து அதன் உரிமையாளராக செயற்பட்டேன். சுமார் முப்பது பெண்களுக்கு எனது தொழிற் சாலையில் வேலை வாய்ப்பினை வழங்கினேன். இவர்கள் மூலம் சட்னி, ஜாம் போன்ற பொருட்களை தயாரித்து பக்கற்றில் அடைத்து உள்நாட்டிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு விற்பனை செய்தோம். அது மாத்திரமன்றி இந்தப் பொருட்களை ஜப்பான், இங்கிலாந்து, சவுதி அரேபியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடு களுக்கும் ஏற்றுமதி செய்தோம். 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட



வன்செயல்களையடுத்து எனது தொழிற்சாலையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதையடுத்து நான் கவுன்சிலராக பயிற்சி பெற்று அத்துறையில் விரிவுரையாளராக பணி புரிந்தேன்.

**கேள்வி:- சமூக சேவையில் ஈடுபடும் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?**

பதில்:-படித்த பெண்கள் வீட்டில் வீணாக காலம் கழிப்பதை விட சமூகத்துக்கு ஏதாவது செய்தால் நல்லது தானே? என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதற்கிணங்கவே நான் முஸ்லிம் கல்வி வட்டம் என்ற அமைப்பின் செயலாளராகவும் அந்த அமைப்பின் தலைவியாகவும் இருந்து பல சமூக சேவைகளில் ஈடுபட்டேன் . வறிய குடும்பங்களைச்சேர்ந்தவர்கள், விதவையர் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் என நாட்டில் வாழும் பல தரப்பட்ட மக்களுக்கு இதுவரை சுமார் 202 வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளோம்.

**கேள்வி:- எந்தெந்த பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன?**

பதில்:- கொழும்பில் நவகம்புர காலி பேருவளை கஹட்டோவிட்ட ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி எமது முஸ்லிம் கல்வி வட்டத்தின் வேண்டுகோளுக்கிணங்க இளம் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்காக அமைச்சர் பவுஸி அவர்கள் 2002ஆம் ஆண்டில் கொழும்பு மருதானையில் அரச காணி ஒன்றை பெற்றுத்தந்தார். அதன் பயனாக இன்று பலர் இந்த தொழில் பயிற்சி நிலையத்தில் பயன் பெற்று வருகின்றனர். எனவே அமைச்சர் பவுஸிக்கு இவ்வேளை நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்

**கேள்வி:- ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் செயற்பாடுகள் பற்றி குறிப்பிடுங்களேன்?**

பதில் : ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பார்கள் .அதற்கிணங்க எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாடு அகில இலங்கை முஸ்லிம் பெண்கள் சங்கம்- ஸ்ரீலங்கா முஸ்லிம் கல்வி வட்டம்- ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் லீக் உட்பட மேலும் 12 அமைப்புகளை ஒன்றிணைத்துக்கொண்டே சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பின் ஆயுட்கால தலைவியாக தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் இருக்கிறார். சுமார் ஐந்து வருடங்களாக நான் தலைவியாக செயற்படுகிறேன். எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டினால் இரண்டு பிரதான நிலையங்கள இயங்குகின்றன. சபா கவுன்சில் என்ற பெயரில் ஆலோசனை சேவை ஒன்றை நடத்தி வருகிறோம். இந்த சபா கவுன்சில் ஆலோசனை சேவை நிலையத்தினூடாக பல்வேறு மன அழுத்தங்களுக்குள்ளானவர்களுக்கு தேர்ச்சி பெற்ற உளவியலாளர்களினால் பயனுள்ள ஆலோசனைகளை வழங்கி வருகிறோம். குடும்பப்பிரச்சி னைகள் -கணவன் -மனைவி பிரச்சினைகள்-பிள்ளைகளின் பிரச்சினைகள்- இளைஞர்-யுவதிகளின் பிரச்சினைகள் போன்ற அனைத்து பிரச்சினைகளையும் தாமாவே இனங்கண்டு தீரத்துக்கொள்ள சபா கவுன்சில் ஆலோசனை சேவை நிலையத்தினூடாக ஆலோசனை வழங்கி வருகிறோம்

**கேள்வி:-இந்த ஆலோசனை நிலையத்தினூடாக ஆலோசனை பெறுவதாயின் கட்டணங்கள் ஏதும் செலுத்த வேண்டுமா**

பதில்- நிலையப்பரிபாலன செலவு கருதி பதிவுக்கட்டணமாக ஆயிரம் ரூபா மட்டுமே அறவிடுகிறோம். ஏனைய எமது ஆலோசனைகள் அனைத்தும் முற்றிலும் இலவசமாவே வழங்கப்படுகின்றன.அத்தோடு எமது மக்கள் திருமணம் பற்றிய எந்தவொரு தயார் நிலையில் இல்லாமல் திருமண வாழ்வில் நுழைகின்றனர். பின்னர் சிறிய பெரிய பிரச்சினைகளுக்கெல்லாம் காதி நீதி மன்றங்களை நாடுகின்றனர். எனவே திருமணத்துக்கு தயாராகும் இளசுகளுக்கும் புதுமணத்தம்பதிகளுக்கும் திருமணம் பற்றிய துறைசார் அறிஞர்களை கொண்டு பயிற்சிப் பாச றைகளை நடத்தி வருகிறோம். திருமணத்துக்கு முன்னரும் பின்னரும் பிள்ளைகளை பெற்ற பின்னருமான வாழ்க்கை நெறிமுறைகளை உள்ளடக்கியதாகதாவே இப்பயிற்சிப் பாசறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் கலந்துக்கொள்பவர்களின் பெயர் விபரங்கள் இரகசியமாகவே வைக்கப்படும். எனவே எவரும் எவ்வித தயக்கமுமின்றி எமது வகுப்புகளில் கலந்துக் கொள்ளலாம். திருமதி பாத்தியா சஸ்லீன் சலீம் -ஹஸ்னா சகீல் பாயிஸ் ஆகிய இருவரும் இந்த சபா கவுன்சில் ஆலோசனை நிலையத்தின் பொறுப்பாளராக உள்ளனர்.

**கேள்வி:- இந்த சபா கவுன்சில் ஆலோசனை நிலையத்தின் முகவரியை எமது வாசகர்களுக்காக குறிப்பிடுவீர்களா?**

பதில்:-Safa Counselling Centre,31/2,S.D.S.Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.Telephone Number- 0112827717

மாற்றத்தின் அடிப்படையாக இரு

**கேள்வி:- ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டினால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் எவை?**

பதில்:- எமது அமைப்பு சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இத்திணைக்களத்தின் அனுசரனையுடனேயே தையற்கலை வகுப்புகள் சமையல் வகுப்புகள், அழகியற்கலை வகுப்புகள், கணனி வகுப்புகள் ஆங்கில வகுப்புகள், கேக் தயாரித்தல் பேப்பரினால் மலர் அலங்கார வேலைகள் போன்ற வகுப்புகளை நடத்தி வருகிறோம். இந்த வகுப்புகளில் கலந்துக் கொண்டு பயிற்சியை முடிக்கும் மாணவிகளுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் பெறுமதியான சான்றிதழ்களும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. எமது இந்த சகல சமூக சேவைகளும் வெறுமனே முஸ்லிம் பெண்களுக்கென வறையறுக்கப்படவில்லை. தமிழ் சிங்களம் கிறிஸ்தவம் என சகல இன மக்களும் எமது சேவைகளை பெற்று வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்..

**கேள்வி:-உங்கள் கணவர் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் உங்களது மகன் அமைச்ச ராகவும் இருக்கன்றனர், எனவே நீங்களும் வேலைப்பளுமிக்க பெண் என்பதால் சமூக சேவையில் ஈடுபடுவதை இவர்கள் எதிர்ப்பதில்லையா?**

பதில்:- அப்படி எதுவுமில்லை. அவர்களும் சமூக சேவையில் நாட்டமுள்ளவர்கள்தான். அவர்கள் தரும் ஒத்துழைப்பு தான் எனக்கு மென்மேலும் சமூக சேவையில் ஈடுபட உந்து சக்தியாக இருக்கிறது. தினம் தினம் என்னை எமது சங்க தலைமையகத்துக்கு வாகனத்தில் அழைத்து வந்து விடுவதே என் கணவர் தானே, அது மட்டுமல்ல, எனது பிள்ளைகள் மருமக்கள் பேரன்மார் பேத்திமார் எல்லோருமே எனது சமூக சேவைகளுக்கு தங்களாலான இயன்ற உதவிகளையும் ஒத்துழைப்பும் தருகின்றனர். அதுவே எனது இந்த சேவைகளுக்கு உறுதுணையாக உள்ளது.

**கேள்வி:- உங்களது மகன் அமைச்சர், உள்ளூராட்சி தேர்தல் தாமதமாவது குறித்து இன்று அவர் சகல ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாக இருக்கிறார். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்:- என் மகன் அரசியலில் ஈடுபடுவதை நாம் விரும்பவில்லை. எனினும் அவர் அமைச்ச ராகி விட்டார். அவர் அரசியலில் ஈடுபட்டாலும் ஒரு சட்டத்தரணி என்பதால் எத்தகைய நெருக்கடிகளையும் வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.


**கேள்வி:- எமது இளம் சந்ததியினருக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?**

பதில்:- நாம் எதைச்செய்கிறோமோ அது தான் எமக்கு கிடைக்கும். எனவே நாம் எப்போதும் நல்லதையே செய்பவர்களாக இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலாக மார்க்கத்தை மதித்து நடக்க வேண்டும். கல்வியில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். கஷ்டங்களை உணர்ந்து நடக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவ வேண்டும். எதற்கும் தற்பெருமை கூடாது. இவ்வாறு நல்ல பண்புகளுடன் நடந்தால் எதிர்காலம் ஒளிமயமாகும்

**கேள்வி:-இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்:- ஒரு கை தட்டினால் ஓசை வருமா?இல்லையே..எனவே பலரும் சேர்ந்தால் தான் பலம் அதிகம். ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் செயற்பாடுகள் வெறுமனே எனது தனி முயற்சியல்ல, எனக்கு தோள் கொடுப்பவர்கள் பலர் உள்ளனர். குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் ஆயுட்கால தலைவி தேசபந்து ஜெஸீமா இஸ்மாயீல், மாநாட்டின் செயலாளர் திருமதி பரீதா செரிபுத்தீன், பொருளாளர் மிர்சத் சலீம், உதவிச் செயலாளர் திருமதி பாயிஸா ஜெஸீல் உட்பட எமது அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் எனக்கு தத்தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். அதனால் தான் எமது அமைப்பு பலமான சங்கமாக சிறப்பாக இயங்குகிறது. எனவே இந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நேர்காணல்:-
கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்





# மண்புழு வளர்ப்பு

**இன்று உலகளாவிய ரீதியில் இரு வகையான பயிர்ச்செய்கை தொழிநுட்பங்கள் கையாளப்படுகின்றன.**

**1.இரசாயன முறை** **2.சேதன முறை**

இவற்றிலே இரசாயன முறை மூலம் பயிர்ச்செய்கையின் உடனடித்தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்ற போதிலும் இம்முறை நிலைபேறான விவசாய உற்பத்திக்கு (Sustainable Agriculture) காத்திரமான பங்களிப்பினை ஏற்படுத்தமாட்டாது. ஆனால் சேதன முறை மூலம் பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்படும் போது மண்ணின் வளம் பேணப்படுவதுடன் சூழலுக்கு இயைபான தன்மையினையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் சேதனப்பசளை நச்சுத்தன்மையற்றதும் அதன் பயன்பாட்டினால் உயர்ந்த போசனையுள்ள தரமான பயிர் உற்பத்திப்பொருட்களை தோற்றுவிக்கக் கூடியதுமாகும். கால்நடை எரு, கூட்டெரு, மற்றும் உயிர் உரம் போன்றன சேதனப்பசளைகளாகும். குழிமுறை, குவியல்முறை மற்றும் மண்புளு பயன்பாடு போன்ற முறைகள் மூலம் தயாரிக்கப்படுகின்றது.

தற்போதைய காலகட்டத்தில் சுற்றுச்சூழலை பாதிக்கும் நவீன விவசாய நடவடிக்கைகளுக்கு மாற்றாக சேதன விவசாயம் இன்று உலக நாடுகளிடையே பிரபல்யமாகி வருகிறது. இச்சேதன முறை விவசாயத்திற்கு உயிர்ப்பூட்டும் செயற்பாடே மண்புளு வளர்ப்பு (uermi culture) எனப்படுவதாகும். மண்புளு வளர்ப்பு எனப்படுவது மண்வளம் பெருகுவதற்காக மண்புளுக்களை கழிவுப் பொருட்களில் இருந்து வளர்த்தல் ஆகும். மண்புளுக்கள் இயற்கையான உழவுச்சாதனம் என்பதுடன் இயற்கையான உரத்தொழிற்சாலையும் கூட.

நிலத்தின் வளமான பகுதி மேல் மண்ணாகும். மண் அரிப்பின் போது மேல் பகுதி மண் இழக்கப்படுகின்றது. இதைத் தவிர்ப்பதற்கு மண்புளு வளர்ப்பினைப் பயன்படுத்தமுடியும் என்பதுடன் சாதகமான பயிர் நிலமாகவும் மாற்றலாம். நகரங்களிலும் கிராமங்களிலும் ஆண்டுதோறும் பெறப்படும் உயிரியல் குப்பைகள் ஒரே நேரத்தில் பெறப்பட்டு பள்ளமான பகுதிகளில் நிரப்பி மண்புளு வளர்ப்பு நடைமுறைப்படுத்தப்படின் குப்பை அகற்றும் பணியாலும் இயற்கை உர உற்பத்தியாலும் பெருமளவானோர் வேலை வாய்ப்பினைப் பெறுவதுடன் இழக்கப்பட்ட வளமான மேல் மண்ணையும் மீட்கமுடியும்.

மண்புளுக்கள் தமது நிறைக்கு மேல் பத்து பங்கு உணவை (குப்பை) உட்கொண்டு பத்து மடங்கை கழிவாக அகற்றுகிறது. இதுவே இயற்கையான உரமாகும். சிறு விவசாயிகள், வீட்டுத்தோட்டம் செய்வோர் செலவு இல்லாது மண்புளு வளர்க்கலாம். மண்புளு உரத்தில் பயிரிற்குத் தேவையான N, P, K மூலகங்களும் Fe, Mn, Zn, Mg போன்ற நுண்மூலகங்களும் உண்டு. எனவே மண்புளு உரத்தினை பயன்படுத்துவதன் மூலம் மண்வளத்தினைப் பேணிப்பாதுகாப்பதுடன் எம் நாட்டின் வளத்தினையும் பேணுவோமாக.

பசுமைத்தமிழன் ✍

கழுகுப் பார்வை

## பசுமையுடன் வந்த பணப் பயங்கரவாதம்

# ஏமாறாதீர்கள்

இம்மாதம் இங்கு விபரிக்கப்படும் விழிப்புணர்வு, மூலம் பேராசையில் பெரும் நட்டமடைந்து ஏமாற்றப்பட்ட பொது மக்களின் சோக்கதையாகும். ஆம், இங்கு படங்களில் ஆரவாரப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்ட 600இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் ஆகும்.

இவர்களுக்கான ஒரு சந்திப்பு கடந்த மாதம் BMICH இல் ஒரு மண்டபத்தில் நடந்தபோது ஏமாற்றப்பட்ட நண்பர் ஒருவருடன் நானும் சென்றபோது அறிந்துகொண்ட சம்பவங்கள் நெஞ்சை நெகிழ வைத்தது.

ஓசோன் படையில் ஓட்டை, இயற்கை சமநிலை பாதிப்பு, சூழல் மாசுபடல் போன்ற விழிப்புணர்வு அதிகரித்து மரவளர்ப்பு, பயிர் வளர்த்தல் போன்றவற்றின் மூலம் பசுமைப்புரட்சியை ( Green Revolution ) ஏற்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக தேசிய கொள்கை முன்னெடுக்கப்பட்டுவந்த காலத்தில் பசுமையுடன் சேர்ந்து வந்த பாரிய நிதிமோசடி தொடர்பான ஒரு உண்மைக்கதையே இதுவாகும்.

10வருடங்களுக்கு முன்பு இவ்வாறான ஒரு செயற்திட்டத்தை முன்வைத்து அதனை வியாபார நுட்பமாக்கி மக்கள் மனங்களில் இடம்பிடித்ததுதான் TuchWood (ரச்வூட்) என்ற பொதுக்கம்பனி. மலைநாட்டில், பயன்பாடு அற்றிருந்த காணிகளை மிகக்குறைந்த விலையில் பெற்று அதற்குள் மலைவேம்பு, சந்தனம் போன்ற பெறுமதி கூடிய மரங்களை நாட்டி பராமரித்து காணிகளையும், மரங்களையும் சேர்த்தும், தனித்தனியும் பல்வேறுவித திட்டங்களில் வெவ்வேறு காலப்பகுதிக்குரிய முதலீடுகளாக மக்களுக்கு விற்பனை செய்து பசுமையுடன் மக்களின் இலாபத்தையும் அதிகரிப்பதே இதன் நோக்கம்






என கூறப்பட்டிருந்தது.

உதாரணமாக ஒரு ஏக்கர் காணியும் மரங்களும் 3 மில்லியன் ரூபாவிற்கு முதலிட்டால் 10 வருடத்தில் அதன் பெறுமதி இரட்டிப்பு மடங்காகும் என சான்றுப்பத்திரம் மூலம் ஆசையூட்டப்பட்டனர்.

இக்கம்பனியானது தனது திட்டத்தை இலகுவாக தீட்ட அதிக சம்பளத்தடன் பண வசதிகொண்ட இளைஞர், யுவதிகளை அலுவலக பணியாளர்களாக உள்வாங்கி (குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பணவசதி படைத்தவர்கள், வெளிநாட்டுக்காரகளின் பிள்ளைகள், உறவினர்கள்) அவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கி குறுகிய காலத்தில் எல்லா மாவட்டங்களிலும் கிளைகளை நிறுவி அதிக அளவு காணிகளையும், மரங்களையும் முதலீட்டாளர்களுக்கு விற்பனைசெய்து கோடிக்கணக்கான பணத்தை மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்டது.

குறிப்பாக 10லட்சம் ரூபாவுக்கு 150000 தரகும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் உத்தியோகத்தர்களின் உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள் அனைவரும் முதலீடு செய்தனர். கால ஓட்டத்தில் கம்பனியின் செயற்பாடுகள் தடம்புரண்டு கம்பனி முறிவடைந்து அதன் உரிமையாளர்கள், உயர்அதிகாரிகள் அனைவரும் நாட்டைவிட்டு தப்பி ஓடிவிட்டனர். முதலீட்டாளர்கள் அனைவரும் முழிபிதுங்கி நிற்க, தற்போது இப்பிரச்சினை நீதிமன்றம் சென்றுள்ள நிலையில் அதனை விசாரித்த நீதிபதி இக்கம்பனியின் எஞ்சியிருக்கும் சொத்துக்களை விற்பனை செய்து முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க பெறுப்பாக ஒரு சட்டத்தரணியை நியமித்துள்ளார்.

ஆனால் அக்கம்பனியால் சுருட்டப்பட்ட கோடிகளுக்கு ஏற்ற சொத்துமதிப்பு இருக்கவில்லை.

உண்மையில் இவ்வாறான உயர் சலுகைகளுடன் ஒரு முதலீட்டு திட்டம் வந்தால் ஆழமாக சிந்திக்கவேண்டும் என்ற அடிப்படை அறிவைக்கூட பணம் பெருக்கும் ஆசை மறக்கவைத்து விடுகிறது.

தற்போது கம்பனிகளின் உடமைகளை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் அனைவரினதும் முதலீட்டுத்தொகையின் ஒரு பகுதியையாவது வழங்கவே அன்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதிலும் ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களுக்கிடையில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

பலர் காணிகளையும், மரங்களையும் பார்க்காமல் முதலிட்டிருந்ததால் பலருக்கு காணியும், மரங்களும் தற்போது இல்லை. ஏமாற்றப்பட்ட இந்த முதலீட்டாளர்களுக்கு முதலும் அற்ற நிலையே எஞ்சியுள்ளது.

ஆடம்பர வாழ்க்கை, வெளிநாட்டுமோகம், மனம்போன போக்கில் வாழ்க்கை என பணத்தேவை அதிகரிக்க, அதிகரிக்க நாட்டில் மோசடிக்கார கும்பல்களும் அதிகரித்துவரும் இக் காலத்தில், மக்களே! அதிக வருமானம் என்றதும் அதற்காக ஆழமாக சிந்திக்காது காலை வைத்துவிடாதீர்கள். எங்கே அதிக இலாபம் உள்ளதோ அங்கே ஆபத்தும் உள்ளது என்பதை உணர்ந்து ஒரு கழுகுப்பார்வையை வைக்க மறக்காதீர்கள்.

ஜனரஞ்சகன்



என் வளைகாப்பு முடிந்து ஏழாம் மாதம் அம்மாவீட்டிற்குச்சென்று விட்டேன். திருமணத்திற்குப் பிறகு அவரைவிட்டுப் பிரிந்த முதல் பிரிவு. மிகவும் கஷ்டமாகவே இருந்தது. அவருக்கும் அதேபோல் தான் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் வாராவாரம் தவறாமல் என்னைப் பார்க்கவந்தார். ஒரு வாரம் கூடத் தவறவில்லை. மொத்தமாக டிக்கெட் போட்டு விடுவார். வெள்ளிக்கிழமை கிளம்பி சனி அதிகாலை வந்துவிடுவார். திரும்பி ஞாயிற்றுக்கிழமை இரவு கிளம்பி, திங்கள் அதிகாலை அலவலகம் சென்று சேர்ந்து விடுவார். இரண்டு மாதங்கள் ஓடின. டொக்ரர் இன்னும் இரண்டு வாரங்களில் குழந்தை பிறந்துவிடும், அதனால் வாராவாரம் செக்அப்புக்கு வரணும் என்று சொன்னார். உடனே அதை ஃபோன் செய்து கூறிவிட்டேன்.



# ஆண்களின் பிரசவ வலி

அதே வாரம் வியாழன் இரவு லேசாக வயிற்றுவலி வந்தது. நான் அம்மாவிடம் சொன்னேன். ‘அம்மா இன்னும் இரண்டு வாரம் இருக்குத்தானே. இது சூட்டு வலியாத்தான் இருக்கும்’ என்று சொன்னார்கள். எனக்குத் தூக்கம் வரவில்லை. வலி கூடிக்கொண்டே போனது. இரண்டு மணி அளவில் அம்மாவை எழுப்பிச் சொன்னேன். அம்மா, ‘இரு சீரகத்தண்ணியை வச்சுத் தாரேன். குடி பார்ப்போம்’ என்றார்கள். நானும் குடித்து விட்டுச் சிறிது நேரத்தில் தூங்கி விட்டேன். காலை ஆறு மணிக்குப் பனிக்குடம் உடைந்து விட்டது. அம்மா பயந்து போய் அண்ணனுக்கு ஃபோன் செய்தார்கள். வழக்கம் போலவே கிடைக்கவில்லை. எப்போதும் வரும் அதே ஆட்டோக்காரர் வந்தார். அதற்குள் நான் இவருக்கு ஃபோன் செய்து விவரத்தைச் சொன்னவுடன், அவர் பயப்படாமல் ‘ஆஸ்பத்திரிக்குப் போ. நான் உடனே கிளம்பி வந்து விடுகிறேன்’ என்றார்.

ஆஸ்பத்திரியில் நர்ஸ், கொப்பி எங்கே? என்று கேட்டவுடன்தான் எங்களுக்கு அந்த ஞாபகமே வந்தது. அம்மா உடனே, பனிக்குடம் உடைஞ்சிருச்சு. அவசரத்தில

be bold for change
மார்ச் 08

எடுக்காம வந்துட்டோம். நீங்க பாருங்க. நான் போய் எடுத்துட்டு வரேன் என்றவுடன், அந்த நர்ஸ் சரி சரி வாங்க என்று என்னை உள்ளே கூட்டிக் கொண்டு போய்ச் செக் பண்ணி விட்டு வந்து அம்மாவிடம் இன்னைக்கே குழந்தை பிறந்திடும் என்றார். உடனே வழக்கம் போல ஃபோன். அவர் நானும் கிளம்பிட்டேன். சீக்கிரம் வந்துவிடுவேன். பயப்படாதே என்றார். அவர் குரலில் இருந்த பயம் எனக்கு அப்பட்டமாகத் தெரிந்தது.

சிறிது நேரம் கழித்து இனிமாக் குடுக்கனும். வா'' என்று ஒரு நர்ஸ்அழைத்துச் சென்றபோது முதல் பிரசவம் என்பதால், இனிமா என்றால் ஏதோ இனிப்பாகச் சாப்பிடக் கொடுப்பாங்கன்னு நினைச்சுப்போனேன். அப்புறம்தான் தெரிந்தது அந்த உண்மை. அது ரொம்பக் கசக்குமுனு. ஒருவழியா முடிஞ்சு மறுபடி ஃபோன். அவர் பஸ்ல இருக்கேன் என்று சொன்னார்.

அட்மிட் பண்ணியாச்சு. வலிக்க ஆரம்பிச்சாச்சு. திரும்ப ஃ போன். அவர் பஸ் மாறி மாறி வருகிறேன். அப்பத்தான் சீக்கிரம் வர முடியும் என்றார். இரண்டு நர்ஸ்கள் மட்டும் என்னுடன் இருந்தார்கள். வலி ரொம்ப வந்தா மட்டும் கூப்பிடச் சொல்லிவிட்டுச் டொக்ரர் சென்றுவிட்டார். மறுபடி ஃபோன் செய்தேன். அவர், '' சீக்கிரம் வந்துவிடுவேன். பயப்படாதே'' என்றார். அவருக்கும் பயம் கூடியிருந்தது தெரிந்தது. அந்தப் பொறாமை புடிச்ச நர்ஸ், லேபர் வார்டுக்குள்ள ஃபோன்லாம் பேசக்கூடாதும்மா''ன்னு சொல்லி ஃபோனை வாங்கி வைத்துவிட்டார். கொஞ்ச நேரம் ஆக ஆக வலி கூடியது. நானும் நமச்சி வாயா, அம்மையப்பா என்று எல்லாரையும் கூப்பிட்டுக்கொண்டேன், எனக்குத் துணைக்கு. அங்கிருந்த நர்ஸ்களும் டாக்டரும் சுத்தி நின்று கொண்டு, ஏதேதோ சொன்னார்கள். ''எனக்கு வலி தாங்கமுடியவில்லை. எங்க அம்மாவையாவது கூப்பிடுங்க. கடைசியாப் பாத்துக்குறேன்'' என்று அழுதேன். ஒரு வழியா உயிர் போகும் வலிக்குப் பிறகு என் மகள் பிறந்தாள். தையல் போட்டுக் கொண்டே டொக்டரர் உன் வீட்டுக்காரர் நல்ல நிறமானவரா ?! என்றார். நான், என்னை விடக் கொஞ்சம்...'' என்றேன். என் மகளைக் காண்பித்தார்கள். உண்மையாகவே இறக்கை இல்லாத தேவதையாகத் தெரிந்தாள்.

உடனே ஃபோனைக் கேட்டேன். அந்த நர்ஸ் முறைத்துக் கொண்டே ஃபோனைக் கொடுத்தார். அவருக்கு ஃபோன் செய்தேன். குழந்தை பொறந்தாச்சு என்றேன். என்ன சொல்ற? என்றார். பெண்குழந்தை என்றேன். அவர், ஓகே! நான் சீக்கிரம் வந்துவிடுவேன் என்றார் மகிழ்ச்சியோடு. பிறகு வார்டுக்கு மாற்றி விட்டனர். ஒரு மணி அளவில் சாப்பாடு வந்தது. அம்மா ஊட்டிவிட்டார்கள். நன்றாக ஒரு கட்டுக் கட்டி விட்டு நிம்மதியாக ஒரு தூக்கம் போட்டேன். வலி தெரியாமலிருக்க மாத்திரை போட்டதால் அவ்வளவு வலிக்கவில்லை.

மாலை நேரம் ஆகிவிட்டது. எழுந்து திரும்ப ஃபோன் செய்தேன். இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவேன் என்றார். கொஞ்ச நேரம் கழித்து கதவு தட்டப்பட்டது. அது அவர்தான் என்று எனக்கு தோன்றியது. அம்மா போய்க் கதவை திறந்தார்கள். அவர்தான்! வாங்கப்பா, என்று சொல்லிவிட்டு என் அம்மா வெளியே சென்று விட்டார்கள். அவர் என் பக்கத்தில் வந்து, ரொம்பக் கஷ்டப்பட்டியாம்மா? என்ற போது கண்கள் கலங்கியிருந்தன. ஒரு சொட்டுக் கண்ணீர் விழத்தயாராயிருந்தது. அவர் அழுது நான் அதுவரைப் பார்த்ததில்லை. நான் இல்லை என்று சொல்லிக்கொண்டே அவர் கண்களைப் பார்த்தேன். அந்த ஒரு துளி சொல்லியது பெண்களைப் போலவோ அல்லது அதை விடக்கூடவோ ஆண்களும் பிரசவ வழியை அனுபவிக்கத்தான் செய்கிறார்கள். அதுவும் கத்தி அழக்கூட முடியாமல்'' என்று. நான் கேட்டேன், நீங்கள் சாப்பிட்டீங்களா? என்று. அவர், இல்லை'' என்று சொல்லிக் கொண்டே தொட்டிலில் இருந்த எங்கள் மகளருகில் சென்று பார்த்தபோது கொஞ்சியபோது நான் அவர் முகத்தைப் பர்த்தேன். நான் அவளை முதன்முதலில் பார்த்தபோது என்னிடம் இருந்த அதே பூரிப்பு பெருமிதம் அவர் முகத்திலும். அவருடைய அந்தப் புன்னகை சொல்லியது ''அம்மாவும் அப்பாவும் வெறும் உருவத்தினால் மட்டுமே வேறுபடுகின்றனர்!'' என்ற உண்மையை.

நன்றி இணையம்

அரும்புகள் அறிமுகம்


# 2016
# இளம் கலைஞர் விருது
# கஜானன்





தமிழ் இலக்கிய உலகிற்குள் புதியதொரு சிற்பியாக நுழைந்துள்ள கஜானன் இலக்கிய உலகில் தனது கவிதைகள் மூலம் புதிய கருத்துக்களை சமூகத்திற்கு கொண்டு வரும் ஒரு படைப்பாளி. இலக்கியத் துறைக்குள் பிரவேசிப்பவர்களுக்கு இலகுவாக களம் அமைத்துக் கொடுப்பது கவிதைகள் தான். அந்த வகையில் இளம் கவிஞர் கஜானன் புலோப்பளை எனும் இடத்தில் உதித்தவர். இவர் பள்ளிக்காலத்திலிருந்தே பேச்சு, விவாதம், நாடகம், கவிதை போன்ற பல துறைகளில் இளம் நட்சத்திரமாக ஜொலித்து வருகின்றார். சிறு வயது முதல் பெற்றோரின் வழிகாட்டல் இருந்ததினால் இலக்கிய ஆர்வம் கொப்பளிக்க பத்திரிகை சஞ்சிகைகளில் தொடர்ந்தும் எழுதி வருகின்றார். 2015ம் ஆண்டு ''கனவுகளின் புலர்வு'' எனும் கவிதை நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சொற்கணை விவாதப்போட்டியின் நடுவராக செயற்படுபவர். 2016ம் ஆண்டு நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழாவில் வடமாகாண பிரதம செயலரினால் கவிதைத் துறைக்கான இளங்கலைஞர் 2016 விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். இவ்வருடம் வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் எனும் அடுத்த நூலை வெளியிட்டுள்ளார். புதுக்கவிதை வரலாற்றில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி கவிக்கனிகளைப் படைத்து வருகின்றார். இவரது கவிப்பயணம் தொடர்ந்து மேலும் பல விருதுகள் பெற ஒளிஅரசி மனதார வாழ்த்தி நிற்கின்றாள்.








தொகுப்பு கயூரி புவிராசா



பார்ப்போம் பழகுவோம்

be bold for change
மார்ச் 08

# தையற்கலை

அடிப்படை தையல்களின் தொடர்ச்சி


திருமதி சுமித்ரமலர் ராகவன்
(0212261145)




**சென்ற மாத தொடர்ச்சி**

**16. கழுத்திற்கு குறுக்குத் துணி வைத்து உள் மடித்துத் தைத்தல்.**

விரும்பிய கழுத்துத் துணி வைத்துத் தைக்கும் போது குறுக்குத் துணியை நன்றாக விட்டு விஸ்பம் தைக்க வேண்டும்.

மூலைகள் வரும் கழுத்திற்கு மடிப்பு வைக்க வேண்டும்.

மூலைகளில் மாத்திரம் வெட்டுப் போட்டு மறுபுறம் திருப்பி வேண்டிய அளவு மடித்து சோம் தைத்தல் வேண்டும்.

**17. கழுத்துச் சுருக்கு (பிறில்)**

கழுத்தை எந்த வடிவிலும் வெட்டலாம்.

இதற்கு வைக்கும் துணியை கழுத்து வெட்டிய அளவின் இரு மடங்கு நேர்த்துணியை எடுத்து விளிம்பிற்கு அலங்காரக் கட்டு தைக்க வேண்டும்.

பின் அவற்றை சிறு நூலோடித் தைத்து கழுத்தின் விளிம்பிற்கு அளவாகச் சுருக்க வேண்டும்.

சுருக்கிய துணியை கழுத்தில் வைத்து நூலோடிய பின் குறுக்குத் துணியை வைத்து விஸ்பம் தைத்து மறுபுறம் திருப்பி விளிம்பை உருட்டி சோம் தைத்தல் வேண்டும்.

கலை வளர்ப்போம்

பொதுவாக கவிதை எழுதுவதற்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என பல ஊடகங்கள் உள்ளன. ஆனால் 100 பேர் எழுதினால் 10 பேரின் கவிதைகள் மட்டுமே வெளிவரும். ஆனால் இது வேறு மாதிரி. கவிதை எழுதி உணர்வுடன் பாட விரும்புவோர் ஒன்றுகூடி கலந்துரையாடி நேரடியாக உணர்ச்சி ததும்பக் கவி பாடுவதற்கு கொழும்பில் களம் அமைத்து கவித்துறைக்கு பாரிய பங்காற்றி வருகின்றது கொழும்பு வலம்புரி கவிதா வட்டம்.

# கவி பாட களம் வேண்டுமா?



தலைமை

இதுவரை ஏறத்தாழ 34 கவியரங்குகளை பௌர்ணமி தினங்களில் நடாத்தி அதன் நிர்வாகக் குழு, அனைவரினதும் பாராட்டை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் நிர்வாகக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராது கலை வளர்க்கும் பணியாகக் கருதி பொறுப்புடன் இதனை நடத்திவருகின்றமையே கொழும்பு வலம்புரி கவிதாவட்டத்தின் நீட் சிக்கும் சிறப்பிற்கும் காரணமாகும். அந்தவகையில் கடந்த 34 வது கவி அமர்வானது கொழும்பு அல்கிக்மா கல்லூரியில் 10.02.2017 இல் இடம்பெற்றது. இதன்போது 16 கவிஞர்கள் பங்குபற்றி சமூக, பொருளாதார விழிப்புணர்வு சார்ந்த கவிகளை பாடி இருந்தனர். இக் கவியரங்கில் ஒளிஅரசி சார்பாக கவிதை ஒன்று படிக்கப்பட்டு இந்நிகழ்வு சிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கவியரங்கிற்கு மூத்த கலைஞரும் கவிஞருமான திரு.ராதா மேத்தா தலைமை தாங்கினார். இதன்போது எமது கமராவில் அகப்பட்ட காட்சிகள் இங்கே உங்களுக்காக.

நீங்களும் கவி படிக்க விரும்பின் வகவ தலைவர் நஜ்முல் ஹுஸைன் (0714929642) உடன் தொடர்புகொள்ளலாம்.

ஜனதன்



விருந்தினர்கள்



கவி பாடியோர்..



ஸ்ரீ ராம ஜெயம்

# மலையாள மாந்திரீக சக்தி

# WILLPOWER



மாந்திரீக துறையில் 49 வருட காலமாக
நான் மட்டுமே தொடர்ந்து விளம்பரம்
செய்கின்றேன். இது என் சாதனைக்கு ஒரு எடுத்துக்காட்டு.
நம்பி வாருங்கள் நன்மை அடையலாம்.



ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு அருள் சக்தியே! இங்கு அருள் பாலிக்கும் இந்த அபூர்வ அருள் சக்தி கொண்டு எமது ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பிரசன்னமாயிருக்கும் அருள் சித்த சிலைகள் ஸ்ரீ துர்க்கா தேவி, இந்தியாவில் நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சுயம்புலிங்கம், காலபைரவர், நரசிம்மர், விஷ்னு, ராஜராஜேஸ்வரி, காயத்ரி, கிருஸ்ணபரமாத்மா, வெங்கடாசலபதி, அஸ்டலக்ஷ்மி, பத்ரகாளி, தட்சணமூர்த்தி, ஸ்ரீ ஆஞ்சநேயர், முருகப்பெருமான், ஆறுமுகன், நவக்கிரக நாயகி, ஸ்ரீ துர்க்கை அம்மன், வீரமாகாளி, ராக்கம்மாகாளி, சரஸ்வதி, மும்மூர்த்திகள், கருப்பண்ணசாமி, ராகவேந்தர் என அனைத்து தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஜோதிட மாந்திரிக தத்துவ ஞானி, சொல்லின் செல்வன்,
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல, ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

அவரவர் பிரச்சினை, அவரவர் விதிக்கு தக்கவாறு கருமவினை தீர இந்த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அனைத்து தெய்வங்களும் அமர்ந்து இருக்கின்றனர்...

சந்தர்ப்பத்திற்கு தொலைபேசியில் உரையாடி நேரத்தை வீணாக்குவதை விட
ஒரு முடிவெடுத்த பின்பே நேரடியாக வந்து வெற்றியை குவித்துக்கொள்ளாம்.

## என் ஆசீர்வாதத்தால் எண்ணற்ற மக்கள் பெருவாழ்வு பெற்றுள்ளார்கள்

தொடர் தோல்வியா? நீண்டகால நட்பின் பிரிவால் வேதனையா? வெளியில் சொல்ல முடியாத பிரச்சினையா? துன்ப துயரமா? எல்லை மீறிய காதலா? மனவிரக்தியா? சகல பிரச்சினைகளில் இருந்தும் விடுபட்டு வாழ்வில் வெற்றிபெற பேராசிரியர். P.K. சாமி ஐயாவை சந்தியுங்கள்.

எமது ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் மாத கடைசியில் சுமார் 4 மணித்தியாலம் அக்கினி குண்டல பூஜையில் உங்கள் குறை நிறைகளை போக்கிக் கொள்ளலாம். அன்றைய தினம் தானதர்மங்களும் உண்டு.

**தனிக்கோயில் இரண்டு அமைத்து மாந்திரீக உட்சாட்டம் செய்வதென்றால் நான் மட்டுமே.**

தொலைபேசியில் ஆடர் கொடுப்பவர்களுக்கு கொரியர் மூலமாக பார்சல் அனுப்பி வைக்கப்படும்.

- அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம்
- இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
- இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது உறுதி

P.K.Samy Advertising

உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல்
ஒரு எண்ணை அழுத்துங்கள். உங்கள் பிரச்சினை தீரும்.

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
# மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

**தலைமை காரியாலயம் - கொழும்பு**
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

**கிளைக்காரியாலயம் - நுவரெலியா**
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

Airtel மூலம் உங்கள் இராசி பலாபலன்களை இலவசமாக அறிய 2626 தொடர்பு கொண்டு எண் ௨௭ அழுத்தவும்.


S WORLD
வடமாகாணத்தில்
வவுனியாவில்
முதன் முறையாக
9D
Cinema
காட்சிகள்
அத்தோடு
Arcade
விளையாட்டுக்கள்
இல.06, கரப்பன்காடு, வவுனியா
077 9843952